
கல்கி
KALKI
29.7.2001
ரூ. 5.00
"ஆக்ஷன் நடிப்பு
அலுப்புதான்!"

ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ்

வழங்கும்

ஆடிக் கழிவு

GENUINE DISCOUNT SALE



உண்மையான தள்ளுபடி விற்பனை

உயர்தர மில்களில் இருந்து தரமான துணிகளை மொத்தமாக கொள்முதல் செய்து உண்மையான தள்ளுபடி விலையில் விற்பனை செய்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாலிஸ்டர் பூனம் சேலைகள் ரூ.41	ரெடிமேட் சர்ட்டுகள் ரூ.35
ஜென்ட்ஸ் பேண்ட்ஸ் ரூ.90	பிளவுஸ் பிட்டுகள் ரூ.7

பாலிகாட்டன் சேலைகள்	ரூ.85.00
சர்ட்டிங்குகள்	ரூ.12.00
சூட்டிங்குகள்	ரூ.48.00
டி.சர்ட்டுகள்	ரூ.45.00
வேஷ்டிகள்	ரூ.40.00
ஜென்ட்ஸ் ஜட்டிகள்	ரூ. 9.00
சுவர் கடிகாரங்கள்	ரூ.39.00
அலாரம் டைம்பீஸ்கள்	ரூ.25.00

Bata LIBERTY action



வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க உயர்ரக ஷூ மற்றும் பேஷன் காலணிகள் மாடியில் தனிப்பிரிவாக இயங்குகிறது.

காஞ்சிபுரம் முகூர்த்த பட்டுப்புடவை நியாயமான விலையில் கிடைக்கும்.

ஞாயிறு விற்பனை உண்டு.

ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ்

27, ரங்கநாதன் தெரு, (மாம்பலம் ரயில் நிலையம் அருகில்),
தி.நகர், சென்னை - 600 017 ✆4339971, 4334660

• பட்டுப்புடவைகள் • அனைத்து முன்னணி மில்களின் சேலைகள் • சூட்டிங் • சர்ட்டிங் • ரெடிமேட் வகைகள்

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com





"ஒரே ஜாலி... கலாட்டாதான்!..."

மாளவிகாவுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார் மணிரத்னம்! 'அவரது சொந்த ஊர் எது? அ. பெங்களூர், ஆ. சென்னை' என்று 'கோடீஸ்வரன்' சரத்குமார் கேட்டால்... அதற்கு உங்கள் பதில் என்னவாக இருக்கும்? நடிகை மாளவிகாவை மனத்தில் வைத்துக் கொண்டு 'பெங்களூர்' என்று நீங்கள் பதில் சொன்னால் ஸாரி, யூ ஆர் ராங்! இவர் சென்னையைச் சேர்ந்த குட்டியூண்டு மாளவிகா. ரோஸரி மெட்ரிக் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கும் பத்தரை வயது துருதுரு.

"அங்கிள்... அங்கிள்... மணி அங்கிள் ஆஃபீஸ்லே, எனக்கு ஸ்கிரீன் டெஸ்ட் எடுத்தப்போ, அவர் கொடுத்த டயலாக்கை பேசிக் காட்டுறேன்... ப்ளீஸ் கேக்கறீங்களா?" என்று கொஞ்சலாக கெஞ்சி, நம் அனுமதிக்குக் காத்திராமல் வசனம் பேசத் தொடங்குகிறாள் மாளவிக்குட்டி.

"எம் பேர் அமுதா. எனக்குப் பிடிச்ச கலர் ப்ளூ. நான் 'பைஃவ் டி'யில் படிக்கிறேன். நான் பெரியவளா ஆனதும் சிங்கர் ஆகப் போறேன்... இல்லை... இல்லை. ஸ்பேஸ் சயிண்டிஸ்ட் ஆகப்போறேன். 'நாசா'ல வேலை செய்யப்போறேன். வேர்ல்டு ஃபேமஸ் ஆகப்போறேன்.

"எனக்கு ரெண்டு தம்பிங்க இருக்காங்க. வினயன்... அகிலன். (நிஜத்தில் கௌசிக் என்றொரு அண்ணன்... அடிக்கடி சண்டை போட்டாலும் திட்டாத அண்ணன்... அதனால் அண்ணனை ரொம்பப் பிடிக்குமாம்.)

வினயன், அழுக்கன். அகிலன், ஒட்டை வாய், ஆல் இண்டியா ரேடியோ, சன் நியூஸ் எல்லாம். ஆனா இவங்க ரெண்டு பேருக்கும் நான்தான் பாஸ். அம்மா பேர் இந்திரா. அவங்க சன் நியூஸ்ல ரீடரா இருக்காங்க. டெய்லி காத்தால ஏழு மணியிலிருந்து ஒன்பது வரைக்கும் ஒரே அடி, உதை, திட்டுதான். ஆனா அம்மா மட்டும் குட் மூட்ல இருந்தாங்கன்னா, ஒரே கூத்து, ஜாலி, கலாட்டாதான்.''

–தேவைப்படும் இடங்களில் ஏற்றம், இறக்கம், நிறுத்தம் எல்லாம் கொடுத்து சூப்பராய் நடித்தே காட்டிய மாளவிகாவிடம், இந்த வாய்ப்பு எப்படி கிடைத்தது என்று கேட்டோம்.

''டைரக்டர் வசந்த் அங்கிள் எங்க பேமிலி ஃபிரெண்ட். சூப்பரா ஒரு காப்பி குடிச்சு, 'ஹவ் ஆர் யூ'னு கேட்டுட்டுப் போறதுக்காக இங்கே அடிக்கடி வருவார். அப்படித்தான் அம்மாவுக்குத் தெரியாம 'நீ நடிக்கறியா?'னு கேட்டார். எனக்கு ஒரே ஜாலி... 'யெஸ்ஸ்ஸ்'ன்னு சொன்னேன்... ஒரு நாள் திடீர்னு மணிரத்னம் அங்கிள்கிட்டே யிருந்து ஃபோன்கால். டாடி, மம்மி, தாத்தா, பாட்டி எல்லோருக்கும் ஒரே தயக்கம்...

''நான்தான் ஸ்கூல்ல பிரைட் ஸ்டுடண்ட்டா இருக்கேன்ல... அப்புறம் படிப்பு எப்படிக் கெடும்?'னு அடம் பிடிச்சேன். 'அவ ஆர்வத்தைக் கெடுக்க வேணாம்'ன்னு அப்பாகிட்ட அம்மா, ரெக்கமண்ட் செஞ்சு... கடைசிலே க்ரீன் சிக்னல் கிடைச்சுடுச்சு...''

படபடவென்று ஊசிப்பட்டாசு போல பேசும் மாளவிகா, பரதக் கலைஞர் திருமதி மீனாட்சி சித்தரஞ்சன் மாணவி.

''அம்மா, எனக்கு கர்நாட்டிக் மட்டும் தான் கத்துக் கொடுத்தாங்க. எனக்கு நடிப்பு வரும்னு தெரிஞ்சது, பரதநாட்டிய கிளாஸ் போனபிறகுதான். 'உனக்கு, அபிநயம் நல்லா வருதுன்'னு மிஸஸ் சித்தரஞ்சன் ஆண்ட்டி என்கரேஜ் பண்றாங்க'' என்ற மாளவிகா... மணிரத்னத்தின் 'குடை' படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பில் நடித்து முடித்து விட்டதை கதை கதையாய்ச் சொல்கிறாள். ''நான் மணி அங்கிள் படத்துல நடிக்கிறேன்னு தெரிஞ்சதும், ஸ்கூல்லே எல்லோரும் என்னைப் பார்த்து குசுகுசுன்னு பேசறாங்க. எனக்கு ரொம்ப ஜாலியாக இருக்கு'' என்கிறாள்.

'அம்மா மாதிரி நீயும் பெரிய பாடகியாக வரப்போகிறாயா?' என்றால்... ''இல்ல... இல்ல... இப்போதைக்கு இன்ஜினியரா ஆகணும்னு நினைக்கிறேன். அப்புறம் டிடெக்டிவ் ஆகணும்னு ஆசை... எனக்கு அடிக்கடி மனசு மாறிக்கிட்டேயிருக்கும்'' என்று குஷியாய்ச் சொன்ன அந்தக் குட்டிப் பெண், சுதா ரகுநாதனின் மகள்!

சந்திப்பு: **விஷுவல்தாசன்**

''இந்த மாதிரி பொறுப்பற்ற முறையில் மந்திரி பதில் சொல்லியிருக்கக் கூடாது.''

''என்ன விஷயம்?''

''நீதிபதி 'ஏன் எதிர்க்கட்சித் தலைவரை நடு ராத்திரி கைது பண்ணீங்க'ன்னு கேட்டதற்கு, 'வாட்சுல டைம் பார்த்தேன். a.mமா, p.mமான்னு போடலை, அதனால தான்'னு சொல்றாரு.''





''ஏன் மந்திரியோட 'வேண்டுதலை நிறைவேற்றுதல்' கஷ்டம்னு சொல்றீங்க?''

''பின்ன என்னய்யா? ஜெயிச்சு மந்திரி ஆனா, அம்மன் கோயிலுக்கு 'டினோசர்'தரேன்னு வேண்டிக்கிட்டு இருக்காராம்.''


– ஹரி கிருஷ்ணன்

சிவாஜி வாழ்வார்!



மரணத்தால் சிவாஜியின் உடலைத்தான்
கவர்ந்து கொள்ள முடிந்தது.
அவரது சாதனையையும் புகழையும்
என்ன செய்ய முடியும்?

அ.தி.மு.க அமைச்சர்கள் எப்படி



• விளையாட்டும்...

● ஆர். லட்சுமி, மதுரை - 16

? "பிலுமோடி மாதிரி பேசப்படும் அளவுக்கு ராஜ்ய சபாவில் நடந்து கொள்வேன்!'' என்று நடிகர் எஸ்.எஸ். சந்திரன் கூறுகிறாரே..?

! நோ! நோ! சந்திரன். உங்களால் அதை நிச்சயம் சாதிக்க முடியாது! அவர் சூரியன்; நீர் சந்திரன்தான்.



• ... விளையும்!

● வசந்தா காந்த், கருப்பம்புலம்

? தேயிலையை அரசே கொள்முதல் செய்வது நீலகிரி விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக இருக்கும் என்கிறதே த.மா.கா.?

! வரப்பிரசாதம் அல்ல... தமிழனுக்கு 'வரி'ப் பிரசாதம்தான் என்பது பொருளாதார வல்லுனர்களுக்கு இப்போதே புரியும்; பொது மக்களுக்குப் போகப் போகப் புரியும்.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? கிராமம் கிராமமாக 'கருணாநிதி கைது' வீடியோ படம் போட்டுப் பிரசாரத்தில் ஈடுபட தமிழக அரசு முடிவு செய்துள்ளதே...?

! விசாரணை கமிஷன் ஒரு பக்கம். போலீஸ், அரசுத் துறை பிரசாரம் இன்னொரு பக்கம். இது கோயபல்ஸ் கதையைவிட மோசம். அடிப்படை சுதந்தரமான அபிப்பிராய சுதந்தரத்துக்கு உலை வைக்கும் விஷயம்.

● எஸ். சாந்தி, காட்பாடி

? சமீபத்தில் தாங்கள் கேட்டு வியப்புற்ற செய்தி...?

! முஷாரஃப் இந்திய வருகைக்காக ஏழு கோடி ரூபாய் நாம் செலவு செய்துள்ளோம். விழலுக்கு இறைத்த நீர்!

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்

? மாநிலங்கள் அவை உறுப்பினர் பதவி தங்களுக்கு அம்மா போட்ட பிச்சை என்று காமராஜும் கோகுல இந்திராவும் தெரிவித்தது பற்றி...?

! அ.தி.மு.க.வில் ஜெ.வைத் தவிர மற்ற அனைவரும் பிச்சைக்காரர்கள்தான் போலிருக்கிறது.

● ஏ. கருப்பண்ணன், மதுரை - 10

? இனி ரேஷன் கடைகளுக்கு ஞாயிற்றுக்கிழமைக்குப் பதில் வெள்ளிக்கிழமை விடுமுறை என தமிழக அரசு அறிவித்துள்ளது பற்றி..?

! நல்ல விஷயம்தான். இனி அலுவலகத்துக்கு லீவு போட்டுவிட்டு ரேஷன் கடை கியூவில் நிற்க வேண்டாம்.

● ஆர். கர்ணன், நனக்காகுளம் ★

? இன்றைய அ.தி.மு.க. அமைச்சர்கள் எப்படி இருக்கிறார்கள்?

! மனத்தில் பயத்தோடு, கையில் வலையுடன், தி.மு.க. அரசில் முறைகேடுகள் நடந்திருக்கிறதா என்பதைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

• பரிசுகள்...





• ... பலவிதம்!



• காஸ்ட்லி விருந்தினர்!

● எல். கோபால கிருஷ்ணன், வேலூர்-6

? அண்ணல் சொன்னபடி அன்றே காங்கிரஸைக் கலைத்

இருந்தால்..?

• நினைவு...



• ... உண்டா!



! இவ்வளவு கோஷ்டிப் பூசலும் தோன்றியிராது; அ.தி.மு.க.விடம் அவ்வப்போது திட்டும் வாங்க வேண்டி வந்திருக்காது.

● வி.எஸ். கோவிந்தன், மதுரை - 7

? பெரியாரை நினைவு படுத்தும் வண்ணம் எந்த கொள்கையை வீரமணி கடைபிடித்து வருகிறார்...?

! கறுப்பு உடுத்துகிறாரே!

● சா. சொக்கலிங்க ஆதித்தன், ரோஸ்மியா புரம்

? சரத்குமார், எஸ். எஸ். சந்திரன் - இருவரும் மேல்சபை எம்.

● விஜய சங்கரன், சென்னை - 4 ❑

? தன்னால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களை ஒரே மாதத்தில் எந்த காரணமும் சொல்லாமல் மாற்றி, வேறு ஓர் அமைச்சரை நியமிக்க முதல்வருக்கு அதிகாரம் இருக்கும்போது, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட கவர்னரை மத்திய அரசே மாற்றினால் மட்டும், முதல்வரும் அவருடைய கூட்டணியினரும் கூப்பாடு போடுவது ஏன்..?

! அரை நாள் அவகாசத்தில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தவரிடம் நன்றியுணர்வு பெருகாதா?... அடுத்து வரும் ஆளுனர் அதே ஒத்துழைப்பைத் தருவாரா என்ற அச்சமும் இருக்காதா..?

● ஆ. முத்து, வேலூர் - 1

? காதலுக்கு எதிர்ப்பே இல்லாத ஒரு காலம் எதிர்காலத்திலாவது உருவாகுமா..?

! ஐயோ! பயமுறுத்தாதீங்க. அப்புறம்

இருக்கிறார்கள்..?

பி.க்கள் ஆகியுள்ளது பற்றி..?

! கடந்த மக்களைவைத் தேர்தலில் தோற்றதற்கான பரிசு சரத்குமாருக்கு. மேடைகளில் கலைஞரை வசைபாடியதற்கான பரிசு எஸ்.எஸ்.சந்திரனுக்கு.

● டி.ஏ.சி. பிரகாஷ், திருச்செங்கோடு

? ஆண்டிப்பட்டி, புதுக்கோட்டை தேர்தல் அதிகாரிகள் கட்டாயக் காத்திருப்பில் வைக்கப்பட்டுள்ளது குறித்து..?

! எம்.எல்.ஏ.ஆக முடியாமல் 'ஜெ'யைக் கட்டாயக் காத்திருப்பில் வைத்ததற்குப் பரிசு.

● என்.ரஜினி, சென்னை - 92

? ஆன்ட்ரு அகாஸி - ஸ்டெஃபி கிராஃப் காதல் என்னவாயிற்று..?

! கர்ப்பம் வரை சென்றிருக்கிறது.

சினிமாவை நம்பி பிழைப்பு நடத்தறவங்க என்ன ஆகறது..!

● கே. மூர்த்தி, குட்டலாடம்பட்டி.

? தரமான பொருட்களுக்கும் 'இலவசம்' பரிசுக் கூப்பன், கவர்ச்சியான விளம்பரம்' போன்ற வியாபார யுக்திகள் பயன்படுத்துவதைக் கண்டு வருத்தப்பட்டதுண்டா..?

! வருத்தப்பட்டு என்ன செய்ய..? 'உங்கள் கேள்விக்குப் பதில் சொன்னால் எனக்கு இலவசமாக என்ன கிடைக்கும்?' என்று நான் கேட்காதவரை திருப்தி படுங்கள்!

● பி.ஜெயபிரகாஷ், சர்க்கார்பதி

? ஏழையின் கோபம் - பணக்காரனின் கோபம் - என்ன வித்தியாசம் சார்..?

! ஏழையின் கோபம் டீக்கடை வரை; சீமான்கள் கோபம் கோர்ட் வரை!

❑ ரூ.50 பரிசு பெறுபவர் :
தி. விஜயசங்கரன்,
1ஏ, நாட்டு சுப்பராய தெரு,
இரண்டாவது சந்து, மயிலை,
சென்னை - 600 004.

★ ரூ.25 பரிசு பெறுபவர் :
ஆர். கர்ணன்,
பெத்தாரங்கபுரம்,
தனக்காகுளம் அஞ்சல்,
வடக்கன்குளம் - 627 116.

தி.மு.க.வின் பொதுக்குழு இந்த மாதக் கடைசியில் நடக்கிறது. அதற்குள்ளாக, மத்திய அரசிடமிருந்து ஜெயலலிதா அரசைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அளவுக்குச் சில சாதகமான செயல்களை எதிர்பார்க்கிறார்கள், கழகப் பிரமுகர்கள் அதில் முதலாவது, சென்னை நகர போலீஸ் கமிஷனர் உட்பட சில சீனியர் போலீஸ் அதிகாரிகளின்மீது மத்திய அரசின் நேரடி நடவடிக்கை. மத்திய உள்துறை இதற்காக சர்வீஸ் விதிகளை அலசி ஆராய்ந்து வருகிறது. அடுத்ததாக கலைஞர் கைது தொடர்பாக மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ள ராமன் கமிஷனைச் செயலற்றதாக்கும் வகையில் மத்திய

காதில் விழுந்தவை



தி.மு.க. பொதுக்குழுவில் சிக்னல்?

அரசின் சார்பில் மற்றொரு விசாரணை கமிஷன். அந்த விசாரணைக் கமிஷன் வரம்பில் பத்திரிகை சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்து, மனித உரிமை மீறல் ஆகியவையும் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை. ஜெயலலிதாவின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்குச் செக் வைக்கும் விதமாக ஓர் அரசியல்வாதி கவர்னர் நியமிக்கப்பட வேண்டும் என்பதும் தி.மு.க.வின் எதிர்பார்ப்பு.

கலைஞருக்குக் கறுப்புப் பூனை பாதுகாப்பு. கழகப் பிரமுகர்களுக்குக் கொஞ்சம் ஆறுதலைக் கொடுத்திருக்கிறது. அடுத்து சன் தொலைக்காட்சிக்கு மத்திய ரிசர்வ் போலீஸ் படை பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இப்படி பல அம்சங்களில் மத்திய அரசின் ஆறுதலான செயல்பாடுகளை எதிர்பார்க்கிறது தி.மு.க. இவை தாமதமாகும் பட்சத்தில் அதிரடி முடிவுகளை எடுக்கவும் கழகம் தயாராம். அதற்கான சிக்னல்களைப் பொதுக் குழுவில் பார்க்கலாம் என்கிறார்கள்.

ஆறு மாதத்தில் இரண்டு மாதங்கள் போன நிலையில், சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட ஜெ. என்ன செய்யப் போகிறார்? டான்ஸி வழக்கில் உயர்நீதி மன்றத்தில் உள்ள அப்பீலில் மூன்று வருட தண்டனையை இரண்டு வருடமாகக் குறைப்பதற்கு வாய்ப்பிருக்கிறதா? என்று பார்க்கிறார்களாம். ஆனால் அந்த அப்பீலில் ஜெ.வால் நியமிக்கப்பட்டிருக்கிற அரசு வழக்கறிஞர்கள் ஆஜராகி வழக்காடக் கூடாது என்று சு. சுவாமியும், ஆலந்தூர் பாரதியும் வழக்கு போட்டிருப்பதால் அப்பீல் விசாரணை தாமதப்படலாம். அது சரிப்பட்டு வராது என்று ஜெ. கருதுகிறார். அடுத்து ஆண்டிப்பட்டியிலோ அல்லது வேறு ஏதாவது தொகுதியிலோ கொஞ்சம் அதிமுக. சார்புள்ள அதிகாரியைத் தேர்தல் அதிகாரியாகப் போட்டு மனுவை ஓ.கே. செய்து போட்டியிடலாமா? என்கிற யோசனையும் பரிசீலனையில் இருக்கிறதாம். தேர்தல் அதிகாரி மனுவை ஏற்றுக் கொண்டுவிட்டால் தேர்தல் முடிவு தெரியும் வரையில் யாரும் அதை சேலஞ்ச் செய்ய முடியாது. இதற்கிடையில் கவர்னர் ஜெ.வைப் பதவியேற்க அனுமதித்த வழக்கில் மனுவை அரசியல் சாசன பெஞ்சிற்கு அனுப்பி விட்டது உச்ச நீதி மன்றம். வழக்கு மேலும் தாமதப்படும். ''பருத்தி புடைவையாய்க் காய்த்தது'' என்கிறார் ஒரு மூத்த அ.இ.அ.தி.மு.க. பிரமுகர்.

- சஞ்சயன்



''படுத்தாதய்யா, இது உன் வியாபாரம் போல இல்ல. ஆடிலே மாப்பிள்ளைப் பார்த்தாலும் தள்ளுபடிலே கிடைக்க மாட்டாரு!''

''அவங்க காதல் ரொம்ப தீவிரம்ப்பா.''
''அப்படியா?''





''சேட்டு, எல்லா பிசினஸ்லேயும் ஆடி தள்ளுபடி உண்டு, உன் பிசினஸ்லேயும் பாதி வட்டி கழிச்சிடேன்.''



''சாமர்த்தியமா பதில் சொல்றதுல நம்ம தலைவரை பீட் பண்ண முடியாது.''

''எப்படி?''

''திடீர்னு அஞ்சு மந்திரிங்களைத் தூக்கிட்டீங்களேன்னு கேட்டதும் 'ஆடிக் கழிவு'ன்னுட்டாரு!''

''பாரு ஆடில எப்படி பிரிஞ்சிருக்காங்க!''




சிரிப்புக்கு இல்லை தள்ளுபடி!

சிரிப்பு:- **நவீன்**
படங்கள்:- சேகர்



''சொன்னா புரிஞ்சுக்குங்க மேடம்; ப்ளீஸ்... உங்க சௌகரியத்துக்காக ஆடியை ஆவணியா மாத்தற அரசாணையெல்லாம் பிறப்பிக்க முடியாது...''





2001 ஜூலை 29
விஷு ஆடி 13
மலர் : 59
இதழ் : 52

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஆக்ரா: மணமகள் இல்லாமல் திருமணம்!


ஆக்ரா மாநாடு இந்தோ-பாக் உறவுகளை இரவோடு இரவாகச் சீர்செய்து விடும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், இரு நாடுகளின் உறவில் ஒரு புதிய திருப்பத்துக்கு அது வழிகாட்டும் என்ற நியாயமான எதிர்பார்ப்பு உலகுக்கே இருந்தது.

அந்த எதிர்பார்ப்பு முற்றிலும் தவிடுபொடியாகும்படி அம் மாநாடு அமைந்ததென்பது நம் நாட்டுக்குப் பெருமையல்ல; தலைகுனிவே!

பிரதமர் வாஜ்பாய், இரு முறை மத்திய அரசில் அயலுறவுத்துறை அமைச்சராக இருந்தவர். சர்வதேச உறவுகளில் நிபுணத்துவம் உடையவர். அயல்நாட்டுத் தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். அவரது தலைமையில் நடைபெற்ற ஒரு முக்கியமான மாநாடு இத்தனை தூரம் தோல்வியுற்றது எனில் அதற்கு என்ன காரணம்..? பிரதமரின் ஆழமான மௌனத்தையே முழுமுதற் காரணமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

பாகிஸ்தானில் 'இந்திய விரோதம்' என்பது மக்களைக் கவர பயன்படும் அரசியல் ஆயுதமாகவே இருந்து வருகிறது. ஆகவே அந்நாட்டின் தரப்பில், ஆக்ரா சந்திப்பைச் சிக்கலாக்கக்கூடிய அறிக்கைகள் சதா வெளிவந்தபடி இருந்தன. இதில் ஆச்சர்யம் ஏதும் இல்லை.

இந்திய தரப்பில் பாகிஸ்தானின் இந்த சீண்டல் போக்கை எதிர்பார்த்து, அதைப் பெரிதுபடுத்தாமல் புறக்கணித்திருக்க வேண்டும்.



ஆனால், பாக் தரப்பு அறிக்கைகளுக்குப் பதில் கூறும் விதமாக அரசும் எதிர்க்கட்சிகளும் பல்வேறு ஹிந்து அமைப்புகளும் குரல் உயர்த்த ஆரம்பித்து விட்டன.

நல்லுறவு வளர்க்க ஆக்ராவில் என்னென்ன பேசவேண்டும் என்பதே இரண்டாம் பட்சமாகி, வெறும் ஈகோ பிரச்னை மேலோங்கி நின்றது.

முக்கியமாக, காஷ்மீர்ப் பிரச்னையையே பாகிஸ்தான் ஆக்ரா மாநாட்டில் மையப்படுத்த விரும்பியது. ஆனால், 'காஷ்மீர்ப் பிரச்னையைத் திரும்பிக் கூட பார்க்க மாட்டோம்' என்று இந்தியாவில் ஒருத்தர் விடாமல் வீர சபதம் செய்தனர்!

காஷ்மீர் பிரச்னையை ஒதுக்கிவிட்டு நடத்தப்படும் இந்தோ-பாக் பேச்சுவார்த்தைகள் மணமகள் இல்லாமல் நடத்தப்படும் திருமணம் போன்றதுதான் என்பதைப் புரிந்து கொள்ள நாம் தயாராயில்லை!

முஷாரஃப் இந்தியா வந்து சேர்ந்து, சந்திப்புகளும் பேச்சுவார்த்தைகளும் தொடங்கிய பிற்பாடாவது இங்கிதமாக நடந்து கொண்டோமா என்றால், அதுவும் இல்லை.

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் பேச்சுவார்த்தைகளின் இடையே விடுத்த அறிக்கை, பாகிஸ்தான் பத்திரிகைகளைக் கோபத்தில் 'பற்றி எரியவே வைத்துவிட்டது.


வெளிப்படையான அந்த எதிர்ப்பு, இங்கே மேலும் வாதப் பிரதிவாதங்களுக்கும் எதிர்ப்பு ணர்வுக்குமே வழி வகுத்தது.

போதா குறைக்கு முஷாரஃபின் ஒவ்வொரு அசைவுக்கும் அர்த்தம் கற்பித்து, பத்திரிகைகள் வேறு சகட்டு மேனிக்குக் கருத்துகளை வெளியிட்டன.

இத்தனையையும் பிரதமர் பேசாமல் கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டுமிருந்தார் என்பதே வேதனை.

முஷாரஃப் வரவிருக்கிறார் என்றதுமே அனைத்துக் கட்சித் தலைவர்கள் மட்டுமின்றி, ஹிந்து-முஸ்லிம் அமைப்புகளின் தலைவர்களையும் அழைத்து, பிரதமர் நுணுக்கமாக உரையாடியிருக்க வேண்டும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்திப்புக்கு, நாட்டையே தயார்ப்படுத்தியிருக்க வேண்டும்.

'இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான பிரச்னை மதப் பிரச்னை அல்ல; அந்தக்



குறுகிய கண்ணோட்டத்தில் அணுகி அதைத் தீர்க்க முடியாது' என்று எடுத்துச் சொல்லி, ஆக்ரா சந்திப்புக்கு வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ்., சிவசேனா உள்பட அனைத்து தரப்பினரின் ஆதரவையும் பெற்றிருக்க வேண்டும்.

நாட்டின் மேலாண்மைக்கு இழுக்கு ஏற்படாமல் காஷ்மீர் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று பிரகடனப்படுத்தியிருக்க வேண்டும்.

இவ்வாறு செய்திருப்பின், பாகிஸ்தானின் வாயும் அடைபட்டிருக்கும்; இங்கே தலைக்குத் தலை நாட்டாண்மை செய்ய முயன்ற பல தரப்பினரது வாயும் மூடப்பட்டிருக்கும். ஆக்ரா பேச்சுவார்த்தைகளின்போது காஷ்மீர் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிராவிட்டாலும் அப்பிரச்னையையும் மீறி பல நல்ல காரியங்களுக்கு ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கக் கூடும்.

ஆனால், பிரதமர் அனைவரையும் பேசவிட்டுத் தாம் மட்டும் பேசாதிருந்துவிட்டதால் ஆக்ரா மாநாடு தோல்வியுற்றது.

அதன் பிறகும் பிரதமரின் மௌனம் நீடிக்கிறது. அயலுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் குரலை உயர்த்தாமலே பாக். அதிபரை எடுத்தெறிந்து பேசும் கலையில் வல்லவராயிருக்கிறார்.


இந்தச் சீண்டுதல் வீரத்தினால் இந்தியா எந்தவிதமான முன்னேற்றமும் காணப்போவதில்லை.

முஷாரஃப் ராணுவப் புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்தவர்தான்; ஆனால், இன்றையச் சூழலில் பாகிஸ்தானின் முதல் பிரதிநிதி. அவர் ஒருவரை மனமிணங்கச் செய்வது என்பது ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பலதரப்பட்டவர்களாலான ஓர் அரசை இணங்கச் செய்வதைக் காட்டிலும் எளிய காரியம்.

அந்தக் காரியத்தைச் சாதித்து, காஷ்மீரப் பிரச்னைக்கு முடிவு கட்டினால் கோடானு கோடி ரூபாய்களைக் கொட்டி எல்லைப் பகுதியைப் பாதுகாக்கும் செலவும் சிரமமும் மிச்சமாகும்.


அதற்கான ஒரு நல்வாய்ப்பு, கண்ணெதிரிலேயே கைநழுவிப் போய்விட்டது.

இந்தச் சந்திப்பின் ஒரு சில நல்ல நினைவுகளின் சுவடுகள் மறையும் முன் அடுத்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்வதும் அது வெற்றிகரமாக நடைபெற திட்டமிடுவதும் மிகவும் அவசியம். இனியாவது பிரதமர் பேசட்டும். ○




துலாம் ராசிக்காரரான புஷ்பவனம் குப்புசாமி, இப்ப இசை நிகழ்ச்சிகளுக்காக இத்தாலி போயிருக்காரு. அட! என்ன துல்லியம்!

அக்னிசர்மா பக்கம்




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

மனசு முழுக்க சந்தோஷமும், பாக்கெட் நிறைய பணமுமா இருக்கப் போறீங்க இந்த வாரம். முஷாரஃபை இந்தியா அழைத்ததால சிறந்த ராஜதந்திரிங்கற பெயரை வாஜ்பாய் பெற்ற மாதிரி உங்களோட பெயர் புகழ் கூடப் போகுது. கணவன் - மனைவி உறவுல அன்பு பொங்கும். அம்மா வழி உறவுக்காரங்களால நன்மைகள் வரப் போகுது. எதிர்பார்த்திட்டிருந்த நல்ல நியூஸ் வாரப் பின் பகுதியில வந்து நெஞ்சில பால் வார்க்கும். கொடுக்கல் வாங்கல்ல உஷாரா இல்லேன்னா பணம் அம்போ தான். ஜாக்கிரதை!




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

பல வழிகள்ல இருந்து வருமானம் வந்து கொட்டப் போகுது. மனசுல புது தெம்பு அனாயாசமா வந்து நிற்கும். வெளிநாடு போகணும்னு அடிச்சிட்டிருந்தவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரப் போகுது. வீட்ல 'டும்டும்'க்கான சந்தர்ப்பம் வரப் போகுது. கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு வாய்ப்புகள் தேடி வரப் போகுது. முன்ன பின்ன தெரியாதவங்ககிட்ட அதிகமா வாயைக் கொடுக்க வேண்டாம்.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

கிரக சஞ்சாரம் உங்களை லூக் விடுவதால லாட்டரி அடிச்ச சந்தோஷம் தான் உங்களுக்கு. மனசுல துணிச்சலும், தன்னம்பிக்கையும் முதல்வர் ஜெயலலிதா மாதிரி ஏறும். எதிரிகள், காஷ்மீர் எல்லையில 'புஸ்'ஸான தீவிரவாதிங்க மாதிரி ஆயிடுவாங்க. புது சொத்து, வீடு, நிலம் வாங்க சான்ஸ் இருக்கு. சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு வெற்றி தேடி வரும். இருந்தாலும் மனசுல அடிக்கடி குழப்பம் வருவதைத் தவிர்க்க முடியாது. பக்கத்துல சண்டை நடந்தா பத்தடி தள்ளி நடக்கறது நல்லது.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

தாஜ்மஹாலைப் பார்த்து முஷாரஃப் மனைவி ஷபா அடைஞ்ச சந்தோஷம் மாதிரி பெண்களுக்கு இந்த வாரம் குதூகலம்தான். புது ட்ரெஸ், நகைகள்னு ஜமாய்க்கப் போறீங்க. (கணவர்களே உஷார்!) ஏழு நாளில் முழு அழுகுங்கற மாதிரி இந்த வாரம் முழுவதும் அழகா தெரிவீங்க. அதுக்காக அடிக்கடி கண்ணாடி முன்னால நின்னு அம்மாட்ட திட்டு வாங்காதீங்க. எண்ணெய் பொருட்கள் இரும்பு, எஃகு, பிஸினஸ் பண்றவங்களுக்கு லாபம் கொட்டும். அரசியல்வாதிகளுக்கு இது போதாத காலம். அடக்கி அறிக்கை விடறது நல்லது. இல்லேன்னா அதிமுக - காங்கிரஸ் லடாய் மாதிரி டென்ஷனாக்கும். உஷார்!



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


உங்க திட்டங்கள்லாம் இப்ப நிறைவேறப் போகுது. பொருளாதார நிகழ்வில் பிரச்னை இல்லை. எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், விஞ்ஞானத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டுக்கூடப் போகுது. குடும்பத்துல சந்தோஷ மழை பெய்யும். எதிரிகள் ஜூட் ஆயிடுவாங்க. காஷ்மீர் தீவிரவாதிகள் பண்ற மாதிரி சங்கடங்கள் வந்து சேரலாம். இருந்தாலும் குரு பார்வை இருப்பதால் ஓரளவு காப்பாத்துவார். அவசரம், பதற்றம் வேண்டாம். நிதானத்தைக் கடைபிடிங்க!



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


அரசியல்வாதிகள் ஐயனாரை வேண்டி பெரிய கும்பிடு போடுங்க. உங்களுக்குப் புது பதவி பட்டம் தேடி வரப் போகுது. எந்தக் காரியத்தையும் அவசரப்படாம செய்து முடிச்ச நல்ல பேர் வாங்குவீங்க. சட்டம், காவல், இராணுவத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் பாராட்டு கிடைக்கும். அலைச்சல் அதிகரிக்கும். வெளிநாட்டுல இருந்து நல்ல தகவல் வந்து சேரும்.

போட்டிப் பந்தயங்களில் வெற்றி குவியப் போகுது. பெரியவங்க சொல்படி கேட்டா பிரச்னைகள்ல இருந்து தப்பிக்கலாம்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

'அழைக்கிறது அமெரிக்கா' போட்டில நம் வாசகர்களுக்கு அடிச்ச அதிர்ஷ்டம் மாதிரி உங்களுக்கும் காத்திருக்கு. திடீர்னு மனசு பக்தி மார்க்கத்துக்கு இழுக்கும். திறமை, சாமர்த்தியம் எல்லாரும் பாராட்டும்படி அமையும். அலுவலகப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வெளிநாட்டுப் பயணம் வெற்றி தரும். எந்த வேலையையும் அரைகுறையா செய்யாதீங்க. முழு ஈடுபாட்டுடன் செய்தால் மேலதிகாரிகளோட திட்டுகள்ல இருந்து தப்பிக்கலாம். பேச்சுல பதற்றத்தையும் கோபத்தையும் தவிர்த்திடுங்க.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

கணவன் மனைவிக்குள்ள திடீர் டிஷ்யூம், டிஷ்யூம் நடக்க வாய்ப்பிருக்கு. குருபார்வை இருக்கறதால் பெரிய லெவல்ல போகவிட மாட்டார் என்றாலும் விட்டுக் கொடுத்துப் போறது நல்லது. எந்தக் காரியத்தையும் எப்பாடுபட்டாவது நிறைவேற்றிடுவீங்க. பொறியியல், சட்டம், இராணுவம் போன்ற துறைகள்ல வேலை பார்க்கறவங்களுக்கு முன்னேற்றம் கூடும். வீடு, மனை வாங்க வாய்ப்பிருக்கு. அரசு விவகாரங்கள்ல ஜாக்கிரதையா இருங்க.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

விம்பிள்டன்ல பட்டம் வாங்கின இவானிசெவிக் மாதிரி உங்க புகழ், மதிப்பெல்லாம் ஜில்லுனு உயரப் போகுது. பார்ட்னர்ஷிப்னு தொழில் பண்றவங்களுக்கு லாபம் கொட்டும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. பெரியவங்க சொல்லைக் கேட்டா, நிறைய சாதிக்கலாம். அரசியல்வாதிகள் கொஞ்சநாள் வாயைக் கட்டிக்கறது நல்லது. வீண் பிரச்னைகள் வர வாய்ப்பிருக்கு. உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்து இம்சை பண்ணலாம். உஷார்!




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்க திறமை பளிச்சிடப் போகுது. சிலருக்குப் பதவி, பட்டம் வந்து சேரப் போகுது. அரசு விவகாரங்கள் சாதகமா மாறும். வீடு, மனை வாங்க வாய்ப்பிருக்கு. எழுத்து, பத்திரிகை, ஓவியம், சிற்பத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு மனசுல மகிழ்ச்சி கரைபுரளும். வெளிநாட்டுல இருந்து நல்ல தகவல் வந்து கதவைத் தட்டும். பேச்சுல இனிமை இருப்பதை நீங்களே பார்த்து வியப்பீங்க. தொழில் ரீதியா அதிர்ஷ்ட வாய்ப்புகள் காத்திருக்கு. ஜமாயுங்க!



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

'வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்'னு ஜாலியா நீங்க பாட்டுப் பாடலாம். இந்த வாரம் தொட்டது துலங்கப் போகுது. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வாய்ப்புகள் வந்து கதவைத் தட்டும். பார்ட்டி, ஃபங்ஷன், ஜாலி சுற்றல்னு திரியப் போறீங்க. புது ஆடைகள், நகைகள் வாங்க வாய்ப்பிருக்கு. பண நடமாட்டம் சாதாரணமாவே இருக்கும். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டம் காத்திருக்கு. வேலை இல்லாம இருந்தவங்களுக்கு வேலை தேடி வரப் போகுது. என் ஜாய்!



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்க புத்திசாலித்தனம், சாமர்த்தியம், வெளிப்படப் போகுது. கணவன் மனைவி உறவு சீரா இருக்கும். வெளியூர் பயணம் போனா பாதுகாப்பு அவசியம். கேளிக்கை உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். தொழிலாளிகள், விவசாயிக்கெல்லாம் வருமானம் கொட்டும். உங்க திறமைகள், சாமர்த்தியம் வெளிப்படப் போகுது. வியாபாரிகளுக்கு லாபத்துல பிரச்னையில்லை. சுப காரிய செலவுகள் பர்ஸைக் கடிக்கும். ○

நடக்குமென்பார் நடக்கும்!

வௌவால் பிடித்த ஆர்ட் டைரக்டர்!

மைசூர் அருகே, கிருஷ்ணராஜ சாகர் அணையின் வடக்குப் பகுதியில், வயல் வெளிகள் நிறைந்த மிக அழகான லொகேஷனைத் தேடிப் பிடித்து ஐம்பத்து ஐந்து லட்சம் ரூபாய் செலவழித்து செட் உருவாக்கியிருக்கிறார்கள். 'ராமானுஜர்', 'சுவாமி விவேகானந்தா', 'பாரதி' என்று எத்தனையோ பீரியட் படங்களுக்கு செட் போட்ட அனுபவம் கிருஷ்ணமூர்த்திக்கு உண்டு என்றாலும், 'பாண்டவர் பூமி'க்கு செட் உருவாக்கிய அனுபவம் வித்தியாசமானது. இது கிராமத்துப்படம் என்பதாலும் வெவ்வேறு கால கட்டங்களில் கதை நிகழ்வதாலும், ரொம்ப உழைத்திருக்கிறார்கள்.

பண்ணை வீட்டிலிருந்து வெளியேறும் ஒரு குடும்பம், பதின்மூன்று வருடங்கள் கழித்து மறுபடி அந்த கிராமத்துக்கே திரும்புகிறது. பண்ணை வீடு முற்றிலுமாகப் பாழடைந்து போய்க் கிடக்கிறது. அதைத் தத்ரூபமாகக் காட்ட வேண்டும் என்பதற்காக, பெரிய மரங்களையெல்லாம் கொண்டு வந்து வீட்டுக்கு வெளியிலும், உள்ளேயும் நட்டு சுவர்களிலிருந்து செடிகள் வளர்ந்திருப்பதுபோலச் செய்து... அவ்வளவு ஏன்.. தூசு... ஒட்டடை எல்லாம் செட் பண்ணி, ரொம்ப கஷ்டப்பட்டு, வௌவால்களைப் பிடித்துக் கொண்டு வந்து வீட்டுக்குள் விட்டு, ரொம்பவே மெனக்கெட்டார்களாம்.

"அந்த பழைய வீட்டை இடித்தோம். இடிப்பதும் படமாக்கப்பட்டது. காரணம், கதைப்படி.. புது வீடுகட்ட, பழையவீடு இடிக்கப்படுகிறது. அதன்பின் பூமி பூஜை.. தொடங்கி... கிரகப்பிரவேசம்வரை தினந்தோறும் வீடு வளர வளர, படப்பிடிப்பு தொடர்ந்தது. ஒரு நாள் படப்பிடிப்பு முடிந்து படப்பிடிப்புக் குழுவினர் புறப்பட்டுப் போனவுடன், அடுத்த கட்டப் பணிகள் இரவோடு இரவாக நடக்கும். மறுநாள் ஷூட்டிங்குக்கு வருகிறவர்கள், செட் வளர்ச்சி கண்டு ஆச்சரியப்படுவார்கள். இப்படியே வீடும் வளர்ந்தது; படமும் வளர்ந்தது." என்றார் ஆர்ட் டைரக்டர் கிருஷ்ணமூர்த்தி.

படம் செப்டம்பர் ரிலீஸாம்.





"மூன்று பெரிய வீடுகள் மற்றும் பல சிறு வீடுகளுடன் சுமார் ஆறு ஏக்கர் பரப்பில் திடீரென்று உருவான கிராமத்தைப் பார்த்துவிட்டு, ஊர்மக்களே அசந்துட்டாங்க. பலர் நம்பவே இல்லை; சில கன்னட சினிமாக் கம்பெனிகள், இதே செட்டை, தங்களோட படத்துக்கு உபயோகிச்சுக்கிறதா கேட்டாங்க. நாங்க மறுத்துட்டோம்" என்கிறார் 'பாண்டவர் பூமி' இயக்குனர் சேரன்.

"படத்தில் நடிக்கிற நடிக, நடிகையருக்கு இணையான முக்கியத்துவம் இந்தப் பண்ணையார் வீட்டு செட்டுக்கும் உண்டு" என்றார் நான்கு தேசிய விருது பெற்ற ஆர்ட் டைரக்டர் கிருஷ்ணமூர்த்தி.

- எஸ். சந்திரமௌலி



✉ வென்றது ஜெ.வின்
ஆணவம்.
தோற்றது மத்திய
அரசின் கௌரவம்.
இதை உணர்த்துகிறது
கலைஞர் கைது சம்பவம்.
கண்டித்த தலையங்கம்
நல்ல அனுபவம்.

அயன்புரத்திலிருந்து
த. சத்தியநாராயணன்

✉ அநியாயமாய்த் தன் மகன் ஒரு கண்ணை இழந்து தவிப்பதாய்க் குமுறும் அந்தத் தாய்க்கு அரசியல்வாதிகள் சொல்லப் போகும் பதில் என்ன? அரசியல் வன்மங்கள் தொடர்கதைதானா? அதற்கொரு முற்றுப் புள்ளி வைப்பதற்கு எந்தக் கட்சி ஆட்சியும் முன்வராதா?

மதுரையிலிருந்து பாலகிருஷ்ணன்

✉ 'கவிஞன் இல்லம்' என்ற தலைப்பில், அமரர் கண்ணதாசனின் நினைவிடம் பற்றி வெளிவந்த தகவல்கள், காலத்தால் அழியாப் புகழ் பெற்றிருக்கும் அந்தப் பிறவிக் கவிஞனை நினைத்து கண்கலங்க வைத்தன.

கரூரிலிருந்து இரா. வளையாபதி

✉ சர்க்கரையும் - டிகாஷனும் சரியான அளவில் கலக்கப்பட்ட நுரை ததும்பும் காபியைப் பருகிய திருப்தி அஜீத்தின் பதில்களில்.

அருகந்தம்பூண்டியிலிருந்து வடமாலவன்

✉ அனைத்து சந்தஸ்ஸ¬க்கும் தாயான காயத்ரி மந்திரமகிமையை 'குறையொன்றுமில்லை'யிலிருந்து அறிந்தோம்.

சென்னையிலிருந்து கே.வி.ராமன்

✉ வழ... வழா... கொழ... கொழா நடிகர்கள் மத்தியில்... தேசம் முழுதும் தமிழுக்குப் பெருமை தேடித் தந்த கமல்ஹாசன் போன்ற சிறந்த நடிகரை, அஜீத் என்ன.. இன்னும் எத்தனை நடிகர்கள் காப்பியடித்தாலும் வரவேற்க வேண்டும். அதை விட்டுட்டு...

திருச்செங்கோட்டிலிருந்து
டி.ஏ.சி. பிரகாஷ்

✉ ஒரு தந்தையின் மன உணர்வுகளை நெஞ்சம் கசியும் நிகழ்வுகளோடு வடிவமைத்த 'கிளிப் பேச்சு கேட்க வேண்டும்' சிறு கதை உயிர்ப்புடன் இருந்தது. அகல்யா பெரிதும் பாராட்டுக்குரியவர்.

தேனியிலிருந்து பாலசுப்ரமணியன்

✉ "சிரமறுத்தல் வேந்தர்க்குப் பொழுது போக்காம். எமக்கோ அது உயிர் வாதை" என்ற வரிகள் கண்ணை இழந்த கண்ணான மகன் பற்றிய தாயின் புலம்பல் கண்டதும் நினைவிற்கு வந்தது!

அரவக்குறிச்சிப்பட்டியிலிருந்து
எம்.அசோக்ராஜா.

✉ அஜித்தின் பேட்டியில் திரையுலக பல நூறு குடும்பங்களைப் பற்றிய அக்கறையும், இன்றைய சினிமாவைப் பற்றிய தெளிவான பார்வையும் தெரிகிறது.

சென்னையிலிருந்து ராம். கிருஷ்ணன்

✉ 'தத்தளிக்கும் சமயபுரம்' கட்டுரையில் அங்குள்ள சுகாதாரக்கேடு மற்றும் இடைத் தரகர்களின் ஆதிக்கத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நிர்வாக அதிகாரி இல்லாததுதான் இவ்வளவு பிரச்னைக்கும் காரணம். சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

மதுரையிலிருந்து என்.பாலகிருஷ்ணன்

விஜயகாந்த்

நரசிம்மா' படம் ரிலீஸ் ஆகி எல்லா ஏரியாவிலிருந்தும் நல்ல ரிப்போர்ட் என்று சந்தோஷமாக இருக்கிறது விஜயகாந்த் வட்டாரம். 'குஷால்தாஸ் கார்டன்' என்ற லொக்கேஷனில் 'தவசி' படப்பிடிப்பிலிருந்த விஜயகாந்தைச் சந்தித்தோம்.

"நரசிம்மா படத்தின் இணைய தளத்தில், மொத்தம் ஐந்நூறு கதைகளைக் கேட்டு, சுமார் இருபத்தைந்தை சலித்து எடுத்து, கடைசியாகத் தேர்வு செய்த கதையைப் படமாக்கியதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஐந்நூறு கதைகளில் இந்தக் கதையைத் தேர்ந்தெடுக்கலாம் என்று எப்படி உங்களுக்குப் பொறி தட்டியது?"

"எத்தனையோ கதைகளைக் கேட்டும் எனக்கு ஒரு பிடிப்பு ஏற்படவில்லை. கடைசியில் டைரக்டர் திருப்பதிசாமி என்னிடம் கதை சொன்னபோது- என்னங்க! ரொம்பவும் நெகடிவ்வான கேரக்டரா இருக்கே என்றேன். அவசரப்படாதீர்கள் என்று சொல்லி மீதிக் கதையைச் சொன்னார்.

இது தவிர, அவர் கதை சொன்ன விதம், ஆங்காங்கே சற்றும் எதிர்பாராத விதமாக கொடுத்த சின்ன சின்ன சஸ்பென்ஸ்- அதாவது, மோதிரத்தில் டைம்பாம் இருக்கிறது என்று மும்பை தாதாவைப் பயமுறுத்துவது, புறா இறகுக்குள் வைக்கப்பட்ட மைக் என்று பல பஞ்ச்கள்! இந்தக் கதையைக் கேட்டபோது, 'அட! இதற்காகத்தான், இதுவரை கேட்ட கதைகளையெல்லாம் வேண்டாம் என்று ரிஜெக்ட் பண்ணினோமா?' என்று எனக்குள்ளே ஓர் எண்ணம் ஏற்பட்டது."

"இந்தப் படத்துக்கு ஆரம்பம் முதலே பெரும் எதிர்பார்ப்பு இருந்து வந்ததே! அதற்குக் காரணம் என்ன?"

"நானே, நேரடியாய்த் தயாரிப்பாளராக இருப்பது ஒரு காரணம். டெல்லி, கொல்கத்தா, மும்பை, கொச்சின் என்று மாறிமாறி ஷூட்டிங் நடந்ததும், 'அப்படி என்ன படம் எடுக்கறாங்க?' என்று ஒரு ஆர்வத்தைத் தூண்டிவிட்டது. டைரக்டர் திருப்பதிசாமி, தெலுங்கில் பல விருதுகள் பெற்றவர். அவரது முதல் தமிழ்ப் படம். அவரது அகால மரணம் எல்லோரையும் உலுக்கிவிட்





"ஆக்ஷன் நடிப்பு அலுப்புதான்!"




டது. இதனால் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பும் அதிகமாக இருந்தது."

" 'வல்லரசு' படத்தில் நீங்கள் போலீஸ் அதிகாரி. இதில் நீங்கள் ராணுவ அதிகாரி. இரண்டுமே தீவிரவாதிகளை ஒடுக்குவதுதான். இப்படி மாறி மாறி ஒரே மாதிரியான ஆக்ஷன் ரோல்களாகவே செய்ய உங்களுக்குப் போரடிக்கவில்லையா?"

"ஆமாம்! எனக்கு அலுப்பாகத்தான்

இருக்கிறது. படம் எடுக்கிறவர்களும் சரி, பார்க்கிறவர்களும் சரி, என்னை அப்படித்தான் பார்க்க விரும்புகிறார்கள் என்கிறபோது, நான் என்ன செய்துவிட முடியும்? 'வானத்தைப் போல' படம் போல, சண்டையே இல்லாமலும் நான் நடிக்கத் தயார். அதுபோல வாய்ப்புகள் வர வேண்டாமா?"





• திருப்பதிசாமி

"டைட்டிலின் போதும், ஓரிரு காட்சிகளில் நீங்கள் தனியே வசனம் பேசுகிற போதும், பின்னணியில் உங்கள் மன்றக் கொடி, சின்னம் வருகிறதே! இதற்கு உள்அர்த்தம் என்ன?"

"உள் அர்த்தம் எதுவுமில்லை. நான் தவிர்க்கப்பார்த்தால்கூட, டைரக்டர்கள் அது அவசியம் என்கிறார்கள்."

"எதிர்காலத்தில் அரசியலுக்குள் நுழையவோ, தனிக் கட்சி தொடங்கவோ எண்ணம் உண்டா?"

"எனக்கு அரசியலில் சேர வேண்டும் என்றோ, அரசியல் கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்றோ துளியும் ஆர்வம் கிடையாது."

"அப்படியானால் உங்கள் படங்களில் அரசியல் வாடை கொண்ட வசனங்களைப் பேசி, கைத்தட்டல் வாங்குகிறீர்கள். ஏழைகள் பலருக்கு மிக தாராளமாக உதவிகள் செய்கிறீர்கள். இவையெல்லாம் அரசியல் பிரவேசத்துக்கான அறிகுறிகள் மாதிரி தெரிகிறதே?"

"சினிமா என்பது சக்திவாய்ந்த மீடியம். அதன் மூலமாக, மக்களைச் சிந்திக்க வைக்கும்படி சில கருத்துக்களை, என்னால் சொல்ல முடியும். ஆரம்பம் முதலே அதை நான் செய்து வருகிறேன். அதைத்தாண்டி, அரசியலில் நுழைய வேண்டும் என்கிற உந்துதல் எனக்கு இல்லை. அப்படி ஓர் எண்ணம் வந்தால், கண்டிப்பாக அரசியலுக்கு வருவேன். ஆனால், பத்திரிகைகள் எல்லாம் தாங்களாகவே ஏதேதோ கற்பனை செய்துகொண்டு, பரபரப்புக்காக உண்மையில்லாதவற்றை எழுதிவிடுகின்றன."


" 'நரசிம்மா' கதையைப் பொருத்தவரை, பாடல்களே அவசியமில்லைதானே! பாடல்கள் இல்லாத ஆக்ஷன்படமாக எடுத்திருக்கக் கூடாதா?"

"இன்று திரையுலகுக்கு, ஆடியோ கேஸட் விற்பனை மூலமாக கணிசமான வருமானம் இருக்கிறது. அதை ஏன் வீணாக தடுத்து நிறுத்த வேண்டும்? இன்று பல்வேறு சாட்டிலைட் சானல்களிலும் ஒளிபரப்பாகும் பாடல் காட்சிகள், படத்தின் வசூலுக்கு உதவிகரமாக இருக்கின்றதே!"

"படம் முழுவதுமாக எடுக்கப்படும் முன்பே நிகழ்ந்துவிட்ட டைரக்டர் திருப்பதிசாமியின் அகால மரணத்தால்,

படத்துக்கு எந்த விதத்தில் பாதிப்பு ஏற்பட்டது?"

"இரண்டு பாடல்காட்சிகள் தவிர, மற்றவை எல்லாவற்றையும் அவர் இருந்த போதே எடுத்தாகிவிட்டது. 'சிம்மா... சிம்மா... நரசிம்மா என்ற பாடலை, மிகவும் வித்தியாசமாக, வியப்பூட்டும் விதமாக எடுக்கப் போகிறேன்' என்று பலரிடமும் அவர் சொல்லிக் கொண்டிருந்தாரே தவிர, அவர் எப்படி எடுக்கத் திட்டமிட்டிருக்கிறார் என்று யாரிடமும் சொல்லவே இல்லை. எனவே, அப்பாடலின் நான்கு வரிகளை மட்டும் எடுத்துக் கொண்டு அதற்கேற்ப படப்பிடிப்பு நடத்தினோம். இன்னொரு பாடல் காட்சியையும் நாங்களாகவே எடுத்து விட்டோம். ஆனாலும், திருப்பதிசாமியின் மரணத்தை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. மிகவும் புத்திசாலி. அவரது டைரக்ஷனில் அடுத்து ஒரு படம் எடுத்து, பொங்கலின்போது வெளியிடத் திட்டமிட்டிருந்தேன். எனக்கு அதற்கு அதிர்ஷ்டமில்லாமல் போய்விட்டது."



"இந்தியாவில் தெருவுக்கு ஒரு மசூதி இருக்கு. பாகிஸ்தானில் ஒரு கோவில் கட்ட முடியுமா? நூறு கோடி இந்தியர்களுக்கு ஒரு முஸ்லிம், ஜனாதிபதியாக முடியும். பாகிஸ்தானில் ஒரு இந்து, வார்டு கவுன்சிலர் ஆக முடியுமா? இந்தியக் கிரிக்கெட் டீமுக்கு ஒரு முஸ்லிம் கேப்டன் ஆகி இருக்கிறார். ஆனால், பாக். கிரிக்கெட் டீமில் ஒரு இந்து இடம் பெற்று விட முடியுமா?" என்று ஒரு தீவிரவாதியுடன் நேருக்கு நேர் மோதுகிறபோது வசனம் பேசுகிறீர்களே! இது போன்ற நேரடியான வசனங்களால் பிரச்னை வராதா?"

"உலகின் எந்த நாட்டிலும் வாழும் முஸ்லிம்களை விட, இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் சுதந்திரமாகவும், பத்திரமாகவும் வாழ்கிறார்கள். இதை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லப்படும் வசனம். இந்தியாவில் சுதந்தரமில்லை என்ற தவறான பிரசாரத்தால் திசைமாறிப் போகிற இளைஞர்களுக்கு உண்மை புரிய வைக்கவே அந்த வசனம். யாரையும் புண்படுத்துவது அதன் நோக்கமில்லை! எனவே அதற்கு வரவேற்புதான் அதிகமே யொழிய, பிரச்னை ஏதுமில்லை."

"நடிகர் சங்கம் சம்பந்தப்பட்ட வேலைகளையும் கவனித்துக் கொண்டு, நடிப்பது சிரமமாக இருக்கிறதா?"

"ஏதாவது பிரச்னை என்றால், உடனடியாகத் தலையிட்டுப் பேசித் தீர்க்க வேண்டியுள்ளது. ஷூட்டிங் சமயமென்றால், கஷ்டம்தான். ஆனாலும் நடிகர் சங்கக் கடனை அடைப்பதுதான் முக்கியமான பணி. ஐம்பது லட்சம் போல, கடன் அடைக்கப்பட்டுவிட்டது. இன்னும் சுமார் எழுபத்தைந்து லட்சம் பாக்கி. அதற்குத்தான் பிளான் பண்ணிக் கொண்டிருக்கிறோம்.

> "...அப்படி ஓர் எண்ணம் வந்தால், கண்டிப்பாக அரசியலுக்கு வருவேன்."

"நடிகர் சங்கம் என்பது, முழுக்க முழுக்க திரை உலகினருக்கான ஓர் அமைப்பு. அதுபட்ட கடனை, கலை நிகழ்ச்சிகள் மூலமாக நிதி திரட்டி அடைக்கத் திட்டமிடுகிறீர்களே! நடிக நடிகைகளின் தனிப்பட்ட பங்களிப்பு வேண்டாமா?"

"நீங்கள் சொல்வது சரிதான். நான் பத்து லட்சம் ரூபாய் கொடுத்தேன். மற்றவர்கள் சிலரும் கொடுத்தார்கள். நடிக, நடிகையர் அனைவரும், இது தங்கள் பிரச்னை என்று இன்னும் உணரவில்லை. யாரோ பட்ட கடன் என்றே நினைக்கிறார்கள். இந்த எண்ணத்தை மாற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். இப்போது கட்டியுள்ள ஐம்பது லட்சம், சினிமாக் கலைஞர்களின் நன்கொடைதான்! யார் யாரோ, எங்களைப் பயன்படுத்தி, நிதி திரட்டிக் கொள்ளுகிற போது, நாங்கள் எங்கள் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள கலை நிகழ்ச்சி நடத்துவது எப்படித் தவறாகும்?

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

மனம், மனைவியு

துவாலையால் வாயைத் துடைத்துக் கொண்டபடி 'இன்னிக்கு மிளகுரசம் ஏ ஒன்' என்றபடி லவங்கம் ஒன்றை வாயில் போட்டுக்கொண்டார் ராம்ஷேகர். எப்போதுமே சாப்பிட்டு முடித்த பிறகுதான் சமையலின் நிறைகளைக் கூறுவது அவர் வழக்கம். அவ்வப்போது கூறினால் கற்பகம் ''இன்னும் கொஞ்சம் போட்டுக்குங்க'' என்றபடி நிறையவே போட்டு, தட்டை நிரப்பிவிடுவான் என்கிற பயம்.

எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டாள் கற்பகம். சிறிது நேரத்தில் கணவர் க்ளினிக்கிற்குக் கிளம்பி விடுவாரென்பதால் நேரடியாகவே மூக்கைத் தொடத் தீர்மானித்தாள்.

''நம்ம சிவப்ரியா மனசிலே ஒரு சங்கடம். அதை அவ சொன்னப்போ பரிதாபமா இருந்தது.''

மனைவி மூலமாகத் தூது வரும் என்பதை எதிர்பார்த்தவர்போல் ராம்ஷேகரின் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை விரிந்தது. ஆனால் உடனடியாக அதை அழித்துக் கொண்டார்.

''சரியோ தப்போ, அவ ஒரு சினிமாப் படத்திலே நடிச்சுட்டா. ஆனா அவளைப் பொருத்தவரை அதெல்லாம் பழங்கதை. முழுக்க முழுக்க ஒரு டாக்டராகத்தான் இப்போ இருக்கா. ஆனா ஊரு உலகம், அவளை இன்னும் கதாநாயகியாதான் பார்க்கறதுன்னா, அதுக்கு அவ என்ன செய்வா பாவம்? நாமகூட இதைப் புரிஞ்சுக்கலேன்னா எப்படி?''

ராம்ஷேகருக்கு மனைவியைப் பார்த்தபோது வியப்பாக இருந்தது. தனது மாணவியாக அறிமுகமான சிவப்ரியாவை இப்போது தன்னைவிட அதிகமாக நேசிக்கிறாள். சொல்லப்போனால் திரைப்படமொன்றில் நடிக்க சிவப்ரியா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதைக் கேள்விப்பட்டபோது தனக்காவது அதிர்ச்சியைவிட வியப்புதான் அதிகமாக இருந்தது.

ஆனால் இப்போது எதிரே உட்கார்ந்து கொண்டு சிவப்ரியாவுக்குச் சிபாரிசு செய்யும் இவள்தான் அப்போது துடித்துப் போனாள். ஏதோ பெரும் பாவத்தை அந்தப் பெண் செய்யத் துணிந்துவிட்டதைப் போல அவளிடம் குறை கண்டாள். முறையிட்டுப் பார்த்தாள். கொஞ்ச காலம் மௌனம் சாதித்தாள். இதெல்லாம் எதையும் சாதிக்கவில்லை என்பது தெரிந்ததும் தன்னையே மாற்றிக் கொண்டு விட்டாள்.

''கற்பகம், எனக்கு அனு மேலே பாசம் உண்டு.''

மகளைப் பற்றிய பேச்சு இப்போது ஏன் என்ற கேள்வி மனத்தில் குறுக்கிட்டாலும்



அதை வெளிக்காட்டாமல் சும்மாயிருந்தாள் கற்பகம்.

"கொஞ்ச வருஷமாத்தான் பழக்கம் னாலும் ப்ரியாவும் என் மகன் மாதிரி தான்."

"அதைத்தான் நான் சொல்ல வந்தேன்" என்று மாமி உற்சாகமாகத் தொடங்க, கை உயர்த்தி அவளை அடக்கினார் ராம் ஷேகர்.

அவள்...

அருண் சரண்யா

16



"முதல்லே, நான் தொடங்கிய பாயிண்ட்டை முடிக்கவிடு... ஆனால் எல்லாவற்றையும்விட நான் அதிகமாக மதிப்பது என் க்ளினிக்கை. அதிலே நான் பாடு பட்டு வளர்த்த ஒழுங்குமுறையை. அதற்கு எந்தவிதத்தில் பாதகம் வந்தாலும் அந்த இடைஞ்சலை நான் நீக்கத்தான் செய்வேன்."

மாமி திகைத்துப் போனாள். 'என்ன சொல்கிறார் இவர்? எவனோ தெருவில் அந்தப் பெண் நடித்ததைப் பற்றி கேள்வி கேட்டால், இவர் அவளை வேலையிலிருந்து நீக்கி விடுவாரா என்ன? இதைக் கேட்டாலே அந்தப் பெண் நொறுங்கி விடாதா? அம்மா ஊருக்குச் சென்று விட்டாள். அப்பாவின் முகவரி தெரியாது. காதலித்தவன் வேறொருத்தியைக் கல்யாணம் செய்துகொண்டுவிட்டான். இவ்வளவு இடிகளையும் அந்தப் பெண் தாங்கிக் கொள்கிறது என்றால், அதற்குக் காரணம் தன்னுடைய பாசமுள்ள குருவான இவரது க்ளினிக்கில் வேலை செய்வதில் ஏற்படும் மன நிறைவு காரணமாகத் தான். அதற்கும் சோதனையா?'

மனைவியின் முகத்தில் மாறி மாறித் தென்பட்ட அதிர்ச்சியின் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டே அவளது எண்ண அலைகளை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. "வீணா கவலைப்பட வேண்டாம். இப்போதைக்கு எதுவும் பெரிசா நடந்துடலே. நான் பொதுவாகத்தான் சொன்னேன்" என்றவர் கண்களை மூடிக் கொண்டார்.

"கொஞ்சம் உட்காருங்க டாக்டர். ஏதோ ஸ்கேடிங் செய்யற மாதிரி பறந்துகிட்டே இருக்கீங் களே" என்று லோலிடா கூற, "உட்கார்ந்தா போச்சு" என்றபடி அதைச் செய்தாள் சிவப்ரியா.

தனக்குக் கால் வலி வந்து விடக் கூடாதே என்பதற்காக லோலிடா தன்னை உட்காரச் சொல்லவில்லை. அவளது மனவலி எதையோ

தன்னிடம் பகிர்ந்துகொள்ள அவள் துடிப்பதை சிவப்ரியாவால் உணர முடிந்தது. முன்பொரு சந்தர்ப்பத்திலேயே இது குறித்து பேச்சை அவள் தொடங்க, தொடரமுடியாமல் ஆகிவிட்டது.

"எனக்கு ரெண்டு பொண்ணுங்க. பெரியவளை நினைச்சா ஆங்ஸைடியா இருக்குது."

அவளது பெரிய மகள் ஜோஸபின் கல்லூரிப் படிப்பைச் சமீபத்தில் முடித்தவள் என்பது நினைவுக்கு வந்தது. நன்றாகப் படிப்பவள். நான்கைந்து இடங்களில் வேலைக்கு விண்ணப்பித்திருப்பதாகவும், அதில் ஒன்றாவது நிச்சயம் க்ளிக் ஆகிவிடும் என்றும் லோலிடா முன்பொருமுறை கூறியிருக்கிறாள். அப்படியிருக்க அவளைப் பற்றிய கவலை என்னவாக இருக்கும்?

யூகங்களை அலைபாய விடாமல் லோலிடாவின் பேச்சுத் தொடர்ச்சிக்காகக் காத்திருந்தான் சிவப்ரியா.

"என்னை நோண்டி நோண்டிக் கேட்டாரு டாக்டர் முகர்ஜி. அதனாலே 'என் பொண்ணு இன்னும் யாரோடையும் டேட்டிங் வச்சுக்கலே'ன்ற என் வருத்தத்தைச் சொன்னேன். அந்த ஆளு அதுக்குப் போயி சிரிக்கிறான்."

டாக்டர் முகர்ஜி கிடக்கட்டும். சிவப்ரியாவுக்கே கொஞ்சம் விந்தையாகத்தான் இருந்தது. மகள் இன்னும் காதல் வலையில் விழவில்லை, அதற்காக முயற்சிகளை எடுத்துக் கொள்ளவில்லை என்று எந்தத் தாயாவது வருத்தப்படுவாளா?

"அதனாலே என்ன? நீங்களே அவளுக்கு ஒரு மாப்பிள்ளையைப் பார்த்துட வேண்டியதுதானே?" என்றாள்.

"எனக்குத் தெரிஞ்சு உறவிலே சில பசங்க இருக்காங்க. ஆனால் அதுங்களெல்லாம் விஸ்கியிலே ஊறினதுங்க. நான் யாரையாவது அவளுக்குக் கல்யாணம் பண்ணிவச்சு ஒருத்தருக்கு ஒருத்தர் பிடிச்சுப் போகலேனா ரொம்ப கஷ்டமாயிடும். எங்க இனத்திலே விவாகரத்துக்கெல்லாம் வழியில்லே."

பிரச்னையின் ஆழம் பிடிபட்டதில் சிவப்ரியாவால் லோலிடாவின் தவிப்பை உணர முடிந்தது. பொதுவான தீர்ப்புகளில் அர்த்தம் இல்லைதான். நாட்டில் ரொட்டித் துண்டே தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று பசியில் கதறிய மக்களைப் பார்த்து "அப்படியானால் கேக் சாப்பிடுங்களேன்" என்று கூறிய ராணியின் 'தீர்ப்பை'ப் போல அது ஆகிவிடக் கூடும்.

"ஜோஸபினுக்கு நல்ல பையன் அமைய நானும் வேண்டிக்கிறேன். கவலைப்படாதீங்க. மாரியம்மனும் மேரி மாதாவும் சேர்ந்து ஒரு நல்ல வழியைக் காண்பிச்சுடுவாங்க" என்றபடி மேஜை மீது வைத்திருந்த ஸ்டெத்தை தோளின் மீது ஏற்றிக்கொண்டாள் சிவப்ரியா.


வெந்நீர் அறைக்கு அடுத்த அறையில் 'டங்'கென்ற ஓசை. மூன்று கட்டில்கள் போடப்பட்ட அறை அது. ஒன்றில் முதியவர் ஒருவரும் இன்னொன்றில் இளைஞன் ஒருவனும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். மூன்றாவது கட்டில் தற்போதைக்குக் காலியாக இருந்தது. எதற்காக எந்த அறையில் இப்போது அமைதியைக் குலைக்கும் சப்தம்?

சிவப்ரியா தன் நடையை வேகமாக்கி அந்த அறைக்குள் நுழைந்தாள். முதியவரின் முகம் சிவந்திருந்தது. பக்கத்தில் அவரது மனைவி உடல் நடுங்க நின்று கொண்டிருந்தார். சிவப்ரியாவைப் பார்த்ததும் கணவர் சற்று முறைப்புடனும், மனைவி மன்னிப்பு கேட்கும் குரலிலும் ஒரு சேர "ஒண்ணுமில்லே டாக்டர்" என்றனர்.

ஆனால் கீழே விழுந்திருந்த தட்டு இன்னமும் ஒரு நிலைக்கு வராமல் அதிர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டு வேறு கதையைச் சொன்னது. கட்டிலிலிருந்து சற்று தள்ளி அது விழுந்திருந்ததையும், அதிலிருந்த இரு சப்பாத்திகளும் திசைக்கொன்றாகச் சிதறியிருந்ததையும் பார்த்தபோது சிவப்ரியாவுக்கு விஷயம் விளங்கியது.

"என்னம்மா, காரசாரமா ஏதாவது சாப்பிடணும்னு அடம் பிடிச்சி தட்டை வீசி எறிந்தாரா?" என்ற சிவப்ரியாவின் கேள்விக்குத் தலை குனிந்தாள் அந்த முதியவள். கணவனை விட்டுக் கொடுக்கக்கூடாதாம்!

"சப்பாத்தின்னீங்க ஒத்துக்கிட்டேன். உப்பு குறைஞ்ச சாப்பாடுதான் சாப்பிடணும்



"என் மருமக வயித்துல ஒரு பூச்சி, புழு வளர மாட்டேங்குது."
"பேசாம ரேஷன் அரிசி வாங்கிக் குடுத்துப் பாரேன்."
— மதுரை என். உஷாதேவி



"பையில் பணம் இருந்தா... ஒரு ஆயிரம் ரூபா கடன் கொடேன்!"
"இப்பத்தான் எல்லாத்தையும் பேங்க்ல போட்டுட்டு வர்றேன்!"
"சரி... ஒரு பத்தாயிரம் ரூபாய் கடனுக்கு செக் கொடு!"
— எஸ். வீமராஜன்

னீங்க. அதுக்கும் சரின்னேன். ஆனா ஊறு காய் கூட கண்ணிலே காமிக்க மாட் டேன்னா எப்படி?'' என்றார் உறுமலாக. இதுவரை நாக்கைக் கட்டுப்படுத்தாமலேயே வாழ்ந்து விட்டவர். உயர் ரத்த அழுத்தம் ஏற்பட்டு, 210யைத் தாண்டி இடது காலும் கையும் வேகமாக அடித்துக்கொள்ளும் நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டவர். மேலும் தாமதமாகியிருந்தால் பக்கவாதத்தில் இழுத்து விட்டிருக்கலாம். இப்போது சற்று குணமான தெம்பில் மனிதருக்கு ஊறுகாய் கேட்கிறது.

"ஊறுகாய்தானே? நீங்க தாராளமா சாப் பிடலாம் சார். ஏன், ஊறுகாய்க்குக்கூட சாதத்தைத் தொட்டுக்கலாம். என்ன, ரத்த அழுத்தம் எகிறும். தலை சுத்தும். மிஞ்சிப் போனா மாரடைப்பு உண்டாகும். அவ்வளவுதானே. உடனே இங்கே வந்தீங் கன்னா நாங்க பிழைக்க வைக்க முயற்சிக்க மாட்டோமா என்ன?"

சிவப்ரியாவின் அதிர்ச்சி வைத்தியத்தில் அந்த முதியவரின் முகம் வெளிறிப் போனது. அவளுக்குத் தெரியும், இதுபோன்ற நபர்கள் குழந்தையைப் போன்றவர்கள். 'குழந்தைப் பருவத்தில் இறைவனிடம் பயபக்தி இருக்கும். நாளடைவில் பயம் மறைந்துபோய் பக்தி மட்டுமே தங்கும்' என்பார்கள். அதுபோல இது போன்றவர்களிடம் முதலில் தவறான பழக்கத்தால் உண்டாக்கக்கூடிய விளைவு களைப் பற்றிச் சற்றாவது கிலியை ஊட்ட வேண்டும். பிறகு விளக்கிச் சொன்னால் அவர்கள் மனத்தில் அது பதியும்.

"கவலைப்படாதீங்க. உங்களுக்கு அப்படி எதுவும் ஆகாது. ஏன்னா நீங்க உணவிலே கட்டுப்பாடோடுதானே இருக்கப் போறீங்க? உங்க உடம்பைப் பற்றி எங்களைவிட உங் களுக்குத்தானே அக்கறை அதிகமாக இருக் கும்? சார், ரத்த அழுத்தம்னா என்ன தெரி யுமா? அது எப்படி இதயத்தைப் பாதிக்கும் தெரியுமா? இப்ப உங்க விஷயத்தையே எடுத்துக்குவோம்.''

சிவப்ரியா எளிய முறையில் விளக்க, அந்த முதியவரும் அவரது மனைவியும் வெகு சுவாரசியமாக அதைக் கேட்கத் தொடங் கினர்.

அதே அறையின் மற்றொரு கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த இளைஞனும் அதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தான் என்பது பிறகு புரிந்தது.

''என்ன மிஸ்டர் ராகவ், எப்படி யிருக்கீங்க?'' என்று அவனை சிவப்ரியா விசாரித்தபோது, "அதை நீங்கதான் சொல் லணும். பை தி வே, உங்க ரத்த அழுத்த லெக் சர் பிரமாதம்'' என்றான்.

உற்சாகமான இளைஞன். மாவட்ட அளவில் டேபிள் டென்னிஸ் விளையாடுமளவுக்கு வல்லவன். 'ஹெர்னியா' வுக்காக சிகிச்சைக்கு சேர்ந்திருக்கிறான். நேற்றே ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. நாளைக்கு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு விடுவான்.

''டாக்டர் உங்ககிட்டே எனக்கு நாலு விஷயம் பிடிச்சிருக்கு. ஒண்ணு, உங்களுடைய கடமை உணர்ச்சி. இன்னொண்ணு, நோயாளிகளை அவங்கவங்களுக்குத் தகுந்த மாதிரி டீல் செய்யும் சாமர்த்தியம். மூணா வது, உங்க கறுகறுப்பு. ஒருநாளைக்கு ஆறேழு தடவையெல்லாம் வந்து பார்த்து விசாரிக் கிறீங்க.''

புன்னகை செய்தபடியே சிவப்ரியா கிளம்ப, எதிர்ப்புறம் ராம்ஷேகர் அந்த அறைப் பக்கம் வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

''நாலாவது என்னன்னு நீங்க கேட் கல்லியே? நீங்க கேட்கல்லேன்னாலும் நானே சொல்றேன். 'என்னை யாருன்னு நினைச்சே?'ன்னு வில்லனைத் திரும்பிப் பார்ப்பீங்களே, அப்போ உங்க முகபாவம் அற்புதம்.''

சிவப்ரியா கூச்சத்தில் தலைகுனிய, கேட் டுக் கொண்டே உள்ளே நுழைந்த ராம்ஷேகர் கோபத்தை மறைத்தபடி அவனைப் பார்த்து "என்ன விமர்சனம் செய்யறீங்க?'' என்று கேட்க, "போனவாரம் தியேட்டரிலே இவங்க நடிச்ச படத்தைப் பார்த்தேன். அதுதான்...''

ராம்ஷேகர் சிவப்ரியாவை உற்றுப் பார்த்தார். இப்போது கோபத்தை அவர் மறைத்துக் கொள்ள முயலவில்லை. "இது வரை இந்த க்ளினிக்கிலே தியேட்டர்னா அது ஆபரேஷன் தியேட்டராதான் இருந்து வந்தது'' என்றார் முகம் சிவக்க.

சிவப்ரியாவின் முகம் வேதனையில் துடித் தது.

(தொடரும்)

விவசாய ஜான்ஸி ராணி!

ஜான்ஸிராணியின் தந்தை சந்திரனுக்கு ராணுவத்தில் வேலை. பல வருடங்கள் வடக்கேதான் வாசம். பள்ளி விடுமுறைக்கு, தாத்தா ஊரான நெல்லை மாவட்டம் மேசியாபுரத்துக்கு ஆர்வத்துடன் வருவார். தாத்தாவுடன் வயல்காட்டுக்குப்போய் உழுவது, நாற்று நடுவது, களை பிடுங்குவது, மருந்து அடிப்பது என்று சுறுசுறுப்பாக விவசாய வேலைகளைப் பார்ப்பார்.

திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தாயான நிலையில் தமது சொந்தக் காலிலேயே நிற்க வேண்டிய நிலைமை வந்தது ஜான்ஸிராணிக்கு. தந்தையும் ஓய்வு பெற்றுவிட, கிராமத்திற்குத் திரும்பிய இருவரும் குடும்பத்திற்குச் சொந்தமாக இருந்த ஐந்து ஏக்கர் நிலத்தில் தீவிர விவசாயத்தில் இறங்கினார்கள்.

நெற்பயிர் போட்டால், அதைக் களத்து மேட்டுக்குக் கொண்டு வரும் வரை பல சோதனைகள். கடைசியில் கணக்குப் பார்த்தால் ஒன்றும் மிஞ்சாது. கிணற்றுத் தண்ணீரை நம்பித்தான் விவசாயம். மழையும் பொய்த்துப் போகும் சமயத்தில் கிணற்றில் தண்ணீர் பாதாளத்துக்குப் போய்விடும். பயிர் வாடும். கடன் வாங்கி இரண்டாவது கிணறு வெட்டியும் பயனில்லை.

மகனுக்கு நல்ல கல்வி கொடுக்க வேண்டுமென்ற ஆசையில் ஜான்ஸிராணி அவனைத் தொலைவில் ஒரு ஹாஸ்டலில் சேர்த்துவிட சில சமயங்களில் ஹாஸ்டல் கட்டணம் கட்டக்கூட, சிரமப்பட வேண்டியதாகி விட்டது. ஒரே ஆற்றாமைதான். அப்போதுதான் அந்த வாய்ப்பு ஜான்ஸிராணியைத் தேடி வந்தது.

டென்மார்க் நாட்டு உதவியுடன் தமிழக அரசின் விவசாய இலாகா சிறு விவசாயிகளுக்கு 'தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்' என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வந்தது. விவசாயத் தொழிலில் அடிப்படை விஷயங்களைப் பற்றிய ஐந்து நாள் பயிற்சி. ஏற்கெனவே வேறொரு திட்டத்தில் விவசாய அதிகாரியிடம் பயிற்சி பெற்ற சந்திரன், பண்ணை மகளிர் பயிற்சிக்கு மகளை அனுப்பத் தீர்மானித்



தார். ஜான்சி ராணிக்கு ஏக சந்தோஷம்.

"சும்மா நிலத்தை வைத்துக்கொண்டு ஆட்களை வைத்து வேலை வாங்குபவராக இருக்கக் கூடாது; நேரடியாக விவசாய வேலை செய்யும் பெண்மணியாக இருந்தால் மட்டுமே பயிற்சி" என்று சொன்னார்கள். அது மட்டுமல்லாமல் தடாலடியாக வயலுக்கே வந்து சோதித்தும் பார்த்தார்கள். அவர்கள் வரும்போது நான் தக்காளி தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தேன். 'சேற்றில் கால் வைத்து வேலை செய்பவள்'



என்று தெரிந்தவுடன் பயிற்சிக்கு 'ஓ.கே' சொல்லி விட்டார்கள்" என்கிறார் ஜான்ஸி ராணி.

"பயிற்சி கொடுத்தவர்கள் பெண் அதிகாரிகள் என்பதால் நெருங்கிப் பழகி பல சந்தேகங்களுக்குத் தெளிவு பெற முடிந்தது. விவசாயத் துறையில் மிகவும் போற்றக்கூடிய வகையில் வாங்குகின்ற ஆஸ்பி எல்.எம். படேல் விருது சென்ற வருடம் கிடைத்ததென்றால் அதற்கு முழு காரணம் நான் பெற்ற அடிப்படை பயிற்சிதான். ஒவ்வொரு சோதனையான கட்டத்திலும், சவால்களைச் சந்திப்பதற்குத் துணையாக நின்று, சாதனைகளைச் செய்ய ஊக்கம் கொடுத்தவர்கள் விவசாய இலாகா அதிகாரிகள்" என்று நெகிழ்வுடன் கூறுகிறார் ஜான்ஸி ராணி.

கடந்த ஆண்டில் அகில இந்திய அளவில் சிறந்த பெண் விவசாயியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் ஜான்சிராணி. வெறும் விருது மட்டுமல்ல; ஒரு லட்சம் ரொக்கப் பரிசும் உண்டு.

விருதைப் பெற ஜான்ஸி ராணி தகுதியானவர்தானா என்று சங்கரன்கோயில் அருகிலுள்ள மேசியாபுரம் கிராமத்துக்கே மும்பையிலிருந்து நேரிடையாக வந்து சோதனை செய்திருக்கிறார்கள்.

ஜான்ஸிராணியின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்த அந்தப் பயிற்சியில் என்னதான் சொல்லிக் கொடுத்தார்கள்?

"செலவில்லாமல் லாபம் தரும் விவசாயம் செய்வதெப்படி என்பதுதான் பயிற்சியின் மையக் குறிக்கோள்" என்றார் ஜான்ஸிராணி.

மண் வளம் பாதுகாத்தல், பயிர் சுழற்சி முறை, விதை நேர்த்தி, மானாவாரி பயிர் சாகுபடி, தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது எப்படி, நாற்று நடுவது, பூச்சிகளைத் தடுப்பது என்று பலவிதமான பயிற்சிகள்.

"உதாரணமாக 'நெல் வயலில் நரி ஓடக் கூடாது; நண்டுதான் ஓடணும்' என்பார்கள். அந்த அளவிற்கு நெருக்கி நாற்றுக்களை நட வேண்டும். அதேபோல மண் வளம் பாதுகாத்தல் பற்றி கொடுத்த பயிற்சி எனக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. குறிப்பாக ரசாயன உரங்களுக்குப் பதில் மண்புழு உரம், தொழு உரம் ஆகியவற்றைப் பயன்படுத்தினால் அதிக மகசூலுடன் விளை பொருள்களும் நல்ல சத்து + ருசியோடு

இருக்கும் என்று வலியுறுத்தப்பட்டது. அதன் காரணமாக இயற்கையாகவே மண்ணில் இருக்கும் சத்தும் அப்படியே அழியாமல் இருக்கும். தண்ணீர் குறைவான அளவில் தேவைப்படும் மா, சப்போட்டா, நெல் போன்ற மரங்களை வைத்து விவசாயம் செய்தால் லாபம் ஈட்டலாம் என்றும் விளக்கினார்கள். அந்த மரங்களுக்கிடையில் ஊடு பயிர்களாக கத்திரி, வெங்காயம், பருப்பு என்று சுழற்சி முறையில் பணம் கொடுக்கும் பயிர்களை மாற்றி, மாற்றிப் போடலாம் என்றும் சொல்லிக் கொடுத்தார்கள். என்னுடன் கிராமத்தைச் சேர்ந்த வேறு நான்கு பெண்களும் கலந்து கொண்டார்கள்."

மண்ணைப் பொன்னாக்க வேண்டுமென்றால் ரசாயன உரங்களைக் கூடுமான வரையில் தவிர்க்க வேண்டும் என்ற ஆலோசனையைச் செயல்படுத்திப் பார்க்க முனைந்தார் ஜான்ஸிராணி. வீட்டிலேயே மண் புழு உரம் தயாரிக்கத் துவங்கினார். 45 நாட்களில் ஒரு டன் உரம் தயாரிக்க முடிந்தது. தேவைக்கு எடுத்துக் கொண்டது போக உபரி உரத்தை விற்க முடிந்தது.



"நெல் வயலில் நரி ஓடக் கூடாது; நண்டுதான் ஓடணும்"

ரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதை அறவே ஒழித்தார். வேப்பஞ் சாற்றைப் பூச்சிக் கொல்லியாகவும் பயன்படுத்தினார். பயிரைக் கெடுக்கும் பூச்சிகளை ஒழிக்க, விவசாய இலாகாவிடம் இருந்து, ஒட்டுண்ணிகளை வாங்கி வயலில் விட்டார். கெடுதல் செய்யும் பூச்சிகளை அழிக்கும் கமாண்டோக்கள்தான் இந்த ஒட்டுண்ணிப் பூச்சிகள். இப்படி ஒரு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை அனுசரித்ததால் மகசூல் அள்ளிக் கொட்டியது.

"நாட்டுக் காய்கறிகளைத் தவிர மலை சார்ந்த காய்கறிகளான காலிஃபிளவர், முள்ளங்கி, பீட்ரூட், பீன்ஸ் ஆகியவைகளைப் போட்டும் வெற்றிகரமாக மகசூல் கண்டுள்ளேன்... இதைத் தவிர மலர் விவசாயமும் செய்கிறேன். விவசாயிகள் பயிர் சுழற்சி முறையைக் கடை பிடித்தால் லாபம் ஈட்டலாம்" என்கிறார் ஜான்ஸிராணி.

பண்ணை மகளிர் திட்டத்தில் பயிற்சி பெற்ற ஜான்ஸிராணி உட்பட ஐந்து பெண்கள் ஆளுக்கொருவராக மேலும் ஐந்தைந்து பேர்களுக்குப் பயிற்சி கொடுத்தார்கள். இது போல பயிற்சி பெற்ற பெண்கள் எண்ணிக்கை அதிகரிக்க, அதிகரிக்க, 20 பெண்கள் கொண்ட சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இன்று மேசியாபுரம் பகுதியில் நான்கு சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. சிக்கனமாகத் தண்ணீர் செலவழித்து, சிறந்த பயிர் பாதுகாப்பு முறையை அனுசரித்து, விவசாயம் செய்வதைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் இவர்கள். தோட்டத்தில் விளையும் காய்கறிகளை, முதல் நாள் மாலை பறித்து வைத்து, மறுநாள் விடியலிலேயே, பேருந்துகளில் சங்கரன் கோயில் உழவர் சந்தைக்குக் கொண்டு சென்று விடுகிறார்கள். பத்து மணிக்கு வீடு திரும்பும்போது களைப்பையெல்லாம் போக்கும் விதமாக கையில் பணம் புரள்கிறது.

சுய உதவிக் குழுக்களின் கூட்டம் அடிக்கடி கிராமத்தில் நடக்கிறது. முதலில் விவசாயத்தில் எதிர்கொள்ளும் பிரச்னைகளைப் பற்றி விவாதம் நடக்கிறது. அதன் பிறகு உறுப்பினர்களின் கொடுக்கல்- வாங்கல் பற்றிய பேச்சு. உறுப்பினர்களிடம் மாதம் ஒரு தொகை பங்குப் பணமாக வசூலிக்கப்பட்டு அதன்மூலம் தேவைப்படுபவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கப்படுகிறது. ரேஷன் கடை, தெரு விளக்குகள் போன்ற பிரச்னைகளும் அலசப்படுகின்றன.

பால் கூட்டுறவு சங்கம் பிரச்னையாகவே, பெண்களே ஒரு சங்கம் துவங்க அனுமதி வாங்கி விட்டார்களாம். அது மட்டுமல்லாமல் உறுப்பினர்களுக்குக் கால்நடை வளர்ப்பில் பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜான்ஸிராணியின் உழைப்பைப் பார்த்து மேலும் பத்து ஏக்கர் நிலத்தை அவருக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார், அவரது தந்தை!

— **ப்ரியன்**

படங்கள்: **ராஜன்**



"கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில்
விளம்பரம்
செய்ய ரூ.1250/-
மட்டுமே. செய்து
பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.
போன்: 2345622, 2345623

---

40 மணி நேரத்தில் நீங்கள் சரளமாக இங்கிலீஷ் பேசலாம்


New Batches commencing on 6.8.2001 & 11.8.2001

11.8.2001க்குள் பெயரை முன்பதிவு செய்து ஒரு Word Power Book இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்.

இங்கிலீஷ் எழுத, பேச

VIVEKANANDA INSTITUTE

134/4, R.H. ROAD,
LUZ, MYLAPORE. Ph: 4987303



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
42, காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம் – 612 001.
Website : www-Kumbakonamonline.com/vedapadasala

☎ : (0435)
Off : 425948
Fax : 423777
Patasala : 422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்ககும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 457 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 171 மாணவர்களுக்கு 14 வேத, சாஸ்திர அத்யாபகர்கள், புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். *புதிய பாடசாலை கட்டிட நிர்மாணப்பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நன்கொடை வரவேற்கப்படுகிறது.*

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு திட்ட விபரங்கள்	ஒரு முறைக்கான நன்கொடை தொகை (One Time)	நிரந்தர வைப்பு நிதி 'Corpus Fund'
ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs. 500	Rs. 5000
அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) த்வாதசி ஸமாராதனைக்கு	Rs. 1,500	Rs.15,000
பௌர்ணமி ஆயுஷ்ய ஹோமம்	Rs. 1,000	Rs.10,000
ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs. 1 Lakh

Cross செய்யப்பட்ட D.D.-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

எல்லாம் உன் சுவை

இன்பத்துக்கும் துன்பத்துக்கும்
காரணம் சொல்ல ஆளில்லை.
இயந்திர வெளியில் தர்மத்துக்கு
அர்த்தமே புரியவில்லை.
யாருமே இல்லாதது போலிருந்தது

இறையே! அழகே!
நீ வந்தாய்,

எல்லோரும் இருப்பது தெரிகின்றது.
இதோ சிலர் சிரிக்கிறார்கள்,
சிலர் அழுகிறார்கள்,
எல்லாம் தெரிகின்றது.

அன்பான நெஞ்சங்கள்
கண் பதிக்கிறார்கள்;
கை குலுக்குகிறார்கள்;
ஏதோ அவசரத்தில்
கால் பதித்தும் செல்கிறார்கள்.

அதனாலென்ன?

என் கண்ணீருக்கும் சிரிப்புக்கும்
பொருள்தர
நீ இருப்பதால் அல்லவா,
அவர்கள்
கண்பதிப்பதும் கால் பதிப்பதும்
தெரிகின்றது!

வாழ்க்கை இருப்பது
தெரிகின்றது.

எல்லாம் உன் சுவை.

- ஹரி




புத்தம் புதிய
தேங்காய்பால்
வேண்டிய திடனில்
நொடியில் தயார்
பலவித உணவுவகைகள்
மற்றும் பானங்கள் தயாரித்திட
Palmo
COCONUT MILK POWDER
✓ Convenient
✓ Economical
✓ Hygienic
✓ Bio Friendly
Palmo
150g
For Trade Enquires :
Shriram Coconut Products Ltd
Batlagundu -624 202
Ph : 04543-22234 / 22381
Fax : 22572
Senior Manager (Merchandise)
Chennai - 600 024
Ph : 4881152 / 98410-48152
E-mail : sriramco@md3.vsnl.net.in


அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு
நம்பகமான ஒரே கூந்தல் தைலம்
குண கூந்தல் தைலம்
குண கூந்தல் தைலம் தொடர்ந்து உபயோகிப்பதால்
• கூந்தல் நீண்டு கருமையாக இருப்பதற்கு, கூந்தலில் உள்ள மெலனின் என்ற பொருளுக்கு அதிக சக்தி அளிக்கிறது.
• முடி உதிர்தல், செம்பட்டை நிறம், பித்த நரை, தலை அரிப்பு, பொடுகு மற்றும் சொறிந்தால் செதில் உதிர்வதையும் தடுக்கின்றது.
• தலைவழுக்கை ஏற்படாமல் பாதுகாக்கும் டிரிப்டோபன் சக்தியை அதிகரிக்கிறது.
• 30 வருட அனுபவமும் சித்த மருத்துவ சாஸ்த்திர முறைப்படி தயாரிக்கப்படுவதால் எந்தவித பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தாது.
• பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் உபயோகிக்கலாம்.
குண கூந்தல் தைலம்
விபரங்களுக்கு :
Agasthiar Pharmaceuticals
Post Box No: 588, Salem - 636 005.
Bangalore Branch: No. 37, South End Road,
Basavanagudi, Bangalore - 560 004 Ph : (080) 6767882
இப்பொழுது 'பெட்' பாட்டில்களில் கிடைக்கிறது
என்றும் இளமையோடு மிளிர, உபயோகிப்பீர் குண கூந்தல் தைலம்





'சுவாமி' மஞ்சுநாத்!

மறைந்த எழுத்தாளர் ஆர்.கே. நாராயணை எப்படி மறக்க முடியாதோ அதேபோல் அவருடைய 'மால்குடி டேஸ்' சின்னத் திரையில் ஒளிபரப்பான போது அதில் 'சுவாமி' யாக நடித்த மாஸ்டர் மஞ்சுநாத்தையும் மறக்க முடியாது.

மால்குடி ரயிலுடன் போட்டி போட்டுக் கொண்டு வெறுங்காலுடன் ஓடிய மஞ்சுநாத் இப்போது எப்படியிருக்கிறார்?

25 வயதாகும் மஞ்சுநாத்துக்கு திருமணமாகிவிட்டது. பெங்களூரில் உள்ள டி.சி.எஃப் சாஃப்ட்வேர் கம்பெனியில் பணியாற்றி வருகிறார்.

"என்னுடைய வாழ்க்கையில் எதுவுமே திட்டமிட்டு நடந்ததில்லை. என் பெற்றோரின் நண்பரொருவர் என்னுடைய துடுக்கான பேச்சைக் கண்டு முதன் முதலாக 'ஜக்கு' என்ற கன்னடப் படத்தில் நடிக்க வைத்தபோது எனக்கு மூன்று வயது. சூப்பர் ஹிட்டான அந்தப் படத்தைத் தொடர்ந்து சங்கர் நாக் 'ஹொசா தீர்ப்பு' என்ற படத்தில் நடிக்க வைத்தார். பத்தாவது வயதில் தான் 'மால்குடி டேஸ்' தொடரில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதற்குள் 68 படங்களில் நடித்து முடித்து விட்டேன்'' என்று சொல்லும் மஞ்சுநாத் நடித்த 'ஸ்வாமி அண்ட் ப்ரண்ட்ஸ்'

தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் ஆறு விருதுகளைப் பெற்றதோடு லண்டனில் நடந்த திரைப்பட விழாவொன்றில் விருது பெற்ற முதல் இந்தியத் திரைப்படம் என்ற பெருமையையும் பெற்றது. சுமார் 178 நாடுகளில் திரையிடப்பட்ட 'சுவாமி' பின்னர் ஒவ்வொருவர் இல்லத்திலும் குறிப்பிட்டுச் சொல்லும் பெயராக மாறிவிட்டது. இவரது நடிப்பைப் பாராட்டி தினமும் அறுநூறு கடிதங்கள் வந்த காலமும் உண்டு..

''தொப்பியையும் வேட்டியையும்

அணிந்து கொண்டு நடித்தது உண்மையி லேயே எனக்கு அசௌகரியமாக இருந்தது. ஷிமோகாவில் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது ரொம்ப பொறுக்க முடியாமல் போகவே நடிக்க மறுத்துவிட்டேன். சங்கர்நாக், கொஞ்சமும் கோபப்படாமல் எனக்காக படப்பிடிப்பை ரத்து செய்ததோடு, என்னை மணிபால் கடற்கரைக்கு அழைத்துச் சென்று மகிழ்வூட்டி, தாஜா செய்து அழைத்து வந்தார். மீண்டும் படப்பிடிப்பைத் தொடங்கியபோது பதினான்கு நாட்களில் முடிக்க வேண்டிய ஷூட்டிங், ஏழே நாட்களில் முடிக்கப்பட்டது. சில சமயங்களில் என்னைப் பள்ளிக்கூடத்திற்கே வந்து அனுமதி பெற்று அழைத்துச் சென்றதும் உண்டு. அப்போதெல்லாம் எனக்கு அநேகமாக கிடைத்த பரிசு ஐஸ்கிரீம்தான்!'' என்று சொல்லி சிரிக்கிறார் மஞ்சுநாத்.

குழந்தை நட்சத்திரமாக இருந்த பலர் மீண்டும் சினிமாவுக்குள் நுழையும்போது நீங்கள் மட்டும் வேறு துறையைத் தேர்ந்தெடுத்தது ஏன்?

''எந்த ஒரு குழந்தை நட்சத்திரத்துக்கும் டீனேஜில் தேக்கநிலை ஏற்படும். 'தளபதி' படத்தில் சின்ன வயது ரஜினியாக நடிக்க அழைப்பு வந்தபோது எனக்குத் தேர்வு நேரம். பெற்றோர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. கமல்சாருக்கு, ஒரு பாலச்சந்தர் கிடைத்ததுபோல் எனக்கும் ஒரு குருநாதர் கிடைக்காமல் போனதும் காரணமாக இருக்கலாம்.''

ஆர்.கே. நாராயணை சந்தித்ததுண்டா?

சிறுவயதில் அவருடைய கதைகளில் நடித்துக் கொண்டிருந்தபோது அவரைப் பற்றி அறிந்து கொள்ளக் கூடிய பக்குவம் இருக்கவில்லை. கல்லூரியில் படிக்கும் போது அவரது 'மேன் ஈட்டர் ஆஃப் மால்குடி' என்ற நாவல் பாடப்புத்தகமாகவே இருந்தது. ஆங்கில இலக்கியம் படித்தபோது அவரது நாவல்களைப் படித்து பிரமித்தேன். 'சுவாமி அண்ட் பிரண்ட்ஸ்' தொடர் முடிவடைந்தபோது பாராட்டு விழா நடத்தினார்கள். அப்போதுதான் அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. 'சுவாமி' என்ற பாத்திரத்தை எப்படி நான் உருவகப்படுத்தியிருந்தேனோ அதேபோல் நீ நடித்திருக்கிறாய்' என்று என்னை அழைத்துப் பாராட்டினார். எத்தனையோ விருதுகளைப் பெற்றிருந்தாலும் அந்த பாராட்டுக்கு இணை எதுவுமே இல்லை.''

பேட்டி, படம்: **அ. குமார்**

முறுகலாய் மசால்தோசை!

'ரெட் ட்யூ' என்ற ஒரு வார்த்தையை மையக் கருவாக்கி, விறுவிறுப்பான வித்தியாசமான க்ரைம் தொடரை ராஜேஷ் குமாரால் மட்டுமே தர இயலும்! இரட்டை நாயனங்களாய் ஜெ மற்றும் ஜெ டிஸ்னி ஆகியோரின் ஓவியங்கள் கூடுதல் சிறப்பை அளித்தன!

நெய்வேலி,
க. சுந்தர்



கடைசி அத்தியாயத்தில் ஏகப்பட்ட ஸ்டேட்மெண்ட். எனினும் சிறிதும் குழப்பமின்றி தெளிவாக விளக்கி சுபமாக முடித்துள்ளார்.

ஈரோடு, கதி. அருணாசலம்

கடந்த இருபத்தியேழு வாரங்கள் கல்கி ஹோட்டலில் 'மூடுபனிநிலவு' மசால் தோசையை அனுபவித்து ருசித்தேன்! யமுனாவையும் வருணையும் போட்டு திருப்பி திருப்பி எடுத்து.... நல்ல முறுகலாய் தோசை செய்து... சிவப்ரகாசம், பால்பாண்டியன், ஜெனிஃபர் என்ற மசாலை, கடைசியாக உள்ளே நுழைத்து... அட்டகாசம் சார்! தோசையை ஒவ்வொரு வாரமும் திருப்பும் பொழுதும், தோசை எப்படியிருக்குமோ, தோசை எப்படியிருக்குமோ? என்று திக்குமுக்காடிவிட்டேன்.

உப்லி,
சி.ஜி.பாலசுப்ரமணியன்

குற்றவாளி யார் என்று ஊகிக்க முடியாமல் சொல்லப்பட்ட நல்லதொரு மர்மக்கதை. ஃபாரன்சிக் நிபுணரையும் வக்கீலையும் குறை கூறியது நியாயமா?

தஞ்சாவூர், ஜீ. ராமதாஸ்


சபதம்!

பாண்டவர்கள் சூதாடி அனைத்தையும் இழந்ததும் பாஞ்சாலியை சபைக்கு இழுத்து வந்து துரியோதனன் அவமானப்படுத்தினான். அப்போது பாஞ்சாலி, அர்ஜுனன், பீமன் என்று ஆளுக்கு ஆள் சபதம் போட்டார்களாம். அப்படித்தான் பிரபு வீட்டில் ஒருநாள் பிரபு, அவன் மனைவி பிரேமா, பிரபுவின் அப்பா கேசவமூர்த்தி, அம்மா லீலா சபதம் எடுத்துக் கொண்டார்கள்.

மனிதனின் அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றின் பட்டியலோடு சேர்ந்துவிட்ட தொலைக்காட்சிதான் பிரபு வீட்டின் சபதங்களுக்குக் காரணம். இன்று தமிழகத்தின் தொண்ணூறு சதவீதப் பெண்களைத் தனது கைப்பிடியில் வைத்திருக்கும் மெகா தொடர்கள் பிரேமாவையும் லீலாவையும் கவர்ந்ததில் ஆச்சர்யமில்லை.

மாமியாரும் மருமகளும் ஒற்றுமையாக அமர்ந்து ஒரு தொடர் விடாமல் பார்ப்பார்கள். விளம்பர இடைவெளியில் கதை விவாதம் நடக்கும். இனி என்ன நடக்கும் என்று பேசுவார்கள். விளம்பர இடைவெளியில் விவாதிக்க முடியாமல் போனதை, சாப்பிடும் போது விவாதிப்பார்கள்.

"பிரேமா, கல்யாணி புருஷன் வீட்டுக்கு வந்துட்டாளா இல்லையா? ரூம்ல இருந்ததால சரியா கவனிக்



ஆரணி யுவராஜ்

கலை'' என்று லீலா திடீரென ஞாபகம் வந்து கேட்பாள்.

''இன்னும் இல்லை அத்தே. அதான் பத்தாயிரத்தோடு வந்தா தான் உங்க பொண்ணை உள்ளே விடு வோம்னு அவ மாமியார் சொல்லிட்டாளே'' என்பாள் பிரேமா.


''அப்புறம்தான் நித்யா வந்து மரியாதையா கல்யாணியைச் சேர்த்துக்கங்க. இல்லே, போலீஸ்ல கம்ப்ளெயின்ட் தருவேன்னு மிரட்டினதும் பயந்து சரின்னு சொல்றாளே.''

''நேத்து அப்படிச் சொன்னா. ஆனா இன்னைக்கு மறுபடியும் பத்தாயிரம் தந்தாதான் உள்ளே சேர்ப்பேன்னு சொல்லிட்டா'' என்பாள் பிரேமா.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பிரபுவிற்கு மண்டை குழம்பும்.

''கல்யாணியா, யாரு அது?'' என்று கேட்பான்.

''சேகரோட பொண் டாட்டிங்க.''



"சேகர்?"

"ம். உங்களை மாதிரி அவனும் பேங்க்ல தான் ஒர்க் பண்றான்."

"எந்த பேங்க்?"

"தெரியலை. பேங்க்ல வேலை செய்யறதாச் சொல்வான். ஆனா பேங்க்கை காட்டினதில்லை."

"காட்டினதில்லையா?"

"பிரேமா, அவன் நிஜமாவே பேங்க்ல வேலை செய்யறானோ இல்லை, ஊர் சுத்தறானோ" என்பாள் லீலா.

"இருந்தாலும் இருக்கும். அப்படி வேலை செய்யலைன்னா நித்யா கண்டு பிடிச்சுடுவா."

"நித்யா யாரு?" என்று மீண்டும் பிரபு கேட்பான்.

"கல்யாணராமனோட பொண்ணு."

"எந்த கல்யாணராமன்?"

"ஒல்லியா உயரமா இருப்பாரே. நீங்க கூட பார்த்திருக்கீங்க."

"எங்கே?"

"அட! எத்தனையோ சினிமாவுல அப்பாவா நடிச்சிருக்காரே."

"நம்ம சொந்தத்துல யாரு சினிமாவுல நடிக்கிறது?" என்று பிரபு ஏகமாய்க் குழம்புவான்.

"டேய், டேய், அவங்க சொல்ற கல்யாணி, நித்யா, சத்யா, எல்லாம் சீரியல்ல வர்ற கேரடக்டருங்கடா" என்று கேசவ மூர்த்தி கூறி அவன் குழப்பத்தை விரட்டுவார்.

"அடச்சீ! நான் என்னமோ நம்ம சொந்தக்காரங்க பத்திதான் பேசறதா நினைச்சேன்" என்று எரிச்சலுடன் கூறுவான்.

"சொந்தத்துல நடந்தா கூட இவ்வளவு அக்கறையா பேச மாட்டாங்கடா. நேத்து நடு ராத்திரி உன் அம்மா திடீர்னு 'முத்துசாமிக்கு ஆக்ஸிடென்ட் ஆயிடிச்சிங்க. பாவம், என்ன ஆச்சுன்னே தெரியலை. அதுக்குள்ளே தொடரும்'ன்னு போட்டுட்டான்னு சொல்றா" என்றார் கேசவ மூர்த்தி.

"வரவர ரெண்டு பேரும் சீரியல் பைத்தியமாயிட்டீங்க. கனெக்ஷனை எடுத்துடறேன்."

"எங்களுக்கு இருக்கிற ஒரே பொழுது போக்கு அதுதான். அதையும் எடுத்துடுங்க" என்று ரோஷமாகக் கூறுவாள் பிரேமா.

"பொழுது போக்கா பார்த்தா பரவாயில்லை. பொழுதுக்கும் அதையே பார்த்துட்டு இருந்தா என்ன அர்த்தம்? நான் பல தடவை கவனிச்சு இருக்கேன்.. திரிஷாவுக்குச் சாப்பாடு ஊட்டறப்ப கூட டி.வியைப் பார்த்துக்கிட்டே ஊட்டறே. அது 'ஆ'ன்னு வாயைத் திறக்குது. நீ அந்த நேரம் பார்த்து 'ஆ'ன்னு வாயைத் திறந்துகிட்டு டிவியைப் பார்க்கறே. அது சலிச்சுப் போய் வாயை மூடின பிறகு கட்டாயப்படுத்தி அடிச்சு, அழ வைச்சு ஊட்டறே" என்று கோபமாகக் கூறினான் பிரபு.

"எப்போ அப்படிச் செய்தேன்? சும்மா இல்லாததையும் பொல்லாததையும் சொல்லாதீங்க" என்று பிரேமா விசும்ப ஆரம்பித்தாள்.

"ஏய், நானே கவனிச்சு இருக்கேன். குழந்தைங்களுக்கு ராத்திரி எட்டு மணிக்கெல்லாம் சாப்பாடு வெச்சுடணும். அது தான் நல்லது. ஆனா நீ, பத்து பத்தரை மணிக்கு வைக்கறே. அந்த அளவு டி.வி முக்கியமா போயிடுச்சி."


"டேய் பிரபு, இப்ப எதுக்குடா தேவையில்லாமல் கத்தறே. நீ மட்டும் என்னவாம்? ராத்திரியில் எதாவது இங்கிலீஷ் படத்தைப் போட்டுப் பார்த்துக்கிட்டே இருக்கே. என்ன எழவுடா இருக்கு அதுல. 'டமால்டுமீல்'ன்னு வெடிக்கிறது, குத்தறது, கத்தறதுன்னு ஒரே இரைச்சல். உனக்கு அது பிடிச்சிருக்கில்லே. அப்படித்தான் எங்களுக்கு இது பிடிக்குது" என்றாள் பிரேமா.

"நான் ஒண்ணும் செய்ய வேண்டிய வேலையெல்லாம் விட்டுட்டு டி.வி. பார்க்கலையே."

"நாங்க மட்டும் வேலை செய்யலையா? சமைக்கறது, துவைக்கறதுன்னு எதுல குறை? உங்களுக்கு எரிச்சல். உங்களாலும் பார்க்க முடியலையேன்னு எரிச்சல்" என்றாள் பிரேமா.

"நீங்க பார்க்கிற சீரியலுங்களே எரிச்சல் தான். அதைப் பார்க்க முடியலைன்னு எங்களுக்கு எரிச்சலா?"

"சரியா சொன்னேடா. இப்ப மத்தியானத்துல ஒரு சீரியல் போடறான். அதுல வெளியூரு போன அண்ணன் செத்துட்டானாம். தம்பி வீட்ல உட்கார்ந்து அழறான். பொண்டாட்டி ஏன் அழறீங்க அப்படின்னு கேட்கறா. ஒண்ணுமில்லேங்கறான். விளம்பரம் வந்துடுது. அப்புறம் மறுபடியும் அழறான். அவ மறுபடியும்



"அத்துமீறிய கைதுகளாலே செய்தி வாசிக்கிறவர் கடுப்பாயிட்டாரா.... எப்படி?"

"தலைப்புச் செய்திகளை கலைப்புச் செய்திகள்ன்னு வாசிக்கிறாரே!"

- தஞ்சை தாமு

கேட்கறா. இதையே ஒரு வாரமா காட்டறான். இவ பார்த்துக்கிட்டு இருக்கா" என்று கேசவ மூர்த்தி சிரித்தார்.

"சிரிக்காதீங்க. நீங்க மட்டும் என்ன யோக்யம்? காலையில ராசிப்பலன், ராசிக்கல் மோதிரம், சித்த வைத்தியம்னு அறுவையைப் பார்க்கறீங்களே. ஒரு செய்தியை விடாம பார்ப்பீங்க. ஆனா அதுபத்தி ஏதாவது கேட்டா தெரியாது. சும்மா பெரிய மேதைன்னு காட்டிக்க இதையெல்லாம் பார்க்கறீங்க." இடித்தாள் லீலா.

"எங்களால இதையெல்லாம் பார்க்காம இருக்க முடியும். ஆனா உங்களால சீரியல் பார்க்காம இருக்க முடியுமா?" என்று பிரபு கேட்டான்.

"ஏன் முடியாது. பொறக்கறப்பவே டி.வியோடவா பொறந்தோம்?"

"ஓ.கே. இதை ஒரு சவாலா எடுத்துப்போம். இன்னையில இருந்து ஒரு மாசத்துக்கு நான் இங்கிலீஷ் படத்தையோ அப்பா நியூஸையோ பார்க்க மாட்டார். நீங்களும் சீரியலைப் பார்க்க கூடாது சரியா?" என்று கேட்டான் பிரபு.

"சரிடா. நாங்க பார்க்கமாட்டோம்" என்றாள் லீலா.

"பலே! இதுல இன்னும் சுவாரசியமா ஒண்ணு சேர்த்துப்போம். அதாவது டி.வி ஓடிக்கிட்டுதான் இருக்கும். சீரியலுங்களை நாங்க பார்ப்போம். அப்போ நீங்க டி.வி இருக்கிற பக்கமே வரக்கூடாது" என்றார் கேசவ மூர்த்தி.

"அப்பா, நான் வேலைக்குப் போக வேண்டாமா? சீரியலையே பார்த்தா சோறு யாரு போடறது?"

"நீ போடா. பகல்ல நான் பார்க்கறேன். ராத்திரியில சேர்ந்து பார்ப்போம்."

"அப்போ நாங்களும் நியூஸ், இங்கிலீஷ் படம்னு பார்ப்போம். அதை நீங்க பார்க்கக் கூடாது."


"ஓகே. பார்க்க மாட்டோம். இதுல யாரு தோற்றாலும் அவங்க ஜெயிச்சவங்க என்ன சொன்னாலும் செய்யணும்" என்றான் பிரபு.

இப்படித்தான் அவர்களின் சபதங்கள் ஆரம்பித்தன.

லீலா காலையில் செய்தியையும் ராசிப் பலனையும் போட்டு விடுவாள். கேசவ மூர்த்தி அறையை விட்டு வராமல் இருப்பார். பிறகு அவர் தொடர்களைப் பார்க்கும்போது இவர்கள் சமையலறையிலோ அல்லது அடுத்த அறையிலோ இருப்பார்கள். இரவு பிரேமாவுக்குத் தூக்கம் கண்களைச் செருகினாலும் பிரபுவை வெறுப்பேற்ற வேண்டும் என்பதற்காகவே புரியாத ஆங்கிலப்படங்களைப் பார்ப்பாள்.

ஒரு மாதம் ஓடிவிட்டது. இப்போது லீலாவுக்குத் தொடர்கள் மேல் ஆர்வமே இல்லை. ஆனால் செய்திகளையும் ராசிக்கல், சித்த வைத்தியம் சமாசாரங்களைப் பார்க்காமல் இருக்க முடிவதில்லை. தானே கூட ஒரு ஜெம்மாலாஜிஸ்டாகவோ அல்லது சித்த வைத்தியராகவோ தொழில் ஆரம்பித்தால் என்ன என்று நினைக்கிறாள். அந்த அளவிற்கு அத்துபடியாகி விட்டது.

பிரேமா மட்டும் என்னவாம்? ஹாலிவுட் நடிகர், நடிகைகள் அத்தனை பெயர்களும் அத்துப்படி. நம்பவே முடியாத, உடம்பு முழுக்க பூச்சுற்றும் கதைகள்தான் என்றாலும் அதை எடுத்திருக்கும் விதம் ஆச்சர்யமானதுதான். பிரேமாவின் ஒரே பிரச்னை பேசுகிற வசனங்கள் புரியாததுதான். விவேகானந்தா கல்வி நிலையத்துக்குப் புத்தகம் கேட்டு எழுதிப் போட்டிருக்கிறாள்.



"டாக்டர்னு தெரியாமல் அவர்கிட்டப் போய் பையன் படிப்பைப் பற்றிப் பேசினது தப்பாப் போச்சு."
"என்னாச்சு?"
"பையனுக்கு 'A' குரூப் கிடைக்கலைனு சொன்னதும், 'பிளட் பாங்க்ல கேட்டீங்களா?'-ங்கிறாரே!"
– சீர்காழி ரேவதி

சரி. மற்ற இருவரின் நிலை என்ன என்று கேட்கிறீர்களா? இதோ சாப்பாட்டு மேஜையில் தந்தைக்கும் மகனுக்கும் நடக்கும் உரையாடல்:

"சீக்கிரம் வரணும்னு நினைச்சேன். வழியில ஒரு ஃப்ரெண்ட் பிடிச்சுக்கிட்டு அறுத்துட்டான். ரகுபதி என்னப்பா ஆனான்? அம்மாவைக் கண்டுபிடிச்சானா இல்லையா?"

"அவன் தேடிக்கிட்டு அந்த வீட்டுக்கு வரான். அப்போதான் அவ அங்கே இருந்து வேற இடத்துக்குப் போயிடறா."

"பாவம்பா. எப்பதான் ரெண்டு பேரும் சேருவாங்களோ."

"மேலே இருக்கானே ஆண்டவன், அவன்தான் இதுக்கு முடிவு கட்டணும்." ○

சென்னை மாநகருக்கு மிகஅருகில்

சிறந்த வீட்டு மனைகள்

பிரதான அமைவிடம், வளமான முதலீடு

MMDA அங்கீகாரம் பெற்ற வீட்டு மனைகள் மிக நியாயமான விலையில்



சக்தி கார்டன்ஸ்

(இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும்
சவிதா பல் மருத்துவக் கல்லூரி சமீபம்)

சென்னை - 600 056

• கிண்டியிலிருந்தும் கோயம்பேட்டிலிருந்தும் வசதியான 100அடி ரோடு • சென்னையின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பஸ் வசதி • உத்தேசிக்கப்பட்டுள்ள பூந்தமல்லி ரயில் நிலையம் ஒரு கூடுதல் வசதி • கலைவான குடியிருப்புடன் அருகில் வீடுகளுடன் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள இந்த மனையை உடனே வாங்குவீர் • உடனே வீடு கட்டவோ அல்லது முதலீடு செய்வதற்கோ சரியான தேர்வு • சுத்தமான பத்திரம் / நம்பகமான நிறுவனம்

☆சுந்தரம் ஹோம் பைனான்ஸ் லிட் மூலமாக நிதி உதவியும் உண்டு.

மனையை பார்வையிட தினமும் இலவச வாகன வசதி 7,11 a.m & 3.00 p.m

Ph : 4357721/31 Fax.4353183 . Cell : 98400-44018 E-mail: blbestmail@vsnl.net http://business.vsnl.com/blbestates

BLB Estates (P) Ltd.

S-3,"Ramana Flats" 27, Rathna Nagar, Off Anna Salai,
(Behind Apollo Cancer Hospital), Teynampet, Chennai - 18.

நல் மதிப்பில் முதலீடு.



S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356; 475 5799
Web Page : www.svhome.org
Email: svhome@svhome.org

பொன்னியின் செல்வன்

முடிவுரை

நேயர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மூன்றரை ஆண்டு காலம் 'பொன்னியின் செல்வன்' கதையைத் தொடர்ந்து படித்து வந்ததில் நேயர்கள் காட்டிய பொறுமையையும் ஆர்வத்தையும் அன்பையும் போற்றி வணங்குகிறேன். கதை ஆரம்பித்துச் சில மாதங்கள் வரையில் நேயர்களிடையே இது இவ்வளவு ஆர்வத்தை உண்டாக்குமென்று தோன்றவில்லை. பழந்தமிழ் நாட்டுச் சரித்திரப் பெயர்கள் சிலருக்குப் பெரிதும் தலைவேதனை உண்டாக்கி வந்ததாகத் தெரிந்தது. போகப் போக, அந்த தலைவேதனையை நேயர்கள் எப்படியோ போக்கிக்கொண்டார்கள். இதற்கு முன்னால் எந்தத் தொடர் கதையையும் நேயர்கள் இவ்வளவு ஆர்வத்துடன் படித்ததில்லையென்று சொல்லும் நிலைமை வெகு விரைவில் ஏற்பட்டது. அதே ஆர்வம் தொடர்ந்து நிலைபெற்று இருந்து வந்தது.

கதை ஆரம்பித்த மறுவருடம் ஆடிப் பதினெட்டாம் பெருக்கு தினத்தில் பரமக்குடியிலிருந்து பல நண்பர்கள் கையெழுத்திட்டுப் 'பொன்னியின் செல்வன்' கதைக்குத் தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்தார்கள்.

அமரர் கல்கி

'பொன்னியின் செல்வன்' முதல் அத்தியாயம் பதினெட்டாம் பெருக்குத் திருவிழாவன்று வீர நாராயண ஏரிக் கரையில் தொடங்குகிறது அல்லவா?

பின்னர் அடிக்கடி பல நேயர்கள் கடிதம் எழுதித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டிருந்தார்கள்.

இந்தப் பாராட்டுதல்களை யெல்லாம் கதையின் ஆசிரியருக்குரியவையாக நான் கருதவில்லை. பழந்தமிழ் நாட்டின் சரித்திரத்துக்குரிய பெருமையாகவே கருதினேன். உண்மையிலேயே, தமிழ்நாட்டின் பழைய வரலாறு தமிழர்கள் மிகவும் பெருமிதம் கொள்ளக் கூடிய வரலாறுதான். சென்று சில ஆண்டுகளாகத்தான் தமிழகத்தின் பழைய சரித்திர ஆராய்ச்சி முறையாக நடைபெற்று வருகிறது. கல்வெட்டுக்களும் செப்புப் பட்டயங்களும் படிக்கப்பட்டு வருகின்றன. வரலாற்று ஆராய்ச்சியாளர் அந்த ஆதாரங்களை வைத்துத் தமிழகத்தின் சரித்திரத்தை அங்கங்கே பகுதி பகுதியாக நிர்மாணித்து வருகிறார்கள்.

சரித்திரத்தின் எந்த ஒரு காலப் பகுதியைப் பற்றியும் பரிபூரணமாகவும் ஐயந்திரிபுக்கு இடமின்றியும் வரலாறு எழுதப்பட்டு விட்டதாகச் சொல்வதற்கில்லை.

ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்னால் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு நீடித்து அரசு புரிந்த பல்லவ சக்கரவர்த்திகளின் வரலாறு ஓரளவு ஆராயப்பட்டிருக்கிறது. அந்த இருநூறு ஆண்டுகளைப் பற்றிய சரித்திர வரலாற்று விவரங்கள் நன்கு தெரிய வந்திருக்கின்றன.

பின்னர், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கி முந்நூறு ஆண்டு புகழுடன் விளங்கிய விஜயாலய சோழ பரம்பரையின் காலத்து நிகழ்ச்சிகளும் ஓரளவு ஆராயப்பட்டிருக்கின்றன. இக் காலத்து நிகழ்ச்சிகளைப் பற்றித் திட்டமாக நிர்ணயிக்க முடியாதபடி பல ஐயப்பாடுகள் தோன்ற இடமிருக்கிறது. ஆயினும், சில சரித்திரச் சம்பவங்கள் மறுக்க முடியாத தகுந்த ஆதாரங்களுடன் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றுள் எல்லாம் மிக முக்கியமானது, தமிழகத்துக்கு இணையற்ற பெருமையை அளிக்கக்கூடியது, உலக சரித்திரத்திலேயே ஒப்பற்ற சம்பவம் என்று கொண்டாடுவதற்குத் தகுதியானது ஒன்று உண்டு. சுந்தர சோழரின் இரண்டாவது திருக்குமாரனாகிய அருள்மொழி வர்மன், (பிற்காலத்தில் **இராஜ ராஜ சோழன்** என்று புகழ் பெற்ற பேரரசன்.) இளம் பிராயத்தில் தான் எளிதில் பெற்றிருக்கக் கூடிய சோழ சாம்ராஜ்யத்தை வேண்டாம் என்று மறுத்து, உத்தம சோழனுக்குப் பட்டம் கட்டி வைத்ததுதான்.


''சுந்தர சோழருக்குப் பின்னர் அவனுடைய மகன் அருள்மொழி வர்மனே சோழ சிங்காதனம் ஏறி அரசாள வேண்டும் என்று சோழ நாட்டு மக்கள் பெரிதும் விரும்பினார்கள். ஆயினும் அருள்மொழி வர்மன் தன் பெரிய பாட்டனாகிய கண்டராதித்தனுடைய புதல்வனும் தனக்குச் சிறிய தகப்பன் முறையிலிருந்தவுமான உத்தம சோழனுடைய உரிமையை மதித்து அவனுக்கு முடிசூட்டி வைத்தான்'' என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் அறுதியிட்டு உறுதி கூறுகின்றன.

இந்த நிகழ்ச்சியை மற்றும் பல செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் அந்தக் காலத்தில் அறிஞர்கள் பலரால் எழுதப்பட்ட நூல்களும் உறுதிப்படுத்துகின்றன.

அருள்மொழி வர்மன் திருமுடி சூட்டிக் கொள்ள வேண்டுமென்று இராஜ்யத்தின் மக்கள் விரும்பினார்கள்; உற்றார் உறவினர் விரும்

பினார்கள்; அக்காலத்தில் மிக்க வலிமை பெற்றிருந்த சோழப் பெரும் படையின் வீரர்கள் அனைவரும் விரும்பினார்கள்.

அவ்வாறு எல்லாவித ஆதரவும் அநுகூலங்களும் அருள்மொழி வர்மனுக்கு இருந்தும்,



• திருவாலங்காட்டுச் செப்பேடுகள்

அவன் சாம்ராஜ்யத்தை உத்தம சோழனுக்கு அளித்துப் பட்டம் கட்டுவித்தான்.

உலக சரித்திரத்திலும் காவிய இதிகாசங்களிலும் இதற்கு ஒப்பான இன்னொரு அரும் பெரும் செயலைக் காணுதல் அரிது.

அசோக சக்கரவர்த்தி கலிங்க நாட்டுப் போரில் மகத்தான வெற்றி அடைந்த பிறகு, ''இனி யுத்தமே வேண்டாம்'' என்று முடிவு செய்ததைத் தான் அருள்மொழி வர்மன் தியாகத்துக்கு இணையாகக் கூறலாம்.

'பொன்னியின் செல்வன்' கதையில் சிகரமான சம்பவம் அருள்மொழி வர்மனின் ஒப்பற்ற தியாகமேயாகும். கதையில் வரும் சகல நிகழ்ச்சிகளும் இந்த மகத்தான சம்பவத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றன. அதனாலேயே இக்கதையின் ஐந்தாவது பகுதிக்குத் 'தியாக சிகரம்' என்று பெயர் தரப் பட்டது.

இக்கதையின் சிகரமான நிகழ்ச்சி பொன்னியின் செல்வன் செய்த சாம்ராஜ்ய தியாகந்தான் என்பதைக் கதையைப் படித்து வந்த நேயர்கள் அனைவரும் உணர்ந்திருப்பார்கள் என்றே நம்புகிறேன். யாராவது அதை அறியவில்லையென்றால், அதற்குக் காரணம் ஆசிரியருடைய ஆற்றல் குறைவு என்றே சொல்ல வேண்டும்.



அந்தக் குறையைக் கதை ஆசிரியர் தாழ்மையுடன் ஒப்புக்கொண்டு நேயர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டியதுதான்.

'பொன்னியின் செல்வன்' கதை வெளியாகி வந்த போதெல்லாம் நேயர்கள் ஒப்பற்ற ஆர்வம் காட்டி வந்தார்கள். பலர் பாராட்டிக் கடிதங்கள்



எழுதி உற்சாகப்படுத்தியும் வந்தார்கள். நேயர்களிடமிருந்து வந்த கடிதங்களில் அப்போதெல்லாம் கருத்து வேற்றுமையே காணப்படவில்லை.

கதை முடிவடைந்த பிறகும் நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்திருக்கின்றன. இக் கடிதங்களில் பெரிதும் கருத்து வேற்றுமை காணப்படுகிறது. பாதிப் பேர் கதையைப் பாராட்டிக் கதை முடிவையும் பாராட்டியிருக்கிறார்கள். இன்னும் பாதிப் பேர் கதை முடிந்த விதத்தைக் குறை கூறியிருக்கிறார்கள். சட்டென்று முடித்து விட்டதற்காகவும் பல கதாபாத்திரங்கள் பின்னால் என்ன ஆனார்கள் என்று சொல்லாமலே கதையை முடித்து விட்டதற்காகவும் வருந்தியிருக்கிறார்கள். காரசாரமாகக் கண்டனங்கள் எழுதியிருப்பவர்களும் உண்டு.

கண்டனமாகவும் குறை சொல்லியும் எழுதியிருப்பவர்கள் அனைவரும் கதையை இன்னும் வளர்த்தி எழுதியிருக்கலாம் என்றே அபிப்பிராயம் தெரிவித்திருப்பதை எண்ணி ஒருவாறு திருப்தி அடைகிறேன். மூன்றரை ஆண்டு தொடர்ந்து வெளியாகி வந்த கதையைக் குறித்து அலுப்பு அடைந்து "எப்போது முடிக்கப் போகிறீர்?" என்று கேளாமல், "ஏன் இப்படி திடுதிப்பென்று முடித்து விட்டீர்? ஏன் மேலும் வளர்த்தி எழுதியிருக்கக் கூடாது?" என்று நேயர்கள் கேட்பது ஒருவாறு மகிழ்ச்சி அடைவதற்குரிய நிலைமைதான். ஆயினும் நேயர்களில் ஒரு பெரும் பகுதியினரைத் திருப்தி செய்ய முடியாமற் போனது பற்றி வருந்துகிறேன்.

'பொன்னியின் செல்வன்' கதையை இப்போது முடித்திருப்பது போல் முடித்ததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு.

1) முன்னமே குறிப்பிட்டது போல்,

கதையில் சிகரமான நிகழ்ச்சி பொன்னியின் செல்வன் தன் கையில் கிடைத்த மகா சாம்ராஜ்யத்தைத் தியாகம் செய்து இன்னொருவருக்கு முடி சூட்டியதேயாகும்.

ஆகையால், அந்தப் பெரு நிகழ்ச்சிக்குப் பிறகு கதையை வளர்த்திக் கொண்டு போவது ஆங்கிலத்தில் சொல்லப்படுவது போல், 'கிளைமாக்ஸு'க்குப் பிறகு 'ஆண்டி கிளைமாக்ஸு'க்குப் போவதாக முடியும்.

நேயர்கள் பலர் இப்போது சீக்கிரம் முடித்து விட்டதற்காகக் குறை சொன்னாலும், இந்தக் கதை மேலும் வளர்ந்தால் விரைவில் அதே நேயர்கள் வேறு விதமாகக் குறைப்பட நேரிடும். "எப்போது முடிக்கப் போகிறீர்?" என்று ஆசிரியரை நேயர்கள் கேட்கும் நிலைமை விரைவில் வந்துவிடும்.

2) பொதுவாக 'நாவல்கள்' எழுதுவதற்கும், முக்கியமாகச் 'சரித்திர நவீனங்கள்' எழுதுவதற்கும் சட்ட திட்டங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. (அப்படி ஏற்பட்டிருந்தால் அவற்றை நான் படித்ததில்லை.) ஒவ்வொரு ஆசிரியரும் தமக்குரிய முறையை வகுத்துக் கொண்டு எழுதுகிறார்கள்.

ஆயினும், முழுவதும் கற்பனையாக எழுதப்படும் சமூக வாழ்க்கை நவீனங்களுக்கும், சரித்திர சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதும் நவீனங்களுக்கும் ஒரு வேற்றுமை அவசியம் இருந்து தீருகிறது.

முற்றிலும் கற்பனை செய்யப்பட்ட கதைகளில் வரும் பாத்திரங்களில் எல்லாருக்கும் கதை ஆசிரியர் சுலபமாக முடிவு சொல்லி விடலாம். கதாநாயகனும் கதாநாயகியும் கலியாணம் செய்து கொண்ட பிறகோ, அல்லது கதாநாயகன் தூக்கு மேடை



ஏறியும் கதாநாயகி கடலில் விழுந்தும் இறந்த பின்னரோ, கதையில் வரும் மற்றப் பாத்திரங்களை ஒரு பாராவில் சரிப்படுத்தி விடலாம். கலியாணம் செய்து கொண்ட தம்பதிகள் பிள்ளை குட்டி பேரர்களைப் பெற்று நெடுங்காலம் சுகமாக வாழ்ந்தார்கள் என்றும், மற்றக் கதா பாத்திரங்களில் நல்லவர்கள் எல்லாரும் சுகமடைந்தார்கள் என்றும், கெட்டவர்கள் எல்லாரும் பல கஷ்டங்கள் பட்டுச் செத்தொழிந்





தார்கள் அல்லது தக்க தண்டனை அடைந்தார்கள் என்றும் கூறிக் கதையைத் திருப்திகரமாக முடிக்கலாம்.

சரித்திரக் கதைகள் இந்த விதத்தில் முடிப்பது அவ்வளவு எளிய காரியமும் அன்று; உசிதமும் ஆகாது.

சரித்திரக் கதைகளில் வரும் பாத்திரங்களில் இறந்து போனவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் பிற்காலத்திலும் பற்பல காரியங்களில் ஈடுபடுவார்கள்; வெற்றியோ, தோல்வியோ சுகமோ துக்கமோ அடைவார்கள். அவற்றைக் குறித்து முன்னதாகவே சொல்லி விடுவது முறையாகுமா? அல்லது ஆதாரங்களுடன் கூடிய விவரங்கள் இல்லாமல் முடிவான நிகழ்ச்சிகளைப் பற்றி மட்டும் சொல்லுவதுதான் உசிதமாகுமா?

கதையை எந்தக் காலத்தில் முடிக்கிறோமோ, அந்தக் காலத்தில் பாத்திரங்கள் இருந்த நிலைமையிலேயே விட்டு விடுவதுதான் முறையென்று கருதினேன். ஆனால் இது பல நேயர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லையென்பதைக் காண்கிறேன். ஓரளவேனும் அவர்களைத் திருப்தி செய்விக்க வேண்டியது அவசியம் என்று உணருகிறேன்.

பல நேயர்கள் அறிந்து கொள்ள விரும்பும் விவரங்களைக் கேள்விகளின் ரூபத்தில் இதோ கோவைப் படுத்தித் தந்திருக்கிறேன்.

1) வந்தியத்தேவர் இளவரசி குந்தவைப்பிராட்டியை மணந்தாரா?

2) கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையர் என்ன ஆனார்?

3) வீர வைஷ்ணவனான ஆழ்வார்க்கடியான் என்ன செய்தான்?

4) பொன்னியின் செல்வரின் பிரயாணம் என்ன ஆயிற்று?

5) பழைய மதுராந்தகரும் சின்னப் பழுவேட்டரையரின் மகளும் என்ன ஆனார்கள்?

6) நந்தினியினால் முடிசூட்டப் பட்ட இளம் பாண்டியனைப் பற்றிய விவரம் என்ன?

7) நந்தினியின் கதி என்ன?

8) வானதி விஷயமாகக் குடந்தை சோதிடர் கூறியவை பலித்தனவா?

9) ஆபத்துதவிகள் என்ன செய்தார்கள்?

மேற்கூறிய கேள்விகள் பலவற்றுக்குப் பதில் தமிழ்நாட்டுச் சரித்திரம்



படித்தவர்கள் தாங்களே அறிந்து கொள்வார்கள். ஆயினும் அனைவருக்கும் திருப்தி அளிக்கும் பொருட்டு மேற்கண்ட கேள்விகள் எல்லாவற்றுக்கும் பதில் தந்து விடுகிறேன்.

1. மேலும் பல இடையூறுகளைத் தாண்டிய பிறகு குந்தவையும் வந்தியத் தேவனும் மணம் செய்து கொள்கிறார்கள். இருவரும் சோழ சாம்ராஜ்யத்தில் மிக மதிக்கப்படுகிறார்கள். தஞ்சைப் பெரிய கோவிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில், 'இராஜ ராஜ தேவரின் திருத் தமக்கையார், வல்லவரையர் வந்தியத்தேவரின் மகாதேவியார், ஆழ்வார் பராந்தகர் குந்தவையார்' என்று பொறிக்கப் பட்டு விளங்குகிறது.

2. இரும்பு மனிதராகிய சின்னப் பழுவேட்டரையர் உயிர் பிழைத்துப் பல கஷ்டங்களை அனுபவித்த பிறகு ஊருக்குத் திரும்பி வருகிறார். சோழ சாம்ராஜ்யத்துக்குப் பல அரிய சேவைகள் புரிகிறார்.

3. வீர வைஷ்ணவன் ஆழ்வார்க்கடியான் தனது ஒற்றறியும் வேலையை மேலும் நடத்திக் கொண்டிருக்கிறான். நந்தினியும் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளும் செய்யும் சதித் திட்டங்களை அறிந்து வந்து சொல்கிறான்.







4. பொன்னியின் செல்வர் வந்தியத் தேவனுடன் பெரிய கடற்படை தயாரித்துக்கொண்டு கடற் கொள்ளைக்காரர்களை அடக்கிச் சோழ சாம்ராஜ்யத்தைக் கடல்களுக்கு அப்பால் உள்ள நாடுகளில் நிலை நாட்டுகிறார்.

உத்தம சோழருக்குப் பட்டம் கட்டிப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவர் இறந்ததும், பொன்னியின் செல்வர் சிங்காதனம் ஏறுகிறார். 'இராஜ ராஜ சோழன்' என்ற பட்டத்துடன் நீண்ட காலம் சோழ சாம்ராஜ்யத்தை ஆளுகிறார்.

5. பழைய மதுராந்தகன் ஆபத்துதவிகளின் தூண்டுதலாலும் ஈழ மன்னன், சேர மன்னன் உதவி கொண்டும் பாண்டிய நாட்டைக் கவர்ந்து முடி சூடிக் கொள்ள முயல்கிறான். அவனுடைய முயற்சி பெரிதும் பலம் பெறுகிறது. இராஜ ராஜ சோழர் பட்டத்துக்கு வந்த பிறகு அமரபுஜங்கன் நெடுஞ்செழியனைப் போரில் வெல்கிறார். அவன் வீர சொர்க்கம் எய்துகிறான்.





6. திருப்புறம்பயம் காட்டில் முடிசூட்டப்பட்ட இளம் பாண்டியனும் பாண்டிய ராஜ்யத்துக்கு உரிமை கொண்டாடுகிறான். அவன் போர்க்களத்திலிருந்து தப்பிச் சென்று மறுபடியும் நாட்டைப் பெறச் சதி செய்கிறான். இவன் பிற்காலத்தில் இராஜேந்திர சோழனால் போரில் முறியடிக்கப்படுகிறான்.

7. நந்தினி அமரபுஜங்கன் இறந்த பிறகு தானும் உயிர் துறக்கிறாள். அதற்கு முன்னால் அவளை இராஜராஜ சோழர் சந்திக்கிறார். அவரிடம் தன் பிறப்பைக் குறித்த உண்மையையும் கரிகாலரின் மரணத்தைப் பற்றிய உண்மையையும் கூறிவிட்டு இறக்கிறாள்.

8. குடந்தை சோதிடரின் கூற்றுக்கள் வானதியின் விஷயத்தில் பலிக்கின்றன. (சோதிடர் சாஸ்திரம் பார்த்துச் சொன்னாரா? ஊகத்தினால் சொன்னாரா, நாம் அறியோம்.) வானதிக்குப் பிறக்கும் குழந்தையான இராஜேந்திரன் 'கங்கையும் கடாரமும் கொண்ட சோழன்' என்று பிற்காலத்தில் சரித்திரத்தில் புகழ் பெறுகிறான்.

ஆனால் வானதி தன் சபதத்தை நிறைவேற்றிவிட்டு உயிர் துறக்கிறாள். இராஜ இராஜனுடன் சோழ சிங்காதனம் ஏறுகிறவள் 'உலக மகாதேவி' என்னும் திரு

நாமம் கொண்ட இன்னொரு ராணியாவாள்.

9. ஆபத்துதவிகள் பாண்டிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் முயற்சிகளில் மேலும் ஈடுபட்டு வருகிறார்கள். நந்தினி உயிரோடு இருந்த வரையில் ஆதித்த கரிகாலனுடைய அகால மரண இரகசியத்தைப் பற்றி விசாரிக்கப்படவில்லை. அதில் நந்தினியின் பெயரும் வரும் என்ற காரணத்தினால்தான், நந்தினியின் மரணத்துக்குப் பிறகு, இராஜ ராஜ சோழன் ரவிதாஸன் முதலிய ஆபத்துதவிகளைக் கைப்பற்றித் தண்டனை விதித்து அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் கட்டளை பிறப்பிக்கிறான்.



நேயர்கள் அவ்வளவாகக் கவலைப்படாத இன்னும் சில கதாபாத்திரங்களைப் பற்றிய விவரங்களையும் கூறி விடுகிறேன்.

சுந்தர சோழர் காஞ்சி பொன் மாளிகையில் மூன்று ஆண்டு காலம் வசித்து விட்டு அங்கேயே உயிர் துறந்து 'பொன் மாளிகைத் துஞ்சிய தேவர்' என்று பெயர் பெறுகிறார். அவருடைய அருமை மனைவி வானமாதேவி, - மலையமானுடைய மகள், - அவருடன் உடன்கட்டை ஏறிச் சொர்க்கம் அடைகிறாள்.

பார்த்திபேந்திரன் குந்தவை தன்னை நிராகரித்து விட்ட கோபத்தினால் காஞ்சியில் சுதந்தர பல்லவ ராஜ்யத்தை நிலை நிறுத்தப் பார்க்கிறான். அதில் தோல்வியடைந்து சந்ததியில்லாமல் மாண்டு போகிறான்.

கந்தமாறன் பாலாற்றின் வட மேற்கில் புதிய மாளிகை கட்டிக் கொண்டு சோழ சாம்ராஜ்யத்துக்குத் தொண்டு செய்து வருகிறான். அவனுக்குப் பின்னால் சம்புவரையர் குலம் மிகப் பிரசித்தி அடைகிறது.

நேயர்களைத் திருப்தி படுத்துவதற்காகவே மேலே கண்டவற்றை எழுதினேன். உண்மையில், இவையெல்லாம் இன்னும் ஒரு பெரிய சரித்திரக் கதைக்கு ஆதாரமாகக் கூடிய முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

உத்தம சோழருக்குப் பின்னால் சிங்காதனம் ஏறிய இராஜராஜன், இராஜேந்திரன், இராஜாதி ராஜன், வீர இராஜேந்திரன், குலோத்துங்க சோழன் முதலிய சோழப் பேரரசர்களின் காலத்திய மகோந்நத நிகழ்ச்சிகள் 'பொன்னியின் செல்வன்' கதையைப் போல் பல சரித்திரக் கதைகள் புனைவதற்கு ஆதாரமாகக் கூடியவை.

இந்தக் கதையின் ஆசிரியரைக் காட்டிலும் அறிவிலும் ஆற்றலிலும் ஆராய்ச்சியிலும் மிக்கவர்கள் வருங் காலத்தில் சோழ சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்ட பல மகோந்நதமான நவீனங்களை எழுதித் தமிழகத்துக்கு மேலும் மேலும் தொண்டு செய்வார்கள் என்று நம்புகிறேன்.



உள் அட்டையில் வண்ணப்படம்: பத்மவாசன்

அப்போது தான் நடந்திருக்கும் அந்த விபத்து— குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடப்பவர்களைப் பார்த்துக் கொண்டே நகர்வார்கள். "நாம என்ன செய்யுறது? போலீஸ் வரும். அவங்க பார்த்துக்குவாங்க. நாம தூக்கினால் போலீஸ் விசாரணைக்குப் பதில் சொல்லணும்..."



* மதுரை அப்பல்லோ மருத்துவமனை

"தோஸ்த்"

இப்படி விபத்தில் உயிர் இழந்தவர்களைவிட உரிய நேரத்தில் மருத்துவ உதவி கிடைக்காமல் இறந்த உயிர்கள் எத்தனையோ!

இந்தப் பிரச்னைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க பிள்ளையார் சுழி போட்டிருக்கின்றன சென்னை மற்றும் மதுரை அப்பல்லோ மருத்துவமனைகள்.

நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனியும் அப்பல்லோ மருத்துவமனையும் இணைந்து 'தோஸ்த்' என்ற விபத்து மற்றும் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர். 5 வயது முதல் 70 வயது வரை உள்ளவர்கள் ரூ.190/- செலுத்தினால் உறுப்பினர் அட்டையுடன் செலுத்திய நாளிலிருந்து ஒரு ஆண்டுக்குக் காப்பீடு பெறத் தகுதி உண்டு. விரும்பினால் ஆண்டுதோறும் ரூ.190/- செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம்.

இதன்மூலம் அப்பல்லோ மருத்துவமனையில் உள் நோயாளியாக ஐம்பதாயிரம் ரூபாய் வரையிலும் மருத்துவ சிகிச்சை பெறலாம். உறுப்பை இழந்தாலோ அல்லது இறந்தாலோ மேலும் ஐம்பதாயிரம் உதவித் தொகையாக இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும்.

சாலை விபத்து, தொழிற்சாலை விபத்து, விஷம் அருந்துதல், தீக்காயம் போன்ற எல்லா விதமான விபத்துக்களுக்கும் இதன்மூலம் உதவி பெறலாம்.



* டி.என்.சேகர்

"சென்னையில் இத்திட்டத்தை ஆரம்பித்த 2 மாதத்திலேயே நல்ல வரவேற்பு இருந்தது. அதன் தொடர்ச்சியாக மதுரையில் ஆரம்பித்திருக்கிறோம். அடுத்து ஈரோட்டில் ஆரம்பிக்கப் போகிறோம். விபத்துகளுக்குச் சிகிச்சையளிக்க சட்டரீதியான அங்கீகாரம் பெற்ற முதல் தனியார் மருத்துவமனை அப்பல்லோ மருத்துவமனைதான். 'தோஸ்த்' திட்டத்தில் சேர்ந்து உறுப்பினரான ஒருவர், விபத்தின்போது அப்பல்லோ மருத்துவமனையின் கிளைகளில் எங்கு வேண்டுமானாலும் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்" என்றார் அப்பல்லோ மருத்துவமனையின் பொது மேலாளர் டி.என்.சேகர்.

இத்திட்ட தொடக்க விழாவன்று, விபத்தில் உயிர் பிழைக்க உதவிய சில ஆட்டோ டிரைவர்களுக்கு 'தோஸ்த்' திட்ட பாலிசிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

— கி. சிங்காரவடிவேல்



ஆடி

ஆடி வந்தால் அலற ஆரம்பிக்கும் ஆடியோ காஸெட்கள் அரை டஜன் கொடுத்தோம் இசை விமர்சகர் ஜி. சுவாமிநாதனிடம். அவர் பிய்த்து உதறியபோது, சிதறிய சிந்தனைகளைத் தொகுத்துத் தருகிறோம்:

டிசம்பரில் இசை விழா கச்சேரி காஸெட்டுகள் போல ஆடி மாசத்திற்கென்றே பிரத்யேக ஒலி நாடாக்கள் வெளியிடப்படுகின்றன. பக்திப் பாடல்கள் என்ற பொதுத்தலைப்பில் வந்தாலும், இந்த ஆடி மாச அம்மன் பாடல்களுக்கென்று ஒரு 'ஒயில்' இருக்கிறது. பாடலின் வரிகள், உபயோகிக்கப்படும் சொற்கள், பாடும் விதம், அதற்கென்று அமைக்கப்பட்டுள்ள பிரத்யேக இசை, பின்னணி, எல்லாமே தனித்தன்மை உள்ளவை.



இந்தத் 'தனி நடை'யை எல்(ே)லாரிடமும் உருவாக்கிய பெருமை(!) 'பட்டத்து ராணி' எல்.ஆர். ஈஸ்வரிக்குத்தான் சேர வேண்டும். 'கற்பூர நாயகியே கனக வல்லி, காளி மகமாயி கருமாரியம்மா' என்று சாதுவாக ஆரம்பித்தவர் இன்று 'அம்மாாாா...' 'ஆத்தாாாா...' என்று அலறும் அலறலைக் கேட்கும்போது பக்தியை விரட்டிவிட்டு 'பயம்' வந்து உட்கார்ந்து கொள்கிறது.

'பொன்னாத்தா' காஸெட்டில் வரும் 'முப்பாத்தா, சீமாத்தா' என்ற 108 பெயர் கொண்ட பாடலின் வரிகளில் வரும் 'சீமாத்தா, பசுமாத்தா' போன்ற பல 'ஆத்தா'க்களின் அர்த்தமும் 'சூலாயி மேலாயி...' போன்ற 'ஆயி'களின் அர்த்தமும் விளங்கவில்லை.

அரை டஜன் 'ஆடி' காஸெட்டுகளைக் கேட்டுப் பார்த்தபோது அவற்றின் உள்ளடக்கம் ஒரே மாதிரி சமாசாரங்கள்தான் என்பது புரிந்தது. முதலில் பெயரைக் கவனியுங்கள். 'பொன்னாத்தா', 'பொம்மையம்மா', 'ஸ்ரீதேவி தரிசனம்', 'மகமாயி', 'வேதசக்தி', 'கண்ணாத்தா'. சினிமாப் பாடல் மெட்டுகளின் பலமான தாக்கத்துடன் குறைந்த பட்சம் நான்கு பாடல்களாவது ஒவ்வொரு காஸெட்டிலும் உள்ளன. 'ஆத்தா', 'அம்மா', 'ஆயி', 'வேப்பிலைக்காரி', 'மஞ்சள்' - 'குங்குமம்', 'காளி', 'மகமாயி', 'சூலி', 'அலங்காரி', 'ஒய்யாரி' போன்றவை ஆயிரம் முறைகளுக்கும் குறையாமல் வருகின்றன.

இளையராஜாவின் பல பழைய கிராமிய சினிமாப் பாடல்களின் சாயலிலிருந்து இன்றைய ஏ.ஆர். ரஹ்மானின் 'எங்கே எனது கவிதை' வரை பல பிரபல பாடல்களின் மெட்டு, மெலிதாக 'உல்டா' செய்யப்பட்டு அம்மன் புகழ் பாடுகின்றன. எல்லா காஸெட்டுகளிலும் கோஷ்டியாகப் பாட ஒரு கும்பல் உண்டு. ஒரே வரியைத் திரும்பக் கூற அல்லது 'ஊ... ஊலலா...' என்று குலவையிட. இந்தச் 'சிறப்பம்சங்

'ஆத்தேயோவ்!'

கள்' இல்லாத காஸெட்டுக்களே இல்லை.

'காளி மகமாயி திரிசூலி' என்று பல பெயர்களில் வருணிக்கப்படும் இந்தக் கடவுள், என் சிற்றறிவுக்கு எட்டிய வரை ஒரு 'உக்கிர' தெய்வம். இதன் கோபத்திற்கும் சாபத்திற்கும் அஞ்சித்தான் பலர் இந்த அம்மனை வழிபடும்போது கடுமையான நியமங்களும் நோன்பும் அனுசரிப்பர் என்று கேள்விப்பட்டதுண்டு.

ஆனால், இந்தப் பாடல்களில் பெரும்பாலானவை அந்த அம்மனின் உக்கிரத்தை எந்த வகையிலும் தணிக்கும் வகையில் அமைவதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு வகை வெறியுடன் இன்னும் கொழுந்து விட்டு எரியச் செய்ய முயற்சிப்பது போலவே இருக்கிறது. அதைக் கேட்கும் மக்களை, குறிப்பாக பாமர மக்களை மேலும் உணர்ச்சி வசப்படுத்தும் வகையில், தாரை, தப்பட்டை, பம்பை, உடுக்கை, உருமி, நாயனம் போன்றவை மிக துரித கதியில் கையாளப்பட்டுள்ளன. போதாக் குறைக்கு 'அம்மா, தாயே, ஆத்தா..' என்ற உணர்ச்சி பொங்கும் அறை கூவல்கள் வேறு.

'பக்தி' என்பது மனித மனத்தில் அமைதியை உருவாக்க, சாந்தத்தைத் தர, ஒரு நிலைப்படுத்த, நேர்வழிப் படுத்த முன்னோர் ஏற்படுத்தினர். ஆனால், இது போல் தூண்டுகோலிட்டு உணர்ச்சிகளைக் கிளர்த்தும் வித்தைக்கு






பாடுவோர் பேசினால்...

மீரா கிருஷ்ணா :

''நல்ல சுவாமி பாட்டா கேட்க மக்கள் ஆசைப்படறாங்க. ரொம்ப கிளாஸிகலா தர்றதை விட எல்லாருக்குமே பிடிச்ச மாதிரி ட்யூன் போட்டு தர்றதை தான் கடைக்காரங்களும் விரும்புறாங்க.'' என்கிறார் மீரா கிருஷ்ணா.



• அனுராதா ஸ்ரீராம்

இவர் பாடும் அம்மன் அருள் காஸெட்டுகள் பரபரப்பாக விற்பனை ஆவதைத் தொடர்ந்து 'ஸ்ருதிலயா' என்ற பேனரில் சொந்தமாகவே ஆடியோ ரிகார்டிங் கம்பெனி தொடங்கியிருக்கிறார்.

''நான் எங்கே போனாலும் 'முத்து முத்து மாரியம்மா' பாட்டைப் பாடச் சொல்லி விரும்பிக் கேட்கிறார்கள். மேடைக் கச்சேரிகளில் 'காவிரி ஆற்றங் கரையில்' பாட்டைப் பாடினா பெண்கள் அருள் வந்து ஆட ஆரம்பிச்சடுவாங்க. இதெல்லாம் பக்தி இல்லையா?'' என்கிறார் மீரா கிருஷ்ணா.



• மீரா கிருஷ்ணா

அனுராதா ஸ்ரீராம் :

''நல்லா பாடறதுக்கும், இனிமையான குரல் வளம் அமையறதுக்குமே கடவுளுடைய அருள் நிறைய இருக்கணும். அதுவும் சாமி பாட்டு பாடறதுன்னா நிச்சயம் இறை

'பக்தி' என்ற பெயர் பொருந்துமா? இசை, வழிபாடுகளில் மிக உயர்ந்ததாகக் கருதப்படும் ஒன்று. அந்த இசை மனத்தையும், அறிவையும், உணர்ச்சிகளையும் சாந்தப்படுத்தி அமைதியூட்ட வேண்டும்.

வழிபாட்டில் வன்முறைக்கு இடமேது? கல்வியறிவும், நாகரிகமும், மனித நேயமும் உலக வாழ்க்கையின் மிக அவசியமான அம்சங்களாகப் பேசப்படும் நேரத்தில், இந்த வழிபாட்டு முறையை நாம் மாற்றியமைக்கக் கூடாதா? வழிபாடு என்ற பெயரில் மன அதிர்வுகளையும், உணர்ச்சிக் கொந்தளிப்பையும் கிளறிவிடுவது நியாயமா?

நான் கேட்ட எந்தப் பாடல் வரிகளுமே நினைவில் நிற்க மறுக்கின்றன. மேலே குறிப்பிட்ட சில பொதுவான வார்த்தைகள்தான் திருப்பத் திருப்ப ஒலிக்கின்றன. சமீபத்தில் தண்ணீர் பஞ்சத்தினாலோ என்னவோ 'தரிசு நிலம்' 'மழை' போன்ற ஓரிரு வார்த்தைகள் 'சென்னைக்கு வரும் மழை' போல் தென் பட்டன.

எல்லாப் பாடல்களுமே ஒரு குறிப்பிட்ட தாளகதியில்தான் அமைக்கப்பட்டுள்ளன. அதனால், தாராளமாக ஒரு பாடலை மிகச் சுலபமாக மாற்றி இன்னொரு சந்தத்தில் அடைத்து விடலாம்.

இந்தப் பாடல்களைப் பாடியுள்ள மீரா கிருஷ்ணா, மகாநதி ஷோபனா, தேவி அம்ருதா, மால்குடி சுபா, எஸ்.பி. பாலசுப்ரமணியம் இந்தப் பாடல்களின் மூலம் சாதிக்க நினைப்பது என்ன என்பது எனக்கு சத்தியமாகப் புரிபடாத அம்சம்.

இந்த ஆடி மாத காய்ச்சல் கிராமப் புறங்களில் எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால், அதன் உஷ்ணத்தை, சென்னையில் பல பகுதிகளில் நன்கு உணருகிறோம்.

இன்னுமொரு கேள்வி :

இந்தப் பாடல்களை பக்தர்கள் கேட்டுத் திரும்ப திரும்பப் பாடிப் பிரபலப்படுத்துவார்களா? தெரியவில்லை. ஏனென்றால், அதற்குள் இதே கவிஞர்களும் பாடகர்களும், இசையமைப்பாளர்களும் அடுத்த ஆடிக்கு இதே வார்த்தை ஜாலங்களுடன் இன்னொரு ஒலி நாடாவை உருவாக்கி விட மாட்டார்களா?

'மதம் சாமானியர்களின் போதைப் பொருள்' என்று ஆங்கிலத்தில் ஒரு

அனுக்ரஹம் இருக்கணும். பக்தியும் தெய்வ வழிபாடும் வருஷம் பூரா இருக்க வேண்டிய விஷயம்தான். ஆனால் ஆடி, நவராத்திரி, மகர ஜோதி, இப்படி சில விசேஷமான நாட்களில் பக்தி அலை தீவிரமாகுது. அந்த சமயத்தில் தெய்வீகப் பாடல் காஸெட்டுகள் பாட அழைப்புகள் வருவதையும், நாங்கள் ஏற்றுக் கொள்வதையும் தப்பென்று சொல்ல முடியுமா? சினிமாப் பாட்டுன்னாலும், சாமி பாட்டுன்னாலும், அதே ஈடுபாட்டோடதான் நான் பாடறேன்.'' என்கிறார் அனுராதா ஸ்ரீராம். இவரது 'ஆதி', 'ஆறுபடையப்பா', 'ஆனைமுகன்' என்று பல காஸெட்டுகள் வெளியாகியுள்ளன.


எல்.ஆர். ஈஸ்வரி :

''பக்திப் பாட்டா? கணக்கே வைச்சுக்கறதில்லீங்க. அவ ஆட்டுவிக்கிறா. நா ஆடறேன். ஐ மீன், அவ சொல்படி பாடறேன். காசெல்லாம் வரும், போகும். எல்லாமே அவ அருள்தான்'' என்று உணர்ச்சிவசப்பட்டார் எல்.ஆர். ஈஸ்வரி.

சொலவடை உண்டு. இந்த ஆடி, அம்மன் காஸெட்கள் அதை உறுதிப்படுத்துகின்றன. இந்த காஸெட்டு எல்லாமே ஏழைகளையும் சென்றடையும் வண்ணம் பிற ஆடியோ காஸெட்களைக் காட்டிலும் மிக மலிவாக விற்கப்படுகின்றன.

'மதம்' என்பது நம் மனத்தை பதப்படுத்தத்தான். மதம் பிடிக்கச் செய்ய அல்ல. கோவில் என்ற வழிபடும் தலத்தில் சமீப காலமாக பாட்டு என்ற பெயரில் ஓசைகளைக் கிளப்பி அமைதியான பிரார்த்தனை என்ற எண்ணத்தை அறவே குலைத்து விட்டனர். விஞ்ஞான வளர்ச்சி (டேப் ரிகார்டர், காஸெட், ஒலி பெருக்கி இத்யாதி) துரதிர்ஷ்ட வசமாக நம் அஞ்ஞானத்தை வெளிப்படுத்தும் பகட்டான படாடோபமாகிவிட்டது.

நான் சத்தியமாக நாத்திகன் அல்ல. ஆத்திகம் ஓர் அருமையான உணர்ச்சி. ஆனால், இப்படிப்பட்ட பயங்கரப் பக்தி பிரசாரங்கள் ஆத்திகத்துக்கும் பக்திக்கும் நன்மை செய்யவில்லை. அநீதியே இழைக்கின்றன. அந்தக் கோல விழி - மாகாளி - ஓங்காரி அம்மன்தான் கேட்க வேண்டும், பாட்டை அல்ல; நம்மைப் பாட்டால் பாடாய்ப் படுத்துபவர்களை.



''அந்த ஆபீஸ்ல 100 கி.மீ முதல் 200 கி.மீ வரைக்கும் அடிக்கப் போறதா பேசிக்கிட்டாங்களே, புயலா?''

''ஊகூம்; எல்லாரையும் டிரான்ஸ்பர் அடிக்கப் போறாங்களாம்!''

— சீர்காழி ரேவதி



''உங்க பையனுக்கு எப்படி எல்.கே.ஜி.யில இடம் வாங்கினீங்க?''

''பையன் கொண்டு போற தண்ணி பாட்டிலோட பிரின்சிபாலுக்கும் தினசரி ஒரு தண்ணி பாட்டில் கொடுத்து விடுறதா ஒத்துக்கிட்டேன்!''

- வத்திராயிருப்பு தெ. சுந்தரமகாலிங்கம்



''உங்க பையனுக்கு இந்த சின்ன வயசுலயே அரசியல் அறிவு அதிகமா இருக்கே?''

''எப்படிச் சொல்றீங்க?''

''ஆடிட்டருக்குப் படிச்சிட்டு, செருப்படி வாங்கறதைவிட, ஐ.ஏ.எஸ் படிச்சிட்டு, ஜெயிலுக்குப் போறதைவிட, அழகா பெட்டிக் கடை வச்சு பிழைச்சுப் பேன்னு சொல்றானே!''

— சீர்காழி ரேவதி

"ஒப்பனை இல்லை; கற்பனை இல்லை!"

ஞாயிறு தோறும் காலை 9.30 மணிக்கு 'பொதிகை' டி.வியில் ஒளிபரப்பாகும் 'வெளிச்சத்தின் மறுபக்கம்' நிகழ்ச்சியை 'நிகழ்ச்சி' என்று சொல்வதைவிட, 'நெகிழ்ச்சி' என்று சொல்வதுதான் பொருத்தம்.

இதில் பங்கு கொள்பவர்கள் சினிமா நட்சத்திரங்களோ, பிரபலஸ்தர்களோ இல்லை. அலி, பிச்சைக்காரர், பிக்பாக்கெட் ஆசாமி, வெட்டியான், கஞ்சா விற்பவன், பிரேதப் பரிசோதனை செய்பவர் என வாழ்க்கையின் இருட்டு மூலைகளில் பதுங்கிக் கொண்டு முகம் காட்ட மறுப்பவர்கள்.

வித்தியாசமான இந்த 'பர்சனாலிடிகளை'ப் பேட்டி காண்கிறார் மதுரா டிராவல் ஏஜென்ஸியின் நிர்வாகத் தலைவர் வி.கே.டி. பாலன். 'லிம்கா புக்'கில் இடம் பெற்ற சாதனையாளர்.

'நேர் காணல்' என்று சொல்லப்படுவது கூட சம்பிரதாயமான வார்த்தைதான். பேட்டி காணப்படும் நபருடன் தரையிலோ, பெஞ்சிலோ உட்கார்ந்து, ஏதோ 'ஊர்ப் பெரிசு' மனம் விட்டுப் பேசுவது போல அவ்வளவு அந்நியோன்யம். கேள்விகள் கூட அதே 'பாஷை'யில்... அவர்களுடைய 'அலைவரிசை'யில்...

எப்படி வந்தது இந்த ஐடியா?

"நானே பிளாட்பாரத்தில் படுத்துக் கிடந்தவன்தானே? ஏதோ அதிர்ஷ்டக் காற்று அடிச்சதுல, இந்தக் குப்பையும் கோபுரத்துல ஒட்டிக்கிச்சு... இந்த முகங்கள் எல்லாமே எனக்குப் பரிச்சயமானவைதான். அவர்கள் வலியும் சிரமமும் நான் உணர்ந்ததுதான்... அதுதான், சென்னை தொலைக்காட்சி தயாரிப்பாளர் எஸ். அனந்தநாராயணன், என்னை ஒரு நிகழ்ச்சி செய்துதரச் சொன்ன போது, நானறிந்த நிழல் மனிதர்களையே கொண்டு உருவாக்கினேன் அதற்கு அனந்த நாராயணன் முயற்சியும் புரட்சியும் மூலகாரணம், அவர் இல்லையென்றால் இந்த நிகழ்ச்சியே இல்லை" என்று ஆரம்பித்தார் பாலன்.

முதல் நிகழ்ச்சியே ஒன்பது கொலைகளைச் செய்த ஜெயபிரகாஷ் பேட்டிதான். 'நான் ரொம்ப நொந்து போயிருக்கேன். பேட்டியெல்லாம் தரமுடியாது' என்று வெறுப்பாகப் பேசியவரிடம் அன்பாகப் பேசிப் பேசியே நண்பனாக்கிக் கொண்டாராம். 'கொலைச் சம்பவத்தைப் பற்றி எதுவும் கேட்கக் கூடாது' என்று நிபந்தனையோடு ஒரு வழியாக பேட்டிக்குச் சம்மதித்தாராம் ஜெயப்பிரகாஷ்.



• வி.கே.டி.பாலன், எஸ். அனந்த நாராயணன் படப்பிடிப்பில்...

"அவர் கொலை செஞ்சப்போ அவருக்கு வயசு 19. படிச்ச பையன். எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லாதவன். பத்து விநாடி நீடித்த ஆவேசத்தில், கூடப் பிறந்த தங்கை, மச்சான், குழந்தைகள், பக்கத்து வீட்டுக்காரன் என வெறித்தனமாக வெட்டிச் சாய்த்திருக்கிறான். ஐந்து முறை தூக்குத் தண்டனை முடிவாகி, தப்பித்து, சிறையில் இருந்த நாட்களில், நன்னடத்தை காரணமாக, ஒரு போலீஸ் அதிகாரியே, தம் சொந்த செலவில் ஒரு வக்கீலை அமர்த்தியிருக்கிறார். இப்போ ஜெயப்பிரகாஷுக்கு 41 வயசு. அரசாங்க உதவியுடன் எஸ்.டி.டி. பூத் வைத்திருக்கிறார். சைவம்தான் சாப்பிடுகிறார். ரொம்ப அமைதியாக இருக்கிறார். ஆனால் அந்தச் செயலுடைய ரணவேதனை மட்டும் மாறவேயில்லை" என்கிறார் பாலன்.





• பிளாக் டிக்கெட் விற்கும் பெண்மணியுடன்...

இந்நிகழ்ச்சிக்காக அடிமட்டத்துப் பெண்கள் பலரைச் சந்தித்திருந்தாலும், தார்ரோடு போடும் பெண்ணின் 'கற்பு' சம்பந்தமான சிந்தனைகளும், குடிகாரப் பெண்ணின் வெளிப்படையான பேச்சும் தம்மை மிகவும் பாதித்தன என்கிறார். "43 வயசான ஆளுக்கு, இரண்டாம்தாரமாக வாழ்க்கைப்பட்டபோது, அந்தப் பெண்ணுக்கு வயது 13! நாற்பது வருஷமாகத் தார்ரோடு வேலைதான். ஒரு நாளைக்கு 7.5 ரூபாய் கூலி. இப்போது அவள் புருஷனுக்கு வயது எழுபத்து மூன்று. உனரிலிருக்கும் புருஷனுக்கும் மகனுக்கும் உழைத்துக் கொட்டுகிறாள். தாரோடு தாராகக் கலந்து போயிருக்கிற அவளுடைய வாழ்க்கையில் அநாசாரங்கள் இல்லை. காதல், கல்யாணம், போன்றவற்றை நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவுக்கு கூலி சேமிக்கும் இயந்திரமாகவே மாறிப் போயிருக்கிறாள்" என்றார் வேதனையாக.

எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் சீப்பு விற்கும் பார்வையற்றவரிடம் பேசியபோது, பேட்டி நிறைவடையும் தறுவாயில், அவரது குழந்தையைப் பற்றிப் பேச்சு வந்ததாம்.

"அட! பாதிக்குப் பாதி லாபமா?"

"எங்கே சார்... எல்லாம் திருடிக்கிட்டுப் போயிடறாங்களே."




''என் காதலியைத் தேடி ஒரு வாரமா பார்க், பீச்னு அலையறேன், கிடைக்கவே இல்லை!''

''அப்படியா யாரவ?''

''நான்தான் சொன்னேனே தேடி அலைய றேன்னு. இனிமேதான் கண்டுபிடிக்கணும்!''

– எஸ். சரவணன்



''துணிக்கடையில லுங்கி திருடி மாட்டிக்கிட்டியாமே?''

''ஆமா... 'கைலி'யும் களவுமாகப் பிடிச் சுட்டாங்க!''

– தஞ்சை இரா. ஆதி



''ஒரு விஷயத்தை வாங்கி நான் காதுல போட்டுக்கிட்டேன்னா, ஜன்மத்துக்கும் மறக்க மாட்டேன்...''

''ரெண்டு மாசத்துக்கு முன்னாடி ஆயிரம் ரூபா கடன் வாங்கினதை மறந் துட்டீங்களே...!''

''அதை வாங்கி நான் பாக்கெட்ல இல்ல போட்டுக்கிட்டேன்!''

– பி.ஏ. சர்மா

"என் மகனை ஐ.ஏ.எஸ். படிக்க வைப்பேன்" என்றாராம் அந்தப் பார்வையற்றவர்.

"அப்படியெல்லாம் ரொம்ப கற்பனை பண்ணிடாதீங்க... யதார்த்தமா யோசியுங்க..."– இது பாலன்.

"என்ன ஸார்... நானே எம்.ஏ., எம்.எட் படிச்சிருக்கும்போது, என் மகன் ஐ.ஏ.எஸ் படிக்க மாட்டானா?" என்று கேட்டுப் பிரமிக்க வைத்துவிட்டாராம்!

"அரசாங்க வேலைக்குப் பதிவு பண்ணிட்டேன். நிச்சயம் கிடைக்கும். அதுவரை குடும்பத்தைக் காப்பாத்த வேணாமா? அதான் சீப்பு வியாபாரம் பண்றேன். தினமும் 250 ரூபாய்க்கு முதல் போடறேன். ஐந்நூறு ரூபாய் வரை கிடைக்கும்" என்றவரிடம்,

"அட! பாதிக்குப் பாதி லாபமா?" என்றாராம் தமாஷாக.

"எங்கே சார்... எல்லாம் திருடிக்கிட்டு போயிடறாங்களே."

"யார் திருடறாங்க?"

"எல்லாம் கண்ணுள்ளவங்கதான்" என்ற பதில் வந்ததாம்!

இந்நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்ட போது முதலில் 13 வாரங்களுக்கு அனுமதி தரப்பட்டது. நேயர்களின் ஏகோபித்த வரவேற்பால், நிகழ்ச்சி பாப்புலரானதும், 26 வாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டு, பின்னர் விளம்பரதாரர்களும் பிராண்டிங்கும் வலிய கிடைக்கவே 'ஷட்டில்' எனப்படும் நிரந்தர நிகழ்ச்சியாகத் தொடர அனுமதி கிடைத்துள்ளது. இதில் வி.கே.டி. பாலனுக்கு ஏக பெருமை.

"நான் புரொஃபஷனல் இல்லை. ஏதோ கலையில் ஈடுபாடு. அவ்வளவுதான். ஒப்பனை இல்லை; கற்பனை இல்லை; எழுதி வைத்துப் பேசுவதோ, சொல்லிக் கொடுத்துப் பேசச் சொல்வதோ இல்லை. செட்டு இல்லை. காமிரா ஓட ஆரம்பித்தபிறகு நடக்கிற, பேசற விஷயம் அப்படியே பதிவாகுது. உள்ளது உள்ளபடியே, நிஜமான மனிதர்களின் நிஜ உணர்வுகள்... அதுதான் இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்குக் காரணம்" என்கிறார் வி.கே.டி. பாலன்

— அனு

"வேண்டாம் சார், மேடம் பார்க்காமல் வாங்க வேண்டாம். விலை வேறு ரொம்பச் சொல்கிறான். உண்மையானதா என்ன என்று எப்படித் தெரியும்?"- முடிந்த மட்டும் டிரைவர் ப்ரையன் சொல்லிச் சொல்லிப் பார்த்தான். நான் கேட்பதாய் இல்லை.

இவனுக்கென்ன தெரியும், ஆன்டிக்ஸ் பற்றி! இவை எல்

சிலை என்ன விலை?

லாம் விலை மதிக்க முடியாதவை. நாளைக்கே நாம் அமெரிக்கா திரும்பி, வீட்டில் வைத்து அழகுபடுத்தினால், ஒவ்வொருவரும் எங்கே வாங்கினாய் என்பார்கள். என் மனைவிக்கு நான் வாங்கும் எதற்கும் அருமை தெரியாது. நாலு பேர் பார்த்து நன்றாக இருக்கிறது என்றால்தான் அதற்கெல்லாம் மதிப்பு. அதுவும் அவள் தோழி மியாவோ, மார்கரெட்டோ வந்து பார்த்து, அவர்களுக்குப் பிடித்துவிட்டால் பின் மறு பேச்சே கிடையாது. நான் எப்போது எதுவாங்கினாலும் ஒரே முணுமுணுப்புதான்.

"யார் வாங்கிவரச் சொல்லி அழுதார்கள்? வீட்டில் இருக்கும் சாமான்களை, தூசு தட்டி வைத்துக் கொள்ளவே நேரம் இல்லை. வைக்க இனி இடமும் இல்லை.

மீரா கோபாலன்

இதைப் பற்றி ஒன்றும் யோசிக்காமல் கண்ட குப்பையையும் வாங்கி வருவீர்கள்! பார்க்கவாவது அழகாக இருக்க வேண்டாமா? அதுவும் இல்லை. யாராவது அதிசாமர்த்தியக்காரர்கள், நீங்கள் வந்தால் உங்கள் தலையில் கட்டலாம் என்று காத்திருப்பார்கள். அதை எல்லாம் விலையை விசாரிக்காமல் வாங்கி வருவீர்கள்" என்று ஒரே போடாகப் போடுவாள்.

ப்ரையன் இந்தக் கூத்தை எல்லாம் நாங்கள் பம்பாயில் இருந்தபோது நிறையவே பார்த்திருக்கிறான். அதனால் தான் இப்போது ஸீரியஸாகத் தடுக்கப் பார்த்தான்.


காலையிலிருந்து மாலை வரை ஓடியோடிச் சம்பாதிப்பவன் நான்தான். எனக்கில்லாத உரிமையா? வீட்டில் எல்லாமே அவளுக்குப் பிடித்தவைதான் வைக்க வேண்டுமா? நான் வாங்கிய வீட்டில், எனக்குப் பிடித்த



அழகுப் பொருட்களை வைத்து. என் இஷ்டப்படி அலங்கரிக்க யாருடைய அனுமதி வேண்டும்?

இரண்டடி உயரத்துக்கு, நம்மூர் மரப்பாச்சிகள் போல– ஆனால் பெரியதான முகத்தோடு– பன்னிரண்டு மரச் சிற்பங்கள். அந்தக் கடைக்காரன் ஒன்றை மட்டும் ஓர் அழுக்குத் துணியில் மூடி, யாரும் பார்க்காதவாறு ஒளித்து எனக்கு மட்டும் காண்பித்தான்.

"குஜராத்தில் ஒரு குக்கிராமத்தில், ஒரு கோவிலின் ரதத்திலிருந்து எடுத்து வந்த சிற்பங்கள். ரொம்பப் பழைமையானவை. வெளியூர்க்காரர்கள் பார்த்தால் கொத்திக் கொண்டு போய் விடுவார்கள். இப்போ விட்டால் பின்னர் கிடைக்காது!'' என்றான்.



மொத்தம் பன்னிரண்டு இருந்தன. லாட்டரி பரிசு அடித்தது போல மகிழ்ச்சியில், எல்லாவற்றையும் நானே வாங்கிக் கொண்டு விடலாம் என்று மொத்தமாக விலை பேசத் தொடங்கினேன். 5000 ரூபாயில் ஆரம்பித்து, 4800 ரூபாய்க்குப் பேரம் படிந்தது. எல்லாவற்றையும் வாங்கி வந்து, வீட்டிலுள்ள கெஸ்ட் பெட்ரூமில் நிலத்திலேயே அடுக்கி வைத்தேன். சில பொம்மைகள் நின்றன. சிலதுகளால் படுக்க மட்டும் தான் முடிந்தன. தினமும் அவற்றைப் பார்த்துப் பெருமிதத்தில் மகிழ்ந்து போய்க் கிடந்தேன்.

இரண்டு வாரத்தில் ஊருக்குப் போன என் மனைவி வந்தாள். அவள் வந்த அன்றே அவளிடம் இந்த ஆன்டிக்ஸ் பற்றியும், நான் பேரம் பேசி வாங்கின சமர்த்தைப் பற்றியும் அளக்க



ஓடோடி ஆபிஸிலிருந்து சீக்கிரமாகவே வந்தேன். முகத்தில் பெருமிதம் தாண்டவ மாட, அவளாகப் பேச்சை ஆரம்பிக்கிறாளா என்று பார்த்து, காபி-டிபன் சாப்பிட்டு முடிக்கும் வரை நானாக இதைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை. அவளும் ஊர்க் கதைகளை அளப்பதிலேயே கவனமாய் இருந்தாள். என் தலை வெடிக்கு முன் நானே, "பெட்ரூமில் மரச் சிலைகளை எல்லாம் பார்த்தாயா?" என்றேன்.

"ஆமாம், நானே கேட்க வேண்டுமென்று நினைத்தேன். அவலட்சண முகத்தோடு, கோணா மாணாவென்று, விறகுக் கட்டைகள் போல இருக்கே, அதெல்லாம் என்ன?"

வந்ததே எனக்கு ஆவேசம்.

"என்ன சொன்னாய்? இதெல்லாம் சாதாரணக் கட்டைகளா? எதுக்கோ தெரியுமா கர்ப்பூர வாசனை என்பார்கள்... இதெல்லாம் விலை மதிக்க முடியாத பழங்காலச் சிற்பங்களாக்கும். இந்தியா முழுக்கத் தேடினாலும் உன்னால் இது போல வாங்க முடியாது!" என்று கூச்சல் போட்டுவிட்டு, நான் அவற்றை வாங்கின கதை முழுக்கச் சொன்னேன்.

"நீங்கள் என்ன சொன்னாலும் சரி. இந்த விறகுக் கட்டைகளை என் வீட்டில் எந்த இடத்திலும் வைக்க விடமாட்டேன். கொஞ்சமாவது ஏஸ்தடிக் சென்ஸ் வேண்டாம்? இப்படியா பணத்தை வீசி எறிவார்கள்?" என்று சொல்லி, அந்தச் சிலைகளை பால்கனியில் விறகுக் கட்டை அடுக்குவது மாதிரி ஒன்றன் மேல் ஒன்றாய் அடுக்கி விட்டுப் படாரென்று கதவை அறைந்து சாத்தினாள்.

ஒரு வாரம் கழித்து எங்கள் அத்தை வந்து இரண்டு நாள் இருந்தாள். புறப்படு முன், "ஆமாம், ஏன் பால்கனியில் போய் விறகை வாங்கி அடுக்கி வைத்திருக்கிறீர்கள்? அதுவும் நல்ல விறகாகவும் தோன்றவில்லை. பூச்சி பொட்டு வரும். தூக்கி வெளியில் போட்டுவிடுவது நல்லது!" என்றாள்.

என் மனைவி விறைப்பாக என்னை ஒரு முறை எரிக்கிறமாதிரி பார்த்தாள்.

நான் அதை லட்சியம் செய்யவில்லை.

அடுத்த இரண்டு மாதங்களில் எங்களை மறுபடியும் அமெரிக்காவுக்கு மாற்றினார்கள்.

சாமான்களை எடுக்கும்போது இன்னொரு சண்டை.

"இந்த விறகை இங்கேயே விட்டு விடலாம்" என்றாள்.

"வீடு உன்னுடையது மட்டுமில்லை, என்னுடையதும்தான். அதென்ன உனக்கு அப்படி ஒரு பிடிவாதம்? அங்கே போய் நம் வீட்டில், ரூமுக்கு இரண்டாக சுவரில் அடித்து மாட்டினால் எல்லோரும் பார்த்துச் சொக்கிப் போவார்கள்!" என்றேன்.

அதற்கு மேல் அவள் பேசவில்லை. முகத்தை மட்டும் உம்மென்று வைத்துக் கொண்டிருந்தாள். ஒரு வழியாக அமெரிக்கா போய் வீடு வாங்கின பிறகு, சாமான்கள் எல்லாம் வந்து இறங்கின. எல்லாவற்றையும் ரூம்களில் ஒழுங்காக எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது, பக்கத்து வீட்டு ஜார்ஜ் வந்து, ஏதாவது உதவி தேவையா என்று கேட்டு எட்டிப் பார்த்தான்.

நான் என்னுடைய விலை மதிக்க முடியாத பொக்கிஷங்களான சிலைகளை அவனிடம் காட்ட,

"உங்க பையன் எதிர்காலத்தில் பெரிய அரசியல்வாதியா வருவான்!"
"எப்படிச் சொல்றீங்க?"
"353, 354, 355, 356, 356, 356, 356, 356ன்னு அதுலயே நிக்கறான்!"
— புளியறை கணேசன்

"ராஜ்ய சபா சீட்டு தராததாலேதான் நீங்க அந்த கூட்டணியிலேர்ந்து விலகிட்டீங்களா?"
"அது கிடக்கட்டுங்க... கூட்டணித் தலைவரைப் பார்க்கப்போனா உட்காரக் கூட சீட் தரமாட்டேங்கிறாரே...!"
– தஞ்சை தாமு

அவன் கொஞ்சமாவது அதில் ஆர்வம் காட்ட வேண்டுமே? சே, என்ன காட்டுமிராண்டி இவன்! ஆர்ட்டை ரசிக்கத் தெரியாத முட்டாள்! இப்படியா இக்னோர் பண்ணுவது?... அது எனக்குக் கிடைத்த முதல் அடி.

மனைவி அதைப் பிடிவாதமாகச் சுவரில் அடித்து மாட்ட விடவே இல்லை. நானும் வருகிற ஒவ்வொரு நண்பரிடமும் அவற்றைக் காட்டிக் காட்டி, பின் எனக்குத் தெரிந்தவர்களில் ஒருவர்கூடக் கலையழகை ரசிக்கத் தெரியாத மடையர்கள்தான் என்ற தீர்மானத்துக்கு வந்து கொண்டிருந்தேன்.

ஒருநாள் ஆபீசிலிருந்து வந்தபோது, மனைவி அவற்றை ஒரு பெரிய அட்டைப் பெட்டியில் போட்டு மூடி கார்ஷெட்டில் போட்டது தெரிந்து மிகவும் வருத்தப்பட்டேன். அதைவிட வருத்தப்படுமாறு, "நாளை அவற்றை எல்லாம் சால்வேஷன் ஆர்மி சாரிடி சென்டரில் கொண்டு போய்ப் போடுங்கள்!" என்று உத்தரவு வேறு போட்டாள்.

"ஓவர் மை டெட் பாடி!" என்று கோபாவேசத்தில் கத்தினேன்.

"உனக்கு மதிப்புத் தெரியாவிட்டால் நான் எப்படியாவது இவற்றை விற்றுப் பணம் பண்ணுகிறேனா இல்லையா, பார்!" என்று சவால் விட்டேன்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இரண்டு நாட்களுக்குள் இவை இங்கிருந்து போகாவிட்டால், நான் 'கார்பேஜ் டிரக்'கில் தூக்கிப் போட்டுவிடுவேன். வீட்டில் செதில் பிடிக்க நீங்கள் சான்ஸ் கொடுக்கிறீர்கள். என்ன மரமோ, என்ன இழவோ, கரையான் பிடிக்கத் தொடங்கினால், நூற்றுக் கணக்கான டாலர்கள் செலவழிக்க வேண்டி வரும். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன்!" என்று பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்த மாதிரி போய்விட்டாள்.

அடுத்த நாள் சனிக்கிழமை. ஆபீஸ் லீவு. காலை ஏழு மணிக்கே என் பொக்கிஷங்களைத் தூக்க மாட்டாமல், முதுகு வலியுடனும், மனச் சோர்வுடனும் தூக்கி வேனில் ஏற்றி, அருகில் இருக்கும் ஆன்டிக் மார்க்கெட்டுக்குச் சென்று அங்கே மரச் சாமான்கள் இருக்கும் கடை ஒன்றைக் கண்டுபிடித்தேன்.

முதலில் கடையை ஒரு நோட்டம் விட்டதில், சில பழைய 'மாஸ்க்' சிற்பங்கள் கொஞ்சம் இருந்ததைப் பார்த்தேன். கொஞ்சம் தெம்பு வந்தது.

மெதுவாக அவனிடம் போய், "என்னிடம் கொஞ்சம் ஆன்டிக் சிற்பங்கள் உள்ளன. வாங்கிக் கொள்வாயா?" என்றேன்.

அவன் முகத்தில்தான் என்னவொரு அலட்சியம்! செத்த பல்லியைப் பார்ப்பது போல முகச்சுளிப்போடு, "இங்கே இதை யாரும் வாங்குவார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை!", என்று அடுத்த கஸ்டமரிடம் போனான்.

"உன்னிடம் நான் ஒரு 'டீல்' சொல்லுகிறேன். இவற்றை நான் உன் கடையில் வைத்துவிட்டு இங்கேயே ஒரு பக்கமாக ஒதுங்கி நிற்கிறேன். யாராவது இதை வாங்கினால் ஐம்பது பர்சென்ட் உனக்குக் கொடுத்து விடுகிறேன். யாராவது இவற்றை வாங்காமலா போவார்கள்? மாலைக்குள் ஒரு செலவும் இல்லாமல் நீ பணம் பண்ணலாம்!" என்றேன்.



'இப்படி ஒரு பிரக்ருதியா' என்று அவன் பார்த்த மாதிரி இருந்தது. பிறகு 'என்னவோ செய்து தொலை' என்கிற மாதிரி தலையை ஆட்டினான். "ஆனால் கஸ்டமரிடம் நீ உன் சாமான்களை ஸ்பெஷலாகக் காட்டவோ, விற்கவோ முயற்சி செய்யக் கூடாது. அவைகளை ஓரமாக வை. அவர்களாகக் கேட்டால் நீ பதில் சொல்லி, விற்றுக் கொள். இதற்குச் சம்மதித்தால் நான் தயார்!" என்றான்.

நானும் ஓரமாக இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு, வந்த கூட்டத்தை நோட்டம் விட்டேன். இந்தக் கடைக்கு இத்தனை ஆட்கள் வருகிறார்களா?



திடீர்ப் பரிசுப் போட்டி முடிவு – 14

8.7.01 கல்கி இதழை விமர்சித்துக் கடிதங்கள் எழுதச் சொல்லி போட்டி வைத்திருந்தோம். வாசகர்கள் கல்கி இதழை. பூத கண்ணாடி வைத்து அலசி விமர்சன மடல்கள் எழுதிக் குவித்து விட்டார்கள். நன்றி...நன்றி...!

சின்ன 'பஞ்ச்'சோடும் காமெண்ட் அடித்திருந்த சிறப்பாகவும். வி. அரவிந்த் ரூ. **100/-** பரிசு பெறுகிறார்.

சில மாதங்களுக்கு முன்பு, பூகம்பம் பற்றி காஞ்சி முனிவர் கூறிய கருத்து **'அருள்வாக்கு'** *பகுதியில் வெளியான அதே சமயத்தில் குஜராத் மாநிலத்தில் நிஜமாகவே பூகம்பம் ஏற்பட்டுப் பலத்த சேதம் விளைந்தது.*

8.7.01 *இதழ் 'ரிமோட்' பகுதியில்* **'No one delights more in vengeance than a woman'** *என்ற பொன்(?) மொழி வெளியாகியுள்ள அதே நேரத்தில் தமிழக அரசியலிலும் திடீர்ப் பூகம்பம் ஏற்பட்டுள்ளது. என்ன ஒரு 'வினோத்'தமான ஒற்றுமை!*

வி. அரவிந்த்
25, கோதாவரி பிளாட்ஸ், 75 லேக் வியூ ரோடு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.

இத்தனை பிசினஸ் நடக்கிறதா... ஆனால் ஒருவராது என் சிற்பங்களைப் பார்த்து மயங்கவே இல்லை! சிறிது சிறிதாக என் 'மர'மண்டையில் 'ஒருவேளை நாம் தான் ஏமாந்து விட்டோமோ?' என்ற உண்மை உறைக்கத் தொடங்கியது.

எட்டு மணி நேரமும் கடையில் இருந்தது தான் மிச்சம். அவன் கடை மூடும் நேரம், அலுத்துக் கொண்டே, ஒவ்வொன்றாகத் தூக்கிக் காருக்குக் கொண்டு வந்து, பின் வீடு வந்து சேரும்போது மணி எட்டு.

உடம்பின் அலுப்பும், மனத்தின் வெறுப்பும் சேர்ந்து, படுக்கையில் விழுந்தால் போதும் என்றிருந்தது.

காரில் இருந்து எடுத்து அவற்றை மறுபடி. கராஜில் அடுக்கும்போது என் மனைவி எட்டிப் பார்த்தாள். அவள் புன்சிரிப்பு எனக்குக் கடுப்பாக இருந்தது.

ஞாயிறு முழுதும் நான் டிவி பார்த்துக் கொண்டே கழித்தேன். இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

திங்களிலிருந்து மறுபடியும் ஆபீஸ் வேலையில் ஓடி விட்டது. மனைவி தினமும் கறிகாய் பயிரிடுவதும், ரோஜா செடிகள் நடுவதுமாக பிஸியாக இருந்தாள்.

வெள்ளிக்கிழமை மாலை வேலையிலிருந்து வந்ததும், "நம் யார்ட் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? செடி எல்லாம் வைத்துப் பந்தலும் போட்டாயிற்று!" என்றாள்.

அலுப்புடன் போய்ப் பார்த்தேன்.

என் அருமைச் சிலைகள் எல்லாம் பந்தல் கால்களாக மண்ணில் புதைக்கப்பட்டு இருந்தன!

"நல்ல ஐடியா, இல்லை? உங்கள் 'பொக்கிஷங்'களை நீங்கள் பார்த்து ரசித்துக் கொண்டே இருக்கலாம். என் விருப்பப்படி அவை வீட்டுக்கு வெளியிலும் போயாச்சு. இல்லையா?" ○



ஜோடி ஏற்றி வைத்த ஜோதி!

கண்ணி வெடிகளால் உலகம் முழுவதும் பல உயிர்கள் பலியாவதைக் கண்டு மனம் பதறிய பெண் ஒருவர், அவற்றை முழுவதுமாகத் தடை செய்யக் கோரி போராட்டம் ஒன்றை நடத்தி வருகிறார். தனி ஒருவராக உலகின் பல நாடுகளுக்கும் பயணம் செய்து தனது கருத்துக்கு ஆதரவு தேடி வரும் இந்த வீராங்கனையின் பெயர் ஜோடி வில்லியம்ஸ். அண்மையில் இந்தியா உள்ளிட்ட தெற்கு ஆசிய நாடுகளுக்கு வந்திருந்தார். இந்த நற்பணிக்காக இவருக்கு 1997ம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு அளிக்கப்பட்டது.

(ஆதாரம் : அவுட்லுக்.)

- ஆர். மார்க்கண்டன், சென்னை.

பெண்ணுக்குப் பெண்ணே...

இந்தியாவில் தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் பெண் நாவிதர்கள் இருப்பதாகத்



தெரியவில்லை.
(பியூட்டி பார்லர்களில் உள்ளவர்களை இதில் சேர்க்கக் கூடாது.) தமிழ்நாட்டில் - மூகவை மாவட்டத்தில், திருவெற்றியூர் பாகம்பிரியாள் கோவிலில் பெண்ணுக்குப் பெண்ணே முடியிறக்கும் காட்சி இது.

- கல் - முத்தம்மாள், மதுரை.



ஆன்லைன் வலையில் சிக்கிய குறள்

IT அதிகாரம்

1. Chat எனில் yahoo chat செய்க இல்லையேல் chatடலின் chatடாமை நன்று.
2. பிறன் code நோக்கான் எவனோ அவனே tech fundu.
3. Logic, syntax இவ்விரண்டும் கண் என்பார் program செய்பவர்.
4. எம்மொழி மறந்தார்க்கும் job உண்டாம் job இல்லை 'c' ஐ மறந்தார்க்கு.
5. copy, paste செய்து வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் coding எழுதியே சாவார்.
6. Bug கண்டுபிடித்தாரே ஒருத்தர் அவர் நாண Debug செய்து விடல்


- பத்மா தேசிகன், பெங்களூர்.



அர்த்தமே வேறுதான்!

வங்கி : உங்களுக்குத் தேவை இல்லாதபோது கடன் கொடுக்க முன்வரும் நிறுவனம்.

கமிட்டி அல்லது மாநாடு : தனித் தனியாக இருக்கும்போது ஒன்றுமே சாதிக்க இயலாத நபர்கள், ஒன்றாகக் கூடி "பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று முடிவு எடுக்கும் அமைப்பு.



டயோக்னோசிஸ் : நோயாளியின் பர்ஸைப் பொறுத்து முடிவு செய்யப்படுவது.

மேதை : தான் வாழ்வதற்குண்டான வழியைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் அறிந்து வைத்திருப்பவர்.

அரசியல்வாதி : எந்தப் பிரச்னையையும் திறந்த கைகளுடன் அணுகுபவர்.

பேராசிரியர் : பிறர் அருமையாகத் தூங்கும்போது பேசிக் கொண்டிருப்பவர்.

- ஆர்.எஸ்.லக்ஷ்மி, கோவை.

பாண்டிச்சேரியில் எந்த வீட்டிலாவது இறப்பு நேரிட்டால் அன்று வாசலில் வாழை மரம் கட்டி வைக்கிறார்கள். திருமணங்களுக்குத்தானே பொதுவாக வாழை மரம் கட்டுவது வழக்கம்?

இங்கு, இறந்த வீட்டில், ஒற்றை வாழை மரம் கட்டுவார்கள். திருமண வீட்டில் இரட்டை வாழை மரம் கட்டுவார்கள்.

- ஏ.கே. நாசர், லெட்சுமாங்குடி



"புதிய பக்கெட்டில் தண்ணீர் தங்குமா என்று சரியாகத் தெரியும்வரை பழைய பக்கெட்டைத் தூக்கி எறியாதே"

- ஸ்வீடன் நாட்டுப் பழமொழி.

- நா. பால சுப்பிரமணியம்



நமது நாட்டில் நாம் தேசியக் கொடி என்றும் தேசியப் பறவை என்றும் வகுத்திருப்பதைப்போல, மங்கோலிய நாட்டில் தேசிய பானம் என்பதையும் வகுத்திருக்கிறார்கள். இது 'குமிஸ்' என்பதாகும். 'கிக்' உண்டா என்று கேட்காதீங்க. இது ஒட்டகப் பாலில் எடுக்கப்பட்ட மோர்.

- சா. அனந்தகுமார், கன்னியாகுமரி

பானை, பூனை, வீணை

ஒரு பஸ்ஸின் பின்புறம் எழுதியிருந்த வாசகம் :

நேற்றைய தினம் 'உடைந்த பானை'
நாளைய தினம் 'மதில்மேல் பூனை'
இன்றைய தினம் 'கையில் உள்ள வீணை.


- கே. கவின், பொள்ளாச்சி.

அழுதா பிடிக்காது!

என் மைத்துனரின் நான்கு வயது மகள் சுஜாதா, "பல் வலிக்கிறது." என்று அழுதாள். அவள் அம்மா, "ஆஸ்பத்திரி திறந்ததும் டாக்டரிடம் போகலாம்." என்றாள் சமாதானமாக.

ஆனாலும் குழந்தை அழுகையை நிறுத்தாமல் போகவே, "அழாதேடி. அழுதாலே எனக்குப் பிடிக்காது." என்றாள் தாயார். உடனே அவளுடைய மூத்த மகள் அனுஷா, "ஏம்மா, அவ பல் வலின்னு தானே அழறா? அதுக்கு ஏன் திட்டறே? இப்ப டி.வி.யிலேயும், அழுகையைத்தானே பார்த்துட்டிருக்கே? (ஒரு மெகா சோகத் தொடரை பார்த்துக் கொண்டிருந்தார்கள் அப்போது!) என்றாள் கோபமாக. அனைவரும் சிரித்துவிட்டோம்.

- என்.கே.சகவரி, பெங்களூர்.



விளாம்பழம் நல்லதா என்று பார்க்க ஒரு சிறிய டெஸ்ட்.

பழத்தைத் ஒரு அடி உயரம் தூக்கி தரையின்மீது போட்டால் தரையுடன் ஒட்டி விழுந்தால் நல்ல பழம். பந்து போன்று துள்ளி எழுந்தால் பழம் சரியில்லை என்று அறியவும். விளாம்பழம் விற்பவர் இந்தப் பரிசோதனைக்குச் சம்மதிப் பாரா என்பது வேறு விஷயம்!

- என். ஆறுமுகம், ஸ்ரீவி.சமத்துவபுரம்






மன நிறைவு என்பது இயற்கையாகவே நம்மிடம் உள்ள செல்வம். ஆடம்பரம் என்பது நாமே தேடிக் கொள்ளும் வறுமை. எளிமை, வாழ்வுக்குத் துணை புரியும்.

நண்பனை அவன் இல்லாதபோது மனம் நிறைந்து புகழ வேண்டும். ஆசிரியரை எந்த இடத்திலும் புகழ வேண்டும். மனைவியைக் கூடி வாழும் நேரத்தில் புகழ வேண்டும். புதல்வர்களை மனத்தில் வைத்துப் புகழ வேண்டும். தொழிலாளியை வேலை முடிந்த பின்னர் புகழ வேண்டும்.

- கி.எல். கோவிந்தராஜன், சென்னை-33.



சென்னை, தங்கசாலைத் தெருவில் அமைந்துள்ளது 'செம்படப் பிள்ளையார் கோவில்' என்று அழைக்கப்படும் செங்கழுநீர் விநாயகர் தேவஸ்தானம். சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயே ஆட்சியின் போது, செம்படவர்கள் கடலில் வலை வீசியபோது சிக்கிய சிலையைச் செம்படவர்கள் பிரதிஷ்டை செய்ததால் 'செம்படப்பிள்ளையார்' என அழைக் கப்படுகிறார். கந்தகோட்டம் பிரம் மோத்சவத்தில் வீதி உலா வரும்போது இக்கோயிலின் முன்பு சற்று நேரம் நின்று தீப ஆராதனை செய்யப்படுகிறது. பிள்ளையாருக்குச் சூரைத் தேங்காய் விட்டால் தங்கள் பிரார்த்தனை நிறைவேறுகிறது என்று நம்புகிறார்கள்.

- பத்மாமணி, சென்னை

"உங்கள் நயனங்களுக்கு, உப நயனம் இங்கு செய்யப்படும்."

மூக்குக் கண்ணாடிக் கடையில் ரசித்தவர் : திருமதி. பிச்சை சுவாமிநாதன்

ஆடைத் திருவிழா

சின்னமனூர் நகரில் உள்ள மகாராஜா ஜவுளிக்கடை விளம்பரத்தில் :

"ஊரெங்கும் ஆடித் திருவிழா, உங்கள் மகாராஜாவில் ஆடைத் திருவிழா!"

- அ. ராஜா ரஹ்மான்கம்பம்

முன்னிரவு நேரம். தொழில் வளர்ச்சி அமைச்சர் சந்திரேஷ்வர் தம் பங்களாவின் ஏ.சி அறையில் ஓய்வாக அமர்ந்து டீ.வி.யில் லயித்திருந்தார். அறை வாசலில் நிழலாடவே திரும்பினார். அவருடைய பி.ஏ. பிரேம்நாத் பவ்யமாக நின்றிருந்தான்.

"என்ன விஷயம்?"

"உங்களைச் சந்திப்பதற்காக ஆனந்த் என்ற ஏஜெண்ட் வந்திருக்கிறார் சாப். நாம் அரசு திட்டங்களுக்காக கம்ப்யூட்டர் வாங்கினால் நமக்குக் கணிசமாக கமிஷன் தருவதாகச் சொல்கிறார்."



முதலில் மகிழ்ச்சியால் மலர்ந்த மந்திரியின் முகம் மறுநொடியே சுருங்கியது.

"இப்போதெல்லாம் யாரையும் நம்ப முடியவில்லை. பத்திரிகை நிருபர்களே வெளிநாட்டு ஏஜெண்டுகள் மாதிரி நடித்து, அரசியல்வாதிகளைச் சந்தித்து, கட்டுக்கட்டாகப் பணத்தை லஞ்சம் தந்து, அதைத் திருட்டுத்தனமாக வீடியோ கேமராவில் படம் பிடித்து விடுகிறார்கள். அப்புறம் நாம் ரகசியமாக லஞ்சம் வாங்கிய காட்சியை, நாடு முழுவதும் டீ.வி.களில் ஒளிபரப்பி, சந்தி சிரிக்க வைத்து விடுகிறார்கள்."

பி.ஏ தயங்கிக் கொண்டு நின்றான். "அவரை அனுமதிப்பதா வேண்டாமா சாப்?"

சந்திரேஷ்வர் புருவம் சுருக்கி யோசித்தார். "ஒரு நல்ல சந்தர்ப்பத்தை விட்டு விடவும் எனக்கு மனசில்லை. இப்படிச் செய். அந்த ஏஜெண்டை நமது ஸ்பெஷல் செக்யூரிட்டி ஸ்குவாடை விட்டு ரகசிய மைக்கோ, கேமராவோ வைத்திருக்கிறானா என்று பக்காவாக சோதனை போட்ட பின், உள்ளே அனுப்பு."

"சரி சாப்."

"அந்த ஏஜெண்டின் வாட்ச், பேனா, மோதிரம் என்று ஒன்று விடாமல் கவனமாக பரிசோதிக்கச் சொல். இப்போதெல்லாம் மைக்ரோ லென்ஸ் கேமரா ஒரு பட்டாணி சைஸில் வந்துவிட்டது. அதை கோட் பட்டனில் கூட ஒட்டி வைத்துக்கொண்டு ஏமாற்றி விடலாம். ஜாக்கிரதை."

"கவலையே படாதீர்கள் சாப். நமது ஸ்குவாட் அந்த ஆனந்தை அங்குல அங்குலமாகச் சோதனை போட்ட பின்புதான் உங்களிடம் அனுப்புவார்கள்."

சரியாக ஒரு மணி நேரம் கழித்து

பசு. தனபாலன்



காற்று நுழையாத இடத்தில்...

'நமஸ்தே சாப்' என்று பணிவுடன் நுழைந்த அந்த இளைஞன் கண்ணாடி அணிந்திருந்தான். கையில் சிறிய பிரீஃப்கேஸ். சந்திரேஷ்வர் உற்சாகமாக அவனை வரவேற்றார்.

"வாருங்கள், மிஸ்டர் ஆனந்த். உட்காருங்கள்."

"என் செக்யூரிட்டிகள் உங்களுக்கு நிறைய தொல்லை கொடுத்துவிட்டார்களா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை சாப். இன்றைய நிலையில் முன்னெச்சரிக்கையும் தேவைதானே?"

"நல்லது. நீங்கள் வந்த விஷயத்தைச் சொல்லலாம்."

"நான் ஸ்வீடனிலுள்ள ஏஞ்சல்ஸ் கம்ப்யூட்டர் கம்பெனியின் இந்தியப் பிரதிநிதி. நமது அரசாங்கம், கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின்படி ஒவ்வொரு கிராமத்துக்கும் கம்ப்யூட்டர் வழங்கப் போவதாக அறிந்தோம். நீங்கள் எங்கள் கம்பெனி கம்ப்யூட்டரை வாங்க வேண்டும் என்பது எங்கள் வேண்டுகோள்."


அமைச்சர் அதிகார தோரணையுடன் சிரித்தார். "அது அவ்வளவு சுலபமில்லையே? டெண்டர் விட வேண்டுமே?"

ஆனந்தின் குரலில் தேன் தடவியிருந்தது. "நீங்கள் மனது வைத்தால் முடியும் சாப்."

சந்திரேஷ்வர், அவன் கண்களை நேருக்கு நேராகப் பார்த்துக் கேட்டார். "உங்கள் கம்பெனிக்கு ஆர்டர் தருவதால் எனக்கு என்ன லாபம்?"

மறக்காம பாராட்டறாங்க!

✉ 'நினைவாற்றல் ஒரு கூர்மையான கத்தி போன்றது. மழுங்கி விட்டால் மெழுகுவர்த்தியைக் கூட வெட்ட முடியாது' என 'மாண்புமிகு மெமரி' தொடர் மனத்தில் பசுமையாய்ப் பதித்துவிட்டது.



• என்.சி. ஸ்ரீதரன்

திருவண்ணாமலை
இலெமூரியன்.

✉ பல குழந்தைகள் தமக்குள் இருக்கக் கூடிய திறமைகளையும், சக்திகளையும் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றன என்பதைப் பருந்துக்குஞ்சு உதாரணம் மூலம் என்.சி. ஸ்ரீதரன் விளக்கிக் கூறிய விதம் அருமை.

மணியக்காரன்பாளையம்,
ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

✉ 'மாண்புமிகு மெமரி' பத்தாவது அத்தியாயத்தோடு நிறுத்தியது வருத்தமே! (எப்படி மறக்காம கடிதம் எழுதிட்டேன் பாருங்க!)

சின்மயாநகர், என். ரஜினி.

✉ 'மூளையைச் சலவை செய்; ஞாபக சக்திக்குப் பயிற்சி கொடு...!; வலது மூளையைப் பயன்படுத்து; நினைவில் நிரப்பிவை செயல்படுத்து' என்பதை பயிற்சியாக எடுத்து செயல்பட்டோம். ஆசான் திருவள்ளூர் என்.சி. ஸ்ரீதரனுக்கு நன்றி.

சென்னை – 78, அஹவலன்,
வனிதா, குமரன்,
மோகனாவாணி.

''நாங்கள் உங்களுக்குக் கமிஷனாக இருபது கோடி ரூபாய் வரை தரத் தயாராக இருக்கிறோம், சாப்.''

சந்திரேஷ்வர் வாயெல்லாம் பல்லாக, நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''ஓ.கே. ஆனந்த். ஐந்து கோடி ரூபாயை இந்தியப் பணமாக தந்து விடுங்கள். மீதியை ஸ்விஸ் பேங்கில் எனது கணக்கில் செலுத்தி விடுங்கள்.''

ஆனந்த் எழுந்து பிரீஃப்கேஸைத் திறந்து கரன்சி கட்டுக்களை எடுத்து, டேபிளில் அடுக்கி வைத்தான்.

''இதில் ஐந்து லட்ச ரூபாய் இருக்கிறது சாப். இது அட்வான்ஸ். ஒப்பந்தம் கையெழுத்தானவுடன் நீங்கள் கேட்டபடி மீதித் தொகையையும் தந்து விடுகிறோம்.''

சந்திரேஷ்வர் புன்னகை மாறாமல் பணத்தை எடுத்து மேஜை டிராயரில் போட்டுக் கொண்டார். இருவரும் பரஸ்பரம் கைகுலுக்கிக் கொண்டதும் ஆனந்த் அமைச்சரின் அறையை விட்டு வெளியேறினான்.

'நேர்மைக் கனல்' இணைய தள பத்திரிகை அலுவலகத்தில் நுழைந்த ஆனந்த்தை மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டார் ஆசிரியர் வர்மா.

''யூ ஆர் கிரேட் தீபக். அமைச்சர் பேரம் பேசி, லஞ்சம் வாங்கும் காட்சி பிரமாதமாக வீடியோவில் பதிவாகியிருக்கிறது. காற்று நுழைய முடியாத இடத்தில்கூட பத்திரிகைகாரர்கள் நுழைந்து விடுவார்கள் என்பதை நிரூபித்து விட்டாய். ஊழல் செய்யும் அரசியல்வாதிகளைப் பொதுமக்கள் மத்தியில் தோலுரித்துக் காட்டிய பெருமை நமக்குக் கிடைக்கும்.''

''தாங்க்யூ சார். சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கார் விபத்தில் நான் இடது கண் பார்வையை இழந்தபோது வருத்தப்பட்டேன். ஆனால் இப்போது அதே ஊனம் தான் ஒரு பெரிய சாதனை புரிய பயன்பட்டிருக்கிறது'' என்று நெகிழ்ச்சியுடன் பேசிய நிருபர் தீபக், தன் பார்வையிழந்த இடது கண்ணில், கண் வடிவத்தில் பொருத்தப்பட்டிருந்த சின்னஞ்சிறிய மைக்ரோ லென்ஸ் கேமராவை மெதுவாகக் கழற்ற ஆரம்பித்தான்! ○

'டீ' மேல் தாக்கரேவுக்கு என்ன கோபமோ? டீ பார்ட்டி என்றாலே சூடாகி விடுகிறாரே! முதலில், டில்லியிலுள்ள சிவ சேனை அமைச்சர்கள் முஷாரஃப் டீ பார்ட்டிக்குப் போகக் கூடாதென்றார்.
"இந்த ஸம்மிட் சர்வ



• அமைதிப்புறா

நிச்சயமாக 'ஃப்ளாப்'தான்!" என்று ஜோசியம் சொன்னவர், "பாகிஸ்தானுக்கு விஸாவைத் தளர்த்துவதும், பங்களாதேஷுக்கு பஸ் விடுவதும் சுத்தப் பைத்தியக்காரத்தனம்" என்று கொதிக்கிறார். இதனால் இங்கு, லக்ஷர்-இ-தொய்பா போன்ற தீவிரவாத அமைப்புகளின் அட்டகாசம் அதிகரிக்கும், சட்டவிரோதமான அகதிகளின் எண்ணிக்கை பெருகும்; இரண்டும் சேர்ந்து இந்தியாவை நாசமாக்கி விடும் என்பது அவரது தீர்க்கமான முடிவு.

மும்பையில், மழைக்கால அசெம்ப்ளித் தொடருக்கு முன்னால் வழங்கப்படும் வழக்கமான டீ பார்ட்டியையும் சிவசேனை ஒதுக்கி விட்டது. 'தேநீர் விருந்துக்கு வா' என்று எல்லோரையும் அழைத்துவிட்டு, எங்கள் சி.எம். சொந்த ஊரில் யாகம் பண்ணப் போய்விட்டார். (பாவம், 17 புது 'பில்'களைப் பாஸ் பண்ணியாக வேண்டுமே?) 'முதல்வரே வராத பார்ட்டிக்கு நாங்கள் எதற்கு செய்ய வேண்டும்? பொறுப்பற்ற மனிதராயிருக்கிறாரே விலாஸ் ராவ்?" என்று இவர்கள் பொங்குகிறார்கள். ஆனால் டெபுடி சி.எம்.மான சகன்புஜ்பலேர், 'அவரில்லாவிட்டால் என்ன? நானிருக்கிறேனே? இவர்கள் வராததற்கு காரணம், விலாஸ்ராவ் இல்லாததா? நான் இருப்பதா?" என்று குமுறுகிறார்.

இவர்கள் போகாவிட்டாலும், டில்லி டீ பார்ட்டிக்கு, மும்பையிலிருந்து வரிந்து கட்டிக் கொண்டு சென்றவர்கள் ஏராளம். ஷாருக்கான், ஷபானா ஆஸ்மி, ஜாவேத் அக்தர், திலீப்குமார்

ஔரங்கசீபிடம்

(மைனஸ் ஸாயிரா), ஷியாம் பெனகல், சுனில் கவாஸ்கர்... இவர்களெல்லாம் வெறும் கை குலுக்கலோடு சரி; ஆனால் இந்தத் தருணத்துக்காக, தம் கைப்படச் சித்திரம் எழுதியவர் எம்.எஃப். ஹுசைன். இரண்டு வெண் புரவிகளின் கடிவாளங்களை ஓர் அமைதிப்புறா ஏந்தியிருப்பது போலிருக்கும் பெயிண்டிங்; புறாவின் வாயில் ஓர் ஆலிவ் கிளை; கீழே 'உலகில் அமைதியைத் தேடிச் செல், நண்பர்களை சம்பாதித்துக் கொள்' என்ற குர்-ஆன் வரிகள். 'முஷாரஃபிடம் ஆலிவ் கிளையை நீட்டுவதென்பது, ஔரங்கசீபிடம் அமைதிப் பாட்டுப் பாடுவது போலத்தான்' என்று தாக்கரே கிண்டலடித்திருப்பது வேறு விஷயம்.



• அழகுதாய் அதிர்ஷ்டக் குழந்தை

ஔரங்கசீப் கையில் வீணை போலல்லாமல், கிடைத்த வாய்ப்பை ஒழுங்காகப் பயன்படுத்தியிருப்பவர் மும்பையிலிருந்து சென்ற டாக்டர் அக்னி ஷேகர் - 'பானும் காஷ்மீரி'ன் சேர்மன். முஷாரஃபின் கையைக் குலுக்குவதுடன் நிறுத்தாமல், "நான் நடிகன் அல்ல; என் தாய் மண்ணிலிருந்து 12 வருடங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும் காஷ்மீர்; என்னைப் போல் ஊரை விட்டு விரட்டப்பட்ட மூன்றரை லட்சம் காஷ்மீர் பண்டிட்டுகளின் அவல நிலைக்கு நீங்கள்தான் காரணம்" என்று ஓர் உலுக்கு உலுக்கி விட்டார். ஆடிப் போன முஷாரஃப், "பார்க்கலாம்.. ஏதாவது செய்தாக வேண்டும்" என்று தடுமாறினாராம். சொந்த டயலாக்கைப் பேசிய அக்னிஷேகரைக் கண்டு, எழுதப்பட்ட டயலாக்கைப் பேசும் பாலிவுட் நட்சத்திரங்கள் அதிர்ச்சியில் வாயடைத்து நின்றனராம்.

வரவர பாலிவுட்காரர்களால் டீ குடிக்கக் கூட வாயைத் திறக்க முடிவதில்லை. தங்கள் சாதனைகளைப் பீற்றிக்கொள்வது எங்கே? சின்ன வெற்றி என்றால்கூட, உடனே அண்டர்வர்ல்ட் மோப்பம் பிடித்துவிடுகிறதே? தற்சமயம் 50 பாலிவுட்காரர்களுக்கு (25 தயாரிப்பாளர்கள், மற்றவர்கள் ஃபைனான்ஷியர்கள், டிஸ்ட்ரிப்யூட்டர்கள், நடிகர்கள்) மிரட்டல் வந்திருக்கிறது. மனீஷா கொய்ராலாவின் செக்ரட்டரியை மேலுலகுக்கே அனுப்பி விட்டார்கள். 'எக்ஸ்டார்ஷன் லிஸ்ட்'டில் லேடஸ்ட், அம்ரீஷ் பூரி! சினிமா வில்லனான இவரிடமே, ஒரு கோடி கேட்டு மிரட்டியிருப்பவர் அப்துல் சலீம்; ஆனால் ஃபிலிம்காரர்கள் சொல்வதென்ன? "ஃபோன் மிரட்டல்கள் எங்களுக்குப் புதிதல்ல; ஆனால் யாருக்குத் தண்டம் அழுவதென்றே தெரியவில்லை. சலீமுக்கா? சோடா ராஜனுக்கா? சோடா ஷகீருக்கா?"...ம்ம் படா பேஜார்தான்.

பணமும் புகழும் கெட்ட காரியங்களைத்தான் தூண்டுமென்பதில்லை. நல்லது நடக்கவும் அதுவே வித்தாகிறதே. பாருங்களேன், சுஷ்மிதா சென் தாயாகியிருக்கிறார். அட... ஸ்டெஃபி கிராஃப் தாயாகியிருப்பது போலில்லீங்க... அவர் இன்னும் பிறக்காத ஐந்து மாதக் குழந்தைக்கு. இவர், ஏற்கெனவே பிறந்துவிட்ட 18 மாத ரீனிக்கு. 'மதர் தெரஸா,' 'குழந்தைகள் நலம்,' 'பாரதியப் பெண்ணின் தாயுள்ளம்' என்றெல்லாம் அழகிப் போட்டிகளில் கப்ஸா அடிப்பதுடன் விடாமல், உண்மையிலேயே ஒரு குழந்தையை இவர் தத்தெடுத்திருப்பது, அழகிய உள்ளத்தைப் பிரதிபலிக்கவில்லையா?

— ஜெயஸ்ரீ ராஜ்

அமைதிப் பாட்டு!



பெருஞ்சுவர் மறைந்தது பெய்ஜிங் மலர்ந்தது!

சென்ற முறை நழுவவிட்ட கோட்டையை இம்முறை பிடித்திருக்கிறது சீனா. இரண்டே வாக்கு வித்தியாசத்தில் சிட்னியிடம் 2000 ஒலிம்பிக்ஸ் வாய்ப்பை இழந்த பெருஞ்சுவர் நாடு, 2008 ஒலிம்பிக்ஸை நடத்தும் வாய்ப்பைச் சமீபத்தில் பெற்றிருக்கிறது. (2004 வாய்ப்பு ஏதென்ஸுக்கு).

பெய்ஜிங்குடன் பாரிஸ், டொரன்டொ, ஒஸாகா, இஸ்தான்புல் ஆகிய நகரங்களும் இந்த விஷயத்தில் கடுமையாகப் போட்டியிட்டன (ஒலிம்பிக்ஸ் போட்டிகளை நடத்தும் உரிமை வழங்கப்படுவது குறிப்பிட்ட நகரங்களுக்குத்தானே தவிர நாடுகளுக்கல்ல)

வழக்கமாக ஒவ்வொரு நாடும் தனது அருமை பெருமையையும், குறிப்பிட்ட நகரத்தில் எந்த அளவுக்கு பிரம்மாண்டமான ஒலிம்பிக் வசதிகளைச் செய்து தர முடியும் என்பதையும்தான் விளக்குவது வழக்கம். ஆனால் இந்த முறை பெய்ஜிங்குக்கு எதிராக கடுமையான விமர்சனங்களே பிரசாரத்தில் முக்கிய இடம் பிடித்தன.

"மனித உரிமைகளை ஒரு பொருட்டாகவே மதிக்காத ஒரு நாட்டுக்கு ஒலிம்பிக் போன்ற சர்வதேச அங்கீகாரத்தை ஒரு போதும் அளிக்கக் கூடாது" என்றன பல இயக்கங்கள். தியானென்மன் சதுக்கப் படுகொலையும், சீனா ஒரு ஜனநாயக நாடாக இல்லாததையும் இதற்கு ஆதாரமாகச் சுட்டிக் காட்டினார்கள் அவர்கள்.

சமீபத்தில் அரங்கேறின பரபரப்பான அந்த நிமிடங்கள் : ஒவ்வொரு நகரமும் 45 நிமிடங்களுக்குத் தனது ''கட்சி''யை எடுத்துச் சொல்ல வேண்டும். தொடரும் பதினைந்து நிமிடங்களுக்கு சர்வதேச ஒலிம்பிக் குழு உறுப்பினர்கள் கேட்கும் பல்வேறு சங்கடமான கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும். உறுப்பினர்கள் பல்வேறு



நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். எல்லா கண்டங்களிலிருந்தும் பிரதிநிதித்துவம் உண்டு இந்தக் குழுவில். விளையாட்டு வீரர்களிலிருந்து பிரிட்டிஷ் இளவரசி ஆன் வரை பல உறுப்பினர்களும் அன்று மாஸ்கோவில் நடைபெற்ற தேர்தலில் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு சுற்றுத் தேர்தலிலும் மிகக் குறைவான வாக்குகள் பெற்ற நகரம் நீக்கப்பட்டு பிற நகரங்களுக்கிடையே மீண்டும் தேர்தல். இதுதான் ஒலிம்பிக் குழுவின் வழக்கம். முதல் சுற்றிலேயே ஒஸாகா இந்த வகையில் தகுதி இழந்தது. வெளியே காத்திருந்த ஜப்பானியர்கள் விஷயத்தைக் கேள்விப்பட்டவுடன் சோகவயப்பட்டனர்.

அடுத்து குறைவான வாக்குகள் பெற்றது இஸ்தான்புல். இறுதித் தேர்தலில் 56 வாக்குகளைப் பெற்று பெய்ஜிங் முன்னணி வகிக்க, டொரன்டோவுக்கு 22 வாக்குகளும் பாரீஸுக்கு 18ம் கிடைத்தன. விரைவில் பதவிக்காலம் முடிவுறவிருக்கும் ஒலிம்பிக் குழுவின் தலைவரான ஜாம்பவான் சமராஞ்சுடைய அசைக்க முடியாத ஆதரவு இம்முறை பெய்ஜிங்குக்கு இருந்ததும் அதன் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணம் என்று பலரும் கருதுகின்றனர்.

சீன அதிபரான ஜியாங் ஜெமினுக்குக் கிடைத்த பெரும் வெற்றி என்று இதைக் கூறலாம். ஆனால் தமது நாட்டில் ஒலிம்பிக்ஸ் தொடங்கும்போது அவர் பதவியிலிருந்து விலகியிருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்கத்துக்கு மாறாக இம்முறை சர்வதேச ஒலிம்பிக் குழுவினருக்கு, பலவித பயமுறுத்தல்கள். "மனித உரிமைகளை மதிக்காத சீனாவுக்கு ஒலிம்பிக்ஸ் வாய்ப்பு கொடுக்கப்பட்டால் உங்களையெல்லாம் தீர்த்துக் கட்டிவிடுவோம்" என்று பலவித தொலைபேசி மிரட்டல்களும் பேக்ஸ் செய்திகளும் உறுப்பினர்களுக்கு வந்தனவாம். "நம்மை இப்படித்தான் முடிவெடுக்க வேண்டும் என்று வற்புறுத்த இவர்கள் யார்?" என்ற கோபத்தைக் கிளப்பி, ஊசலாடிக் கொண்டிருந்த சில உறுப்பினர்களின் மனங்களையும் பெய்ஜிங்குக்கு ஆதரவாக மாற்றிவிட்டதாம் இந்த எதிர்ப்பு.

- ஜி.எஸ்.எஸ்.

ஒரு குடத்துத் தண்ணியிலே
சமைத்துக் குளித்துத் துவைத்துக்
கழுவி சகலமும் முடித்திடுவோம்
மாயாஜாலம் செய்திடுவோம்!

தங்கத்தைப் போலவே
தண்ணீரைப் பதுக்கியே வைத்திடுவோம்!

எல்லா கீதமும் வெறுத்துப் போச்சு!
தண்ணீர் வாரீ ஹாரரனே தேசியகீதமாச்சு!
தண்ணீர்க் குடமே தேசிய சின்னமாச்சு!

கருந்திரள் மேகமே!
மாதம் ஒரு முறை யேனும்
வானவீதி உலா வந்து
எங்களுக்காக கண்ணீர் சிந்து!

சத்யம்



குறையொன்று 22

பகவான் திருக்கரத்து சங்கு பட்டதும் ஞானியாகிப்போன த்ருவன், எம்பெருமானை ஸ்தோத்திரம் பண்ண ஆரம்பிக்கிறான்.

'இத்தனை நாளாக நமது ஹ்ருதயத்திலே பார்த்தோமே... அவன்தான் வெளியிலேயும் நிற்கிறான். அந்த ரூபமும் நம் ஹ்ருதயத்தில் உள்ள ரூபமும் ஒன்று தான்...!' - இப்படி உணர்ந்து குழந்தை சொல்கிறது:

"ஹே எம்பெருமானே! எதிரே காட்சியளிக்கக் கூடியவனே! நீயல்லவோ என்னுள் புகுந்து என்னைப் பேச வைக்கிறாய்!"

ஆகையினாலே, நமது கர்ண கனேபரங்கள் வேலை செய்ய வேண்டுமானாலும் சரி, அவனை ஸ்தோத்திரம் பண்ணவேண்டுமானாலும் சரி... அவன் உள்ளே புகுந்து செயல்படுத்தினாலொழிய முடியுமா!

அதை அந்த சின்ன குழந்தை த்ருவன் 'நீயே என்னுள் புகுந்து இதையெல்லாம் செய்கிறாய்...' என்று சொல்லி அந்த எம்பெருமான் எதிரேயே வெளியிடுகிறது.

உயர்ந்த உபநிஷத்தில் சொல்லப்பட்ட விஷயம் 'எம்பெருமான்தான் சூர்ய மண்டல அந்தர்வர்த்தியாய் இருக்கக் கூடியவன்' என்ற உண்மை. இதையே த்ருவ சரித்திரமும் பிரசித்தமாகத் தெரிவிக்கிறது.

எல்லாவற்றையும் நாம் கண்ணினால் தெரிந்து கொண்டு விட முடியாது. பார்த்துக் கொண்டே போனோமானால், மோக்ஷத்தை அடைந்த நிலையில், இந்த்ரியங்களுடைய உதவியில்லாமலே, எல்லாமே ஞானத்துக்கே விஷயமாகும் - தெரிய ஆரம்பிக்கும். அப்போது நாம் கண்ணால்தான் பார்க்க வேண்டும் என்பது இல்லை. ஞானத்தினாலேயே பார்க்கலாம். ஞானத்தினால் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளும் நிலை பகவானுக்கே உரியது. நம்மைப்போல் ஆத்ம வசப்பட்ட ஜீவாத்மாக்களுக்கு முக்த தசையில்தான் அது ஏற்படுகிறது. பூலோகத்தில் கட்டுப்பட்டிருக்கிற வரையில் இந்த்ரியங்களால்தான் உணர முடிகிறது.

ஆனால் இந்த்ரியங்கள் வரையறுக்கப்பட்ட ரீதியில் தான் அமைந்திருக்கின்றன. இந்த்ரியங்களைக் கொண்டு பெரிய விஷயங்களைப் பார்க்க வேண்டுமானால் எப்படி முடியும்!

இதைத்தான் உபநிஷத் சொல்கிறது- த்ருவன் சரித்திரமும் எடுத்துக் காட்டுகிறது:

ஹ்ருதயத்தினாலே எம்பெருமானை தியானம் பண்ணி, தியானம் பண்ணி, உத்தமமான மனசினால், ஹ்ருதயத்தினால் பார்க்க முடியுமேயொழிய கண்ணால் பார்க்க முடியாது.

இவ்வாறு ஹ்ருதயத்திலே, சஹஸ்ரதள பத்மத்திலே வீற்றிருப்பவன் எப்படி இருக்கிறான்?

தத்-சத்-வாக்ய பூதனாய் இருக்கிறான்.

ஓம்- தத், சத் என்ற இந்த மூன்று சப்தங்கள் ரொம்ப முக்கியம்.

ஓம் என்பது பிரணவம்

தது என்றால் அது என்று அர்த்தம்.

சது என்றால் எப்பொழுதும் அழியாமல் இருக்கக் கூடியது என்று அர்த்தம்.

பிரணவமாயிருக்கக் கூடியவன்- தது- அந்தப் பரபிரும்மமானது- சத்தானது- அழியாதது!

-இதுதான் முழு விவரணம்.

ஆகவே தத் சத் வாக்ய பூதன் என்ற பிரயோகம் பரமாத்மாவைத்தான் குறிக்கும்.

ஆகையினால்தான் ராமாயணம் மொத்தமும் 24,000 சுலோகமும் காயத்ரியை விவரிக்கிறது என்கிறார்கள்.

காயத்ரியிலே இருக்கிற முதல் அக்ஷரம் 'த'வைக் கொண்டு வால்மீகி ராமாயணத்தை ஆரம்பிக்கிறார்.

காயத்ரியுடைய பொருளை ராமாயணமாக நடித்துக் காட்டினான் பகவான் ராமாயணத்திலே. சஹஸ்ரநாமத்திலே அதையே திருநாமமாகச் சொல்கிறார்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

பீஷ்மர். அங்கே சொல்லப்பட்ட கதைதான் திருநாமத்திலேயும் அமைந்திருக்கிறது என் பதை உணரவேண்டும்.

விச்வம் என்ற முதல் சப்தத்தை ஆதி சங்கர பகவத்பாதாள் என்ன, மத்வாச் சார்யர் என்ன, பராசர பட்டர் என்ன... எல் லோருமே பாஷ்யத்தில் ஒரே விதமாக விளக்குகிறார்கள். புல்லிங்க சப்த: சாக்ஷாத் விஷ்ணு... புருஷர் களைக் குறிக்கும் அனைத்து சப் தங்களும் அவ னையே விஷ்ணு வையே சொல்கின் றன. ஸ்த்ரீலிங்க சப்தங் களும் அவனையே குறிக் கின்றன. நபும்சகலிங் கமாய் வருவனவெல் லாமும் கூட அவ னையே குறிக்கின் றன.

நபும்சகமாக வருகிறபோது பிரும்மம் என்று சொல்கிறோம். புல்லிங்க சப்த மாக வருகிற போது நேரேயே அவனிடம் அன் வயமாகிறது. ஸ்த்ரீலிங்க சப்தங்களெல் லாம் அவனு டைய பெருமை களை விளக்குவன வாக அமைந்திருக்கின் றன.

இந்த சஹஸ்ரநாமத்துக்கு அதிதேவ தையாய் விஷ்ணு ஒருவனே இருப்பதனாலே, ஸ்த்ரீ லிங்கமானாலும், புல்லிங்கமானாலும் நபும்சகமானாலும் எல்லாமே பொருந்தும்.

ஆனால் ஒன்றுமே பொருந்தாது என்ற நிலையும் உண்டு!

'ஆண் அல்லன், பெண் அல்லன், அலியும் அல்லன்!' என்றார் ஆழ்வார்.

இதை யார் சொல் கிறார்கள்?



சாக்ஷாத் கஜேந்திரன்சொல்கிறான்!

"நான் பிரார்த்திக்கிற மூர்த்தி எப்போர்ப் பட்டவன் தெரியுமா?... புருஷனும் அல்ல; ஸ்த்ரீயும் அல்ல; அலியும் அல்ல... இதை யெல்லாம் காட்டிலும் எது எங்கு நிற் கிறதோ, அது வந்து என்னைக் காப்பாற்றட் டும்..." என்றான் கஜேந்திரன்.

அவனே புருஷன்; அவனைக் காட்டி லும் வேறான புருஷன் இல்லை; அவன் ஒருவனே விச்வ வியாப்தமாய் அமைந்திருக் கிறான்.

தத் சத்த வாச்ய பூதனாய் இருக்கிறான்.

அவனை நினைப்பதனால், விஷ்ணு சப் தத்தினால் இந்த்ரியங்கள் எல்லாமே உயர்ந்த ரீதியில் கர்மாவுக்கு அனுகூலமாக நாம் வேலை செய்வதற்கு அனுகூலமாகச் செயல்படுகின்றன.

சூர்ய: என்று ஒரு சப்தம் இருக் கிறது. சூர்ய சப்தத்தி னால் சொல்லப் படக் கூடியவன் பரமாத்மாதான்.

நம்மைப் பிரே ரேபணம் பண்ணு கிறவன்- நியமிக்கிற வன் அவன்தான். அவ்வாறு நியமிக்கிற போதே கர்ண களே பரங்களுக் கெல்லாம் சக்தியைக்கொடுக் கிறான். இதைச் செய் அதைச் செய் என்று ஆக்ஞாபித்து, சக்தி யைக் கொடுத்து நடத்துகிறான். இதி லிருந்து என்ன தெரி கிறது...?

கை - கால்கள் நல்ல முறையில் வேலை செய்ய வேண்டுமென்றா லும், இந்த்ரியங்கள் நல்ல முறையில் வேலை செய்ய வேண்டுமானாலும், அறிவு நல்ல முறை யில் வேலை செய்ய வேண்டுமானாலும், மனஸ் சலிக்காமல் வேலை செய்ய வேண்டுமானாலும் எம்பெரு மானுடைய உயர்ந்ததான அனுக் கிரஹம் வேண்டும்.


லௌகிகமாய் ஒன்று பார்க்கலாம்- சூரி யனே தென்படவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்... ஒரே இருட்டடைந்து உல கமே இருண்டு போய்விட்டது.... இந்த்ரியங் களெல்லாம் வேலை செய்யுமா?.... சூரியன் இல்லையென்றால் கண்ணால் பார்க்க முடியுமா வஸ்துக்களை...? முடியாது.

ஆகையினாலே, வெளியிலே தெரியக் கூடிய சூரிய சக்தியினால்தான் உலகமே இயங்குகிறது என்பது தெரிகிறது.

வேதத்தில் அக்னிஹோத்ரம் என்று ஒரு கர்மா. இரண்டு வேளை அக்னி ஹோத்ரம் பண்ண வேண்டும். யக்ஞம் பண்ணுகிறவர்கள் அக்னிஹோத்ரத்தை விடாமல் பண்ண வேண்டும். அதுவும் அதிகாலையில் பண் ணக்கூடிய ஹோமத் தில் சூரியனை தியா னம் பண்ணவேண் டும். சூரிய சக்தியா னது மத்தியான வேளையிலே பிர காசித்து, உஷ்ண சக்தி யாக மாறி, அக்னி யாக இருக்கிறது; இந்த இரண்டையுமே வேதம் நமக்கு எடுத் துக் காட்டுகிறது.

ஆகையினாலே, சூரியனையும் அக்னி யையும் அந்த அக்னி ஹோத்திரம் என்ற கர்மாவினாலே நித் யம் உபாஸிக்க வேண் டும். சூர்ய சக்தி இல் லாமல், அக்னி சக்தி இல்லாமல் நம்மால் வாழ முடியுமா..?

விச்வ வியாபக னான எம்பெருமான் விஷ்ணுவாக எங்கும் பரவியிருந்து, சூர்ய சக்தியாக இருந்து,



பக்தி ஊஞ்சல்

நாம் இறைவனை வழிபட தியானத்தில் அமரும் போது மனமோ இங்கும் அங்குமாய் அலைந்து கொண்டிருக்கும்.

அலையும் மனத்தை அப்படியே அழகான ஊஞ்சலாக்கி, நவ வித பக்திகளாகிற மாணிக்கம் முதலான நவ ரத்னங்களைப் பதித்து அந்த தங்க ஊஞ்சலில் பால கோபாலனை, அமர்த்தி ஊஞ்சலாடி மகிழலாமே!

– பெங்களூர் பத்மா தேசிகன்

அருள்வாக்கு

அறிவு வளர்ச்சிக்கு உதவும் டாகுமெண்டரி தவிர ஸினிமா அடியோடு வேண்டாம்; பாலிடிக்ஸ் மாதிரித்தான் அதுவும் என்பதே என் அபிப்ராயம். தற்போதைய ஸினிமாக்களைப் பற்றி நான் கேள்விப்படுவதிலிருந்து வேறு விதமாக என்னால் அபிப்ராயப்படமுடியவில்லை. ஆனாலும், எவரானாலும் மனோரஞ்சகமாகக் கொஞ்சம் பொழுது போக்கு இல்லாவிட்டால் வாழ்க்கையே இறுக்கிப் புழுங்குகிற மாதிரிதான் ஆகிவிடும். குறிப்பாக இந்த ஸ்வதந்திர யுகத்தில் இந்தப் பாயிண்டையும் கவனிக்காமலிருக்க முடியவில்லை. அதனால் என்னுடைய அபிப்ராயக் கண்டிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொடுத்து, எப்போதாவது ஒரு ஸமயம், இருப்பதற்குள் தரக் குறைவாக இல்லாதது என்று பெயர் வாங்கிய படங்களுக்குப் போவதென்று மாணவர்கள் வைத்துக் கொள்ளலாம் என்று 'கன்ஸெஷன்' கொடுக்கிறேன்.



ஸினிமாவுக்குச் சொன்னதேதான் மற்ற கலை நிகழ்ச்சிகளுக்கும். ஆடல்-பாடல், நாடகம் எந்தக் காலத்திலும் இருந்திருப்பதால், வரம்புக்கு உட்பட்டு அவற்றை மாணவர்களும் பார்த்துவிட்டு, கேட்டுவிட்டு போகட்டும் என்று ரொம்பவும் விட்டுக் கொடுத்தே சொல்கிறேன்! இதிலே ஆபத்து என்ன என்றால், கொஞ்சம் அதில் பிரவேசித்தாலே அது போதைப் பொருள் மாதிரி மேலே மேலே இழுத்துக் கொண்டு போவதுதான்.

போதைப் பொருள் என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டேன். இப்படி காபி, ஸிகரெட்டில் ஆரம்பித்துப் பல இருக்கின்றன. இவை மாணவர்களுக்கு ஒரு நாளும் கூடவே கூடாது. பொது ஸேவை, ஸினிமா ஆகியவற்றில் நான் கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் சொன்னது மாதிரி இங்கே 'ரிலாக்ஸ்' பண்ணுவதற்குக் கொஞ்சங்கூட இடமில்லை. நல்லதற்கே இல்லாத காபி, ஸிகரெட், இன்னும் நான் வாய்விட்டுச் சொல்ல ப்ரியப்படாத போதை வஸ்துக்கள் ஆகியவற்றின் பக்கமே மாணவர்கள் போகப்படாது.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

வஷட்காரேன- அனைத்தையும் தன்னுடைய வசத்தில் வைத்து, பூத பவ்ய பவத் பிரபு: என்ற நிலையிலும் பிரகாசிக்கிறான்.

பூதம்- போய காலங்கள்; வரும் காலம். ஆழ்வார் சொல்கிறபோது, 'கடந்த காலங்கள், வர்த்தமானம், வருங்காலம்' என்கிறார்.

பூதம் பவ்யம் பவிஷ்யது.

'பகவான் கடந்த காலத்தில் இருந்தானா?' என்றால், பூரணமாக இருந்திருக்கிறான். இப்போதும் இருந்து கொண்டிருக்கிறான். மேல் வரும் காலத்திலும் அவன் இருப்பான்.

காலத்தினால் அவனை அளக்க முடியாது என்பதனால்தான் பூத பவ்ய பவத் பிரபு:

தேசத்தினால் அவனை அளக்க முடியாது, காலத்தினால் அவனை அளக்க முடியாது, வஸ்துவினால் அவனை அளக்க முடியாது...

இந்த தேசத்தில்-பிரதேசத்தில் அவன் இருக்கிறான், அந்த தேசத்தில் அவன் இல்லை என்று பகவத் விஷயத்தில் சொல்ல முடியாது. எல்லா இடங்களிலும் அவன் இருக்கிறான்.

இதை தர்க்க சாஸ்திர ரீதியாக ஆராய வேண்டும். இந்த தர்க்க சாஸ்திரம் இருக்கிறதே... மிக உயர்ந்த சாஸ்திரம் அது. இருப்பதை இல்லையென்றும் இல்லாததை இருக்கிறது என்றும் பண்ணிவிடக் கூடியது.

ஆசார்யர்கள் சொல்வார்கள்- இல்லை என்பதே நான்கு விதமானது என்று!- 'அபாவம் என்பது நான்கு விதம்' என்பார்கள்.

பானையையும் வஸ்திரத்தையும் வைத்துக் கொண்டு தர்க்க சாஸ்திரத்தின் மூலமாக இதை பிரமிக்கும்படி விளக்குவார்கள்.

(வளரும்)



அக்ஸ்

காலங் காலமாய் நாம் கண்டுவந்த ஹீரோ, வில்லன் கண்ணாமூச்சி விளையாட்டுதான் கதை என்றாலும், இதில் அமானுஷ்யம், உளவியல் என்று 'ஹாலிவுட் டச்' கொடுத்திருக்கிறார்கள். அதை ஹாலிவுட் ரேஞ்சுக்குப் படமாகவும் எடுத்திருக்கிறார்கள்.

இந்திய பாதுகாப்பு அமைச்சருக்கு, பாதுகாப்பு அதிகாரியாக பணியாற்றும் மனு வர்மா பாத்திரத்தில் அமிதாப்பச்சன். மனிதர் இத்தனை வயதிலும் இளமை ரத்தம் பாய்ச்சிக் கொண்ட மாதிரி சுறுசுறுப்பு. 'ஷோலே' அமிதாப்பைப் பார்த்த திருப்தி. இடைவேளைக்குப் பிறகு வில்லனின் ஆவி, பச்சனின் உடம்பை அவர் அனுமதியில்லாமலேயே அடிக்கடி வாடகை எடுத்துக் கொள்ளும்போது அமிதாப் இன்னும் ஒருபடி உயர்ந்து, நடிப்பில் டாக்டரேட் வாங்கிவிடுகிறார்.

பாவம் நந்திதாதாஸ்! அமிதாப்பின் பாச மனைவியாக வரும் அவரை இப்படியொரு கமர்ஷியல் படத்தில் நடிக்க வைத்து, (எப்படி ஏமாந்தார் என்று தெரியவில்லை) வீணடித்து விட்டார்கள்.

'தாமன்' படத்தில் கற்பழிக்கப்பட்டப் பெண்ணாக கண் கலங்க வைத்த ரவீனாவா இப்படி நடித்திருக்கிறார் என்று கிள்ளிப் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ராகவனின் மீதான அவரது பேஷனேட் காதல், மேற்கத்திய கலாசாரத்தின் இந்தியத் தாக்குதலைக் கண்முன் நிறுத்துகிறது.

படத்தின் ஹீரோ அமிதாப்பச்சனா இல்லை வில்லன் ராகவனாகவே (கிட்டதட்ட பைத்தியம் பிடித்த மனநிலையுடன்) வாழ்ந்திருக்கும் மனோஜ் பாஜ்பாயா? என்ற சந்தேகம் வந்துவிடுகிற அளவுக்கு இரண்டு பாத்திரங்களையும் சூப்பராய் பேலன்ஸ் செய்திருக்கும் இயக்குனர் ராக்கேஷின் திரைக்கதையால் படம் ஜெட் வேகத்தில் பயணிக்கிறது.

ஹாலிவுட் நேர்த்திக்குச் சவால்விடும் ஆர்ட் டைரக்ஷன், ஒளிப்பதிவு, இசை மூன்றையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். இயக்குனரின் அபார திறமை வியக்க வைக்கிறது... இந்தத் திறமையை 'பாண்டிட் குவீன்' மாதிரி ஒரு சர்வதேசப் படம் எடுக்க செலவிட்டிருந்தால் பக்கம் பக்கமாய்ப் பாராட்டியிருக்கலாம்.

— விஷுவல்தாசன்

- அபவ் ஆவெரேஜ்



கல்கி
அடுத்த இதழ்
வைரவிழா சிறப்பிதழாக மலர்கிறது
புதுமை! இளமை! இனிமை!
பாஸ்கர் சக்தி எழுதும்
– புதிய தொடர்கதை ஆரம்பம்!
சிக்கல்-65
பக்கா வெஜிடேரியன் தொடர்!)
வாரம் ஒரு பட்டுப் புடைவை பரிசு! வாங்கப் போவது நீங்களாகவும் இருக்கலாமே!
அடுத்த இதழுடன்
'ஆச்சி கைமணம்'
(செட்டிநாடு சமையல் குறிப்புகள்)
– இணைப்புப் புத்தகம்
ரசனைக்குரிய புதிய பகுதிகள்
வாரந்தோறும் பயனுள்ள இலவச இணைப்பு!

"புழுத்த அரிசியைப் புதைக்காதே!"

திருச்சி அருகே உள்ளது அதவத்தூர் கிராமம். இங்கு சுமார் நூறு ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலையும், அருகிலேயே திறந்த வெளி அரிசி குடோனும் உள்ளன. இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் கால்நடை மருத்துவமனை.

ஒரு பொக்லைன் எந்திர வண்டியும், நான்கைந்து அரசு வாகனங்களும் அந்த மருத்துவமனை வளாகத்தின் உள்ளே மாலை ஆறு மணி வாக்கில் நுழைந்துள்ளன. இருட்டுகின்ற நேரத்தில் மருத்துவமனைக் கட்டடத்தின் பின்புறம் இருந்த இடவில் பொக்லைன் எந்திரம் மூலமாகப் பள்ளம் ஒன்று தோண்டியுள்ளார்கள். சப்தம் கேட்டு எட்டிப் பார்க்க முனைந்த ஊர் மக்களை 'இங்கு என்ன வேடிக்கை?' என விரட்டியுள்ளனர்.

முதலில் புதிதாக ஏதேனும் கட்டடம் கட்டுகிறார்கள் என நினைத்துக் கொண்ட கிராமத்து மக்கள் பள்ளம் மிகப் பெரிய அளவுக்குத் தோண்டப் பட்டுக் கொண்டே போகவும், சந்தேகப்பட்டு 'இத்தனைப் பெரிய பள்ளம் எதற்கு?' என அங்கு வந்திருந்தவர்களைக் கேள்விகளால் நச்சரித்துள்ளனர். அதிகாரிகள் தரப்பிலிருந்து மெல்லக் கசிந்து வந்த பதில்தான்: "புழுத்த அரிசியை இங்கே கொண்டு வந்து புதைக்கப் போகிறோம்!" என்பது.



• திறந்தவெளி அரிசி குடோன்



• பொக்லைன் எந்திரம்

"அதெல்லாம் இங்கே கொண்டு வந்து புதைக்கக்கூடாது. புதைக்கவும் விட மாட்டோம். அந்தப் புழுத்த அரிசியால் நாங்கள் பட்ட அவஸ்தையே போதும்!" என ஒட்டு மொத்தமாகச் சொல்லிவிட்டார்கள். அத்துடன் மேற்கொண்டு பள்ளம் தோண்டுவதையும் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அந்த பொக்லைன் எந்திரத்தையும் சிறை பிடித்து வைத்துள்ளனர் அதவத்தூர் கிராமப் பொதுமக்கள்.


சின்ன ஃப்ளாஷ்பேக்.

இருபது நாட்களுக்கு முன், திருச்சி மாவட்டத்தில் சோதனை நடத்திய தமிழக உணவுத்துறை அமைச்சர், அதவத்தூர் குடோனில் நாற்பத்தியேழு டன் புழுத்துப் போன அரிசி இருப்பதைக் கண்டறிந்துள்ளார். அந்த அரிசி 1991-96' அதிமுக ஆட்சிக் காலத்தில் மத்திய தொகுப்பிலிருந்து தருவிக்கப்பட்ட அரிசி என்கிற தகவல்களைத் தெரிந்து கொண்ட அமைச்சர் மேலும் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

ஜெயலலிதா ஆட்சியின்போது 'ஜவஹர் யோஜனா திட்டத்து'க்காக மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட அரிசி. ஜவஹர் யோஜனா ஸ்கீம் என்பது அரசு நலத்திட்ட



• அதவத்தூர் கிராம மக்கள்



• தோண்டப்பட்ட பள்ளம்

வேலைகளுக்கு, கிராம மக்கள் பயன்படுத்தப்படும்பொழுது அவர்களுக்குக் கூலியாகப் பணம் தராமல் அரிசியாகவே தருவது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக 'இருப்பு' வைக்கப்பட்டு, கிராம மக்களுக்கு முறையாக வழங்கப்படாமல் போகவே, நாற்பத்தியேழுடன் அரிசியும் புழுத்துப் போய்விட்டது.

இது அதிமுக ஆட்சிக் காலத்துப் புழுத்துப் போன அரிசி என்பதை உணர்ந்துகொண்ட அமைச்சர், 'இதனைப் புதைத்து விடுங்கள்!' என அதிகாரிகளிடம் வாய்மொழி உத்தரவு போட்டு விட்டுச் சென்றிருக்கிறார். இரவோடு இரவாக குழி தோண்டிப் புதைத்து விடலாம் என புறப்பட்டுச் சென்ற அதிகாரிகளுக்குத்தான் அதவத்தூர் கிராமத்தில் இத்தனை எதிர்ப்பு.

யாருக்கும் பயன்படாத புழுத்துப் போன அரிசியை மண்ணுக்குள் புதைக்க ஏன் இத்தனை எதிர்ப்பு? அதவத்தூர் கிராமம் சென்றிருந்தோம். கிராம மக்கள் கூறிய தகவல்கள் அதிர்ச்சி தந்தன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் திருச்சி நகரமே வெள்ளக்காடாய் ஆனபோது அரியாறு உடைப்பெடுத்து அதவத்தூரிலும் பெரும் வெள்ளம். அதவத்தூர் ரேஷன் கடையில் இருந்த பத்து மூட்டை அரிசியும், சர்க்கரையும் கெட்டுப் போனது. அதைக் கிராமத்தின் ஒரு பகுதியில் குழி தோண்டிப் புதைத்துவிட்டனர். ஆனால் அடுத்த சில வாரம் கழித்து பெய்த மழையினால் புதைக்கப்பட்டிருந்த, கெட்டுப் போன அரிசி மேலே வந்துவிட்டது.

மேய்ச்சலுக்குச் சென்ற ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடைகள் அந்த அரிசியைத் தின்றுவிட்டு நோய் கொண்டு நாளடைவில் தொடர் மரணங்களைச் சந்தித்திருக்கின்றன. இருபதுக்கும் மேற்பட்ட பசு, எருமை மாடுகள், நூற்றுக்கும் மேற்பட்ட ஆடுகள், சுமார் ஐம்பது அறுபது கோழிகள் என உயிர்ப்பலி. கெட்டுப் போன அரிசியைச் சாப்பிட நேர்ந்த நாய்களில் பல வெறி நாய்களாக மாறிப் போனதாகவும் குறிப்பிட்ட ஒரு நாய், ஒரே நாளில் மட்டும் இருபத்தியெட்டு பேரைக் கடித்துக் குதறி விட்டதாகவும் சொல்கிறார் ஊர்ப் பெரியவர் ஒருவர்!

இந்த 'முன் அனுபவங்கள்' அவர்களுக்குத் தற்பொழுது பீதியைத் தந்துள்ளன. அதுவும் பெருமளவில் புதைக்கப்பட காத்திருக்கும் நாற்பத்தியேழு டன் புழுத்துப் போன அரிசியால் தமது கால்நடைகளுக்குப் பெரும் ஆபத்து நேர்ந்து விடுமோ என்று அஞ்சுகிறார்கள்.

இது சம்பந்தமாக சார்புள்ள துறை அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள பலமுறை முயற்சி செய்தோம். இறுதிவரை தொலைபேசியில்கூட தொடர்பு கொள்ள இயலவில்லை.

கட்டுரை, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

வினோத் ராக்.

அதிபரின் பாதிப் பிரார்த்தனை!



பண்டைய ரோமானியரிடையே ஜுவேனல் என்ற ஒரு தத்துவஞானி இருந்தார். 'Your prayer must be for a sound mind in a sound body' என்று தன் சீடர்களுக்கு அவர் சொல்வது வழக்கம். பாகிஸ்தான் அதிபர் முஷாரஃப் பாதிப் பிரார்த்தனைதான் செய்தார் போலிருக்கிறது தேர்ந்த உடம்பு இருக்கிறது. தெளிந்த மனம் இல்லை.

இருந்தாலும் முதல் பார்வையில் அவரைக் கண்டு ஏமாந்தவர்கள் சிலர் உண்டு. மகாத்மா காந்தியின் சமாதியில் மலர் அஞ்சலி செலுத்தி, அவருடைய போதனைகள் எக்காலத்துக்கும் பொருந்தும் என்று சொன்னதைக் கேட்டுக் கிறங்கிப் போனார்கள் இவர்கள். ஸ்டார் நியூஸ் விவாதத்தில் பங்கேற்றவர்கள் முஷாரஃபைப் புகழ்ந்து தள்ளினார்கள் - அது ஏதோ மகாத்மாவுக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியம் என்பது போல.

ஒரு பெண் பத்திரிகையாளர் சொன்னதுதான் பிரமாதமான ஜோக். "இன்று முஷாரஃப் டெல்லியில் தேர்தலில் நின்றால் அமோகமாய் வெற்றி பெறுவார். அவ்வளவு பாப்புலர்!" என்றார் அவர்.

ஆக்ரா பேச்சு வார்த்தையை முஷாரஃப் புஸ்ஸென்று பண்ணிய பிறகு அம்மையாரின் தலையையே காணோம்.

"என் பெண்ணுக்குக் கல்யாணம். இந்தாங்க இன்விடேஷன். கட்டாயம் வரணும்."

"என்னது, கல்யாணத்துக்கு இரண்டே நாள் இருக்கறப்ப இன்விடேஷன் தர்றீங்க?"

"மாப்பிள்ளைக்கு அமெரிக்காவிலே வேலை. ஒரே வாரம் தான் லீவு இருக்காம். கல்யாணத்தை உடனே முடிக்கணும்னு சொன்னாங்க."

"பெண்ணைக் கையோடு அமெரிக்காவுக்கு அழைச்சிட்டுப் போறாரா?"


"இல்லே. நாலஞ்சு மாசம் ஆகுமாம்."

- இப்படியொரு அவசரக் கல்யாணம் அவசியம்தானா என்று வினவினார் வழக்கறிஞர் எஸ். சுமதி. ('மங்கையர் சாய்ஸ்' - ஸன்) 'Measure twice, at once' என்பது இவருடைய அறிவுரையின் சாரம்.

அமெரிக்க மாப்பிள்ளை என்றவுடன் பட்டம், பதவி, பாஸ்போர்ட் முதலியவற்றைப் பார்த்து மயங்கி, ஏமாந்து நிற்கும் பலரின் கதை தனக்குத் தெரியும் என்றார் சுமதி. இந்தியப் பிள்ளைகள் எல்லாரும் யோக்கியர்கள் என்றோ, அமெரிக்கப் பிள்ளைகள் அத்தனை பேரும் அயோக்கியர்கள் என்றோ தான் சொல்லவில்லை என்பதை வலியுறுத்தியவர், கல்யாணம் ஆன பின்னர் மனைவியை இங்கே விட்டு விட்டுப் போகிறவர்களிடம்தான் one should be doubly careful என்று எச்சரித்தார். "அதைப் படி, இதைத் தெரிந்து கொள், அதற்குப் பழகு' என்றெல்லாம் மனைவிக்குச் சொன்னபடி ஒரு வருடம் ஓட்டிவிட்டுத் திடீரென்று காணாமல் போய் விடுகிறார்கள், சில அமெரிக்க மாப்பிள்ளைகள். போலீசில் சொல்லி, கேஸ் போடலாம் என்றால், எங்கே இருக்கிறார் என்பது தெரிந்தால்தானே சம்மன் அனுப்ப முடியும்?" என்றார்.

பல ஆண்டுகள் பார்த்துப் பார்த்து வளர்த்த பெண்ணுக்குப் பத்து நாளைக்குள் அவசரத் திருமணம் செய்ய வேண்டுமா என்ற வழக்கறிஞரின் வாதம் விவேகமானதே.

'ரமணி Vs ரமணி' ஒரு வியாழக்கிழமை



தொய்ந்தாலும் இன்னொரு வியாழக்கிழமையில் 'ஆகா' என்று பண்ணிவிடுகிறார் டைரக்டர் நாகா.

காச்சுமூச்சென்று கத்துவதை ஒரு கலையாகவே பயின்றுவிட்ட தேவதர்ஷிணி, ஜம்பத்துக்காக ஒரு கம்ப்யூட்டர் வாங்கிவிட்டு, வீட்டை இரண்டாக்கினார் கடந்த வாரம். (கல்கியில் பரிசு பெற்ற ஒரு கதையின் விரிவாக்கம்.) 'அடுத்த வீட்டில் பேசுவதையெல்லாம் இதிலே கேட்க முடியுமோ?' என்று கேட்கையில் கணவர் வெள்ளரிக்காய் ராம்ஜி விழிக்கிறார், பாவம். கம்ப்யூட்டரை இயக்குவது பற்றி மெக்கானிக் சொல்லிக் கொடுப்பது மண்டையில் ஏறாமல் அம்மா தவிக்கும்போது, மகள் ரஞ்சிதா, 'நீ நகர்! நான் சொல்கிறேன். கம்ப்யூட்டர் பாடத்துக்காக ஸ்கூலில் மாசம் நூறு ரூபாய் கட்டுகிறாயே!' என்று கூறி கணினியை ஊதித் தள்ள, குடும்பத்தில் முதல் நம்பர் கலாட்டா.



If i didn't understand you so well, I wouidn't disagree with you so much என்பது ஒரு ரமணி மறு ரமணிக்குச் சொல்ல வேண்டிய குழப்படி வாக்கியம்.

1. பாம்புப் புற்றின் துவாரத்துக்குள் ஒரு நீண்ட ஈர்க்குச்சியை விட்டுப் பாருங்கள். அதன் நுனி படபடவென்று துடித்தால் புற்றுக்குள் பாம்பு இருக்கிறது என்று அர்த்தம்.

2. மலைப்பாம்புக்கு விஷம் கிடையாது. ஆனால் அதன் வாயில் உள்ள கொடுக்கு ஆளை இறுக்கி, எலும்பை நொறுக்கி விடும்.

3. பாம்பு கடித்தவுடன் எவ்வளவு வேப்பிலைக் கொழுந்து சாப்பிட முடியுமோ அவ்வளவு சாப்பிட வேண்டும். கூடவே கடு தண்ணீர் குடிக்க வேண்டும்.

பாம்பு பிடிப்பதில் பி.எச்டி செய்தவர் மாதிரி நையாண்டி தர்பாரில் முகமது மீரான் சொன்ன தகவல்களில் சில இவை. நல்ல அத்லெடிக் உடற்கட்டுடன் இருக்கும் இந்த இளைஞர், ஜிப் போட்ட நீண்ட பைகளைத் தர்பாருக்குக் கொண்டு வந்திருந்தார். அதில் மூன்றடி நாகப்பாம்பு முதல் பத்தடி மலைப் பாம்பு வரை ஒரு பட்டாளமே இருந்தது.

ஆச்சரியம் அதுவல்ல.


ஒவ்வொரு பாம்பாக வெளியே எடுத்து, மூக்குக்கு நேரே நீட்டியபோது, அரை இஞ்ச் கூடப் பின்வாங்காமல், பதறாமல், தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தாரே ஷூகி சேது, அதான் ஆச்சரியம்.

Fear always springs from ignorance.

ரிமோட்

கொஞ்ச நாளாவே தமிழ்நாட்ல ஃப்ரீடம் அஃப் தி பிரெஸ் என்கிறதைப் பற்றி ரொம்ப பேசிக்கிட்டிருக்கோம். பத்திரிகை சுதந்தரம் எத்தனை முக்கியம்ன்றதுக்கு ஒரு ராமாயண கதை உதாரணமா காட்டடப்பட்டிருக்கு :

ராமாயணத்தில் மாயாயுத்தம் நடந்து எல்லோரும் மாண்டு போகிறார்கள். விபீஷணன் கையில் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு வருகிறான். ஜாம்பவான் தெரிகிறார். ஜாம்பவான் கேட்கிறார். 'ஹனுமார் பிழைத்துக் கொண்டு விட்டாரா...?' என்று.



• சுப்பு ஆறுமுகம்



• ரமணர்

விபீஷணன் தலையாட்டுகிறான். அப்படியானால் எல்லோருமே பிழைத்துவிடுவார்கள் என்கிறார் ஜாம்பவான். சஞ்சீவி மலையை ஹனுமார் எடுத்து வந்ததால் ராம - லக்ஷ்மணர்கள் உள்பட எல்லோரும் பிழைத்தார்கள் என்பது கதை. ஹனுமார் பிழைத்துக் கொண்டால் எல்லோரும் பிழைத்துக் கொள்வார்கள் என்பதைப்போல் பத்திரிகை சுதந்திரம் இருந்தால் ஒரு நாட்டில் எல்லாம் சரியாக இருக்கும். பத்திரிகை ஹனுமார் மாதிரி...

இதைச் சொன்னவர் யார்னு நினைக்கறீங்க...? சாக்ஷாத் பத்திரிகையுலக ஜாம்பவானாயிருந்த ஏ.என்.சிவராமன்!

அம்பலம் இணைய இதழ்த் தொகுப்புல வெளியாகியிருக்கிற ஏ.என். எஸ்ஸோட இன்டர்வியூல வருது இந்தக் கதை. கலைஞன் பதிப்பகம் வெளியிட்டு (19, கண்ணதாசன் சாலை, சென்னை - 17) நூறு ரூபாய்ல விற்பனைக்கு வந்திருக்கற இந்தத் தொகுப்பு ரொம்ப நல்ல ரீடிங் மெடீரியல்.

பாப் ஷாலினி பேட்டியானாலும் சரி, மணப்பாறை முறுக்கு பத்தின கட்டுரையானாலும் சரி, இன்ஃபர்மேஷன் அன்ட் என்டர்டெய்ன்மென்ட் சரியான விகிதாசாரத்துல கலந்து வரதுங்கறது ரொம்ப முக்கியமான, முன்னுதாரணமான விஷயம்.

இன்னிக்குப் பத்திரிகைகள் எடுத்துக்கிட்டிருக்கிற சுதந்தரம் அபாயகரமா நான்ஸென்ஸ் என்டர்டெய்ன்மென்டை நோக்கி திசை திரும்பியிருக்கற விபரீதத்துக்கு ஒரு முடிவு ஏற்படுமான்னு கவலைப் படறவங்க அம்பலம் பார்த்து இந்தக் கவலையைப் போக்கிக்கலாம். நல்ல மாகஸின் எப்படி இருக்கணும்ன்றதுக்கு மட்டுமில்லாம இனி எதிர்காலத்துல எப்படி இருக்கும்ன்றதுக்கும் அம்பலம் எக்ஸாம்பிள்னு தோணுது.

அது சரி, அம்பலம் வெப் மாகஸீனாச்சே ப்ரின்ட் மீடியா வேறயேன்னு சொல்லுவீங்க. 'மின்னிரண்டு காலம்'னு சுஜாதா அந்தத் தொகுப்புக்கு எழுதியிருக்கிற முன்னுரையைப் படியுங்க: இணையம், தமிழ் சம்பிரதாய இதழ்களை இடம் பெயர்க்க வந்ததல்ல. தனக்கென மற்றொரு கலாசார அடையாளத்தைத் தேடிக் கொண்டிருக்கும் புது பையன் அல்லது பெண் இது.

புதுப் பையன் ஒரு டெக்னோ ஃப்ரெண்ட்லி தலைமுறையோட டேஸ்டுக்கு ஏத்த மாதிரி கொஞ்சம் சீரியஸ், தகவல் சார்ந்த, யோசிக்க வைக்கற கலவையா உருவாகியிருக்கிறது ஆச்சர்யமில்லே. இன்னும் ஒரு ஜெனரேஷன் ஆகறதுக்குள்ளே ப்ரின்ட் மீடியாவும் இந்த மாடலுக்கு மாறிடும்னு நான் நினைக்கிறேன்.

அந்த சமயத்துலயும் தலை நரைச்சுப் போய் நான் காலம் எழுதிட்டிருக்கணும்னு அந்த ஹனுமானை வேண்டிக்கோங்களேன்.

ஜாம்பவான்கள் எல்லா துறைகளிலுமே

சுமி சூப்பர் மார்க்கெட்



அருகிட்டுத்தான் வர்றாங்க - எனக்குத் தெரிஞ்சு அப்படியொரு ஃபீல்ட் வில்லுப் பாட்டு. சுப்பு ஆறுமுகத்தை விட்டா இன்னிக்கு அதுல சொல்லிக்கற மாதிரி யார் இருக்காங்க. சமீபத்துல ஹ்யூமர் கிளப்புக்காக சு.ஆ. நடத்தின 'காலடி முதல் காஞ்சி வரை'ன்ற வில்லிசை நிகழ்ச்சி கேட்டேன். ரொம்ப இம்ப்ரஸிவ்வா இருந்தது.

பக்தியும் ஆதி சங்கரர் - பரமாச்சார் யாரோட கிரேட்னஸு"ம் நிறையவே வெளிப் படுதுன்றது ஒரு பக்கம் இருக்கட்டும். திருக்குறள், அபிராமி அந்தாதி, அன்னமாச் சார்யார் கீர்த்தனை, ராஜாஜி, பாரதி, ராதா கிருஷ்ணன்னு பாரலல்லா ரெஃபரன்ஸ் களைத் தொட்டுக்கிட்டேபோய் கன்டினி யுட்டி கெடாம கதம்ப மாலை தொடுக்கறது ஒரு பெரிய ஆர்ட். அதுல அழகா ஹ்யூமர் ஜிகினாவையும் சுத்தித் தரப்போ ரொம்ப ரொம்ப ஃப்ரெஷ்ஷா ஒரு ஆர்ட் ஃபார்ம் கிடைக்குது.

மேடையில சக கலைஞர்களோட பேசிக் கிட்டே வீட்டுல பாட்டி கதை சொல்ற பாணி, நல்ல ஃபீலிங்கோட மியூசிக் நடுநடுவே சொந்த சாஹித்யம்னு பெரிய கூட்டங்களைக் கட்டிப் போடக் கூடிய சக்தி உள்ள இந்த ஆர்ட் ஃபார்ம் சினிமா ரசிகளையி லையும் டீ.வி. கலாட்டாலையும் காணாம போய்க்கிட்டிருக்கிறது துரதிர்ஷ்டம்தான்.



• ஏ.என். சிவராமன்

எனிவே, இரண்டு மிகப் பெரிய ஆசார்யர்களை இப்படி ஒரு நிகழ்ச்சி மூலமா இணைக்கலாம்ன்றது யாருக்கு முதல்ல தோன்றியதோ அவங்க வாழிய வாழிய வாழிய வாழியவே!

'குருன்றவர் யார்?'ன்ற கேள்விக்கு 'வழியைக் காண்பிப்பவர்'னு உபநிஷத்ல பதில் உண்டு. ரமண மஹரிஷிகிட்டே ஒருத் தர் போய்க் கேட்டாராம் : "என் குருவை எப்படி நான் அடையாளம் தெரிஞ்சுக்கறது?"

ரமணர் பதில் சொன்னாராம் : "யார் முன்னிலையில் உன்னதமான அமைதியை உணர்கிறாயோ, யாரைக் கண்டதுமே மரியா தையும் வினயமும் உள்ளுள் பொங்க எழுகிறதோ அவரை நீ குரு என்று அறிவா யாக..."

இந்த ஃபீலிங்கைக் கிட்டத்தட்ட காப்சர் பண்ற ஒரு கவிதை :

எதுவும் பேச வேண்டாம்..
அருகிலிருந்தால் போதும்.
அதிர்வுகள், அலை வரிசை
அர்த்தமுள்ள மௌனம்
அனைத்தும் கடந்து.
ஆழ்மன விம்மல்
அடங்கி



• சுஜாதா

சகலமும் சமன்பட்டு
இறுதியில் எழுந்து
கரம் குவித்து விடைபெற
விரல்களின் நுனிவரை
உயிரும் ஓடிவரும்
பிரபஞ்சத்தின் ஆயுளில்
பத்து நிமிடங்கள்
அமரத்துவம் பெற்றிருக்கும்
காலம், அவசரச் சிறகுகள் களைந்து,
ஆசி மழையைப் பொழிய
வையகம் மேன்மையுறும்.

- கவிதை யாரோடதுன்றீங்களா...? தெரியலையே..! தெரிஞ்சா எழுதிப் போடுங் களேன், சுமி (ஸ்பிரிசுவல்) சூப்பர் மார்க்கெட்டுக்கு!

பி.கு: இந்த வாரம் சூப்பர்மார்க்கெட்ல நல்ல தமிழ் இல்லைன்னு யாரும் புகார் படிக்க முடியாது.

— சுமி



• சுரங்கத்தில் ஏரி





சாதனைச் சுரங்கம்!

"கடையேழு வள்ளல்கள் வரிசையில் குடிநீர் தரும் நெய்வேலியும் சேர்ந்துவிட்டது" ஸ்டேட்மெண்ட் தருகிறார்கள் சென்னைவாசிகள்.

"முப்பத்தைந்து ஆண்டுகால நிறுவன வரலாற்றில் முதல்முறையாக ரூபாய் 726 கோடி நிகரலாபம், ஒரு மாபெரும் சாதனை" - குதூகலத்தோடு குதிக்கிறார்கள் என்.எல்.சி. ஊழியர்கள்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட அடுத்த வினாடி நெய்வேலி அனல்மின் நிலையத்தில் வேலை நிறுத்தம். எங்கே தமிழகமே இருண்டுவிடப் போகிறதென்று எல்லோரும் அஞ்சிக் கொண்டிருக்க, சுமுகப் பேச்சு வார்த்தை மூலம் சுபமாக முடிந்தது பிரச்னை.

மாபெரும் புத்தகக் கண்காட்சியை நான்காவது ஆண்டாக நடத்தும் நெய்வேலி சென்னைக்கே சவால்... - இவை, நெய்வேலி அடிக்கடி செய்தியில் அடிபடுவதற்குச் சில சமீபகால அத்தாட்சிகள். சாதனைச் சுவடுகளும், சந்தோஷ ரேகைகளும் நிரம்பிக் கிடக்கும் இந்தச் செய்திகளின் பின்னணியில் ஒரு முக்கிய நபர் மறைந்திருக்கிறார். அவர் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தலைவர், நிர்வாக இயக்குனர், அதிபர் ஏ.கே.சகாய். நெய்வேலி நகரிய வளாகத்தில் அமைந்துள்ள, என்.எல்.சி. நிர்வாக அலுவலகத்தில் அவரைச் சந்தித்தோம்.

"சென்னைக்குக் குடிநீர் வழங்குவதை எங்களுக்குக் கிடைத்த பெரிய வாய்ப்பாகக் கருதுகிறோம். ரயில் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்லக் கூடிய வசதி



இங்கு இல்லையே என்கிற வருத்தம் எங்களுக்கு'' என்று சென்னையின் தாகத்தை அனுபவித்தவர் போல பேசத் தொடங்குகிறார்.

அரசு கேட்டுக் கொண்ட இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் உங்களால் எப்படி குடிநீர் வழங்க முடிந்தது?

'நெய்வேலியிலிருந்து லாரிகள் மூலம் தண்ணீர் பெறப்படும்' என்ற செய்தி அடிபட்டதுமே நாங்கள் தயாராகிவிட்டோம். என்.எல்.சி. வளாகத்திற்குள் இருக்கும் நான்கு முக்கிய பம்ப் ஹவுஸ்களை நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள் தயார் செய்தோம். அரசிடமிருந்து ஒரே ஒரு தொலைபேசி அழைப்புதான் வந்தது. நீங்கள் இந்த நிமிஷமே லாரிகளை அனுப்பலாம்'' என்றோம்.



• நெய்வேலித் தண்ணீர் பிடிக்கும் லாரிகள்


ஒன்பதாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு லாரியில் தண்ணீர் நிரப்ப மூன்று நிமிடங்கள் போதும். இதுவரை சுமார் பத்தாயிரம் லாரி தண்ணீர் சென்னையைச் சென்றடைந்திருக்கிறது.

இங்கிருந்து எடுத்துச் செல்லப்படும் குடிநீரைச் சிலர், சுரங்கத்திலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது உண்மையல்ல. சுரங்கப் பணிகளின்போது எடுக்கப்படும் நிலத்தடி நீரை, அருகிலுள்ள இருபத்தைந்து கிராமங்களுக்குத் தொடர்ந்து வழங்கி வருகிறோம். நெய்வேலி நகருக்கான குடிநீரும் சென்னைக்கான குடிநீரும் இங்கே உள்ள நான்கு ராட்சஸ போர்வெல்களிலிருந்து எடுத்து அனுப்பப்படுகின்றன.

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு என்.எல்.சி. எண்பத்தாறு சதவிகிதம் கூடுதலாக நிகரலாபம் ஈட்டி சாதனை படைத்திருக்கிறது. இது எப்படிச் சாத்தியமானது?

இந்தத் தொடக்கத்திற்கு முதல் காரணம் டீம் வொர்க். தொழிலாளர்களும், ஊழியர்களும், அதிகாரிகளும்தான் கைகோத்து சாதித்துக் காட்டியிருக்கிறார்கள். அடுத்து நாங்கள் கடைபிடித்து வரும் ஐந்து மந்திரங்களைப் பற்றிச் சொல்லியே ஆக வேண்டும். முதலில் வளர்ச்சி பற்றிச் சொல்கிறேன்.

ஒரு நிறுவனம் நிலைத்திருக்க வேண்டுமெனில் அது வளர வேண்டும். அதற்கு அந்நிறுவனம் தனது வர்த்தகத்தை விரிவு படுத்த வேண்டும். இதற்காக விரிவாக்கம், நவீனமயமாக்கம், புதிய துறைகளில் காலடி வைத்தல் போன்றவை அவசியம். அதே போல் இன்று அதிகரித்துவிட்ட உற்பத்திச் செலவைக் குறைத்து, அதே சமயத்தில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. இந்த இரண்டு வளர்ச்சிக் கோட்பாடு



• அனல் மின் நிலையம்

களையும் நாங்கள் தீவிரமாகப் பின்பற்றி வருகிறோம்.

இரண்டாவதாக, திறமை. மனித ஆற்றலையும், இயந்திர ஆற்றலையும், பொதுத் துறை நிறுவனங்களில் சரியாகப் பயன்படுத்துவதில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு உண்டு. நம் ஆற்றல்களை முழுமையாக உபயோகிக்க உறுதி கொண்டோம்.

மூன்றாவதும் முக்கியமானதும் சிக்கனம். பொதுத் துறை நிறுவனங்களின் முதலீட்டில் பெரும்பகுதி அரசாங்கத்தால் வழங்கப்படுவதால், செலவு குறைப்பு பற்றியோ, சிக்கன நடவடிக்கை பற்றியோ நாம் கவலைப்படாமல் இருந்தால் அதை மன்னிக்கவே முடியாது! இதை மாற்றிக் காட்ட வேண்டும் என்ற வெறியோடு, முக்கிய செலவினங்களில் சிக்கன நடவடிக்கை மேற்கொண்டு தொடர்ந்து கண்காணித்து வந்தோம். நாங்கள் எதிர்பார்த்தது நடந்து வருகிறது.

நான்காவதாக ஒளிவு மறைவு இல்லாத நிர்வாகம். பிரதமரின் அறைகூவலுக்கு இணங்கி, சிறிதளவும் ஒளிவு மறைவு இல்லாத, ஊழலற்ற நிர்வாகம் நடத்துகிறோம். அது நிறுவனத்தின் கௌரவத்தைப் பொதுமக்களிடையே நிலை நிறுத்தும். ஊழியர்களிடமும் நல்லுறவை வலுப்படுத்தும். இந்த மந்திரத்தைக் கண்டிப்போடு கடைபிடித்து வருகிறோம்.

கடைசியாக கடமைப் பற்று. உடலில் ஓடும் இரத்தத்தைப் போன்றது. இரத்தம் இல்லாவிட்டால் எப்படி உயிர்வாழ முடியாதோ அப்படித்தான் கடமையைக் கருதுகிறோம். நம்மிடம் இருக்கும் அடிப்படை வசதிகளையும், வளங்களையும் உற்பத்திக்கு முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமானால், இது அரசு நிறுவனமல்ல நமது நிறுவனம் என்கிற ஒழுக்க உணர்வு அவசியம். அதை என்.எல்.சி. ஊழியர்களுக்குக் கற்றுத் தர வேண்டிய அவசியமே இருக்கவில்லை. ஊழியர்கள் அந்தப் பண்பில் ஊறியிருப்பதால் இந்தச் சாதனையை எட்டுவது எளிதாகியிருக்கிறது.

இருந்தும் தொழிலாளர் ஊதிய உயர்வு பிரச்சனையால் பத்து நாள் வேலை நிறுத்தம் தவிர்க்க முடியாதாகி விட்டதே?

உண்மைதான். இந்த வேலை நிறுத்தம் இல்லாமலேயே ஊதிய மாற்று ஒப்பந்தத்தை எட்டிவிடலாம் என்று நம்பினேன். ஆனாலும் காலதாமதம் இன்றி உடனடியாக முடிவுகள் மேற்கொள்ள அனைத்து தரப்பு ஒத்துழைப்பும் உதவிகரமாக இருந்தது.

ஒப்பந்தம் ஏற்பட்டதை ஊழியர்களோடு சேர்ந்து நானும் கொண்டாடுகிறேன். புதிய ஊதிய ஒப்பந்தம் மூலம் நாட்டில் மிகச் சிறந்த ஊதியம் தரும் நிறுவனங்களில் என்.எல்.சி.யும் ஒன்று என்ற அந்தஸ்த்தை எட்டிவிட்டோம். இந்த ஒப்பந்தம் பத்து 'ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும் என்பதால் அடுத்து வரும் பத்தாண்டுகளுக்கு அடிப்படை ஊதிய விகிதத்தில் மாற்றம் இருக்காது.

என்.எல்.சி. இப்போது எப்படியிருக்கிறது?



இன்று ஆண்டிற்கு 17 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யும் இரண்டு திறந்த வெளிச் சுரங்கங்கள், 2070 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் இரண்டு அனல் மின் நிலையங்கள், ஆண்டுக்கு ஒரு லட்சத்து இருபத்தொன்பதாயிரம் டன் யூரியா உற்பத்தி செய்யும் உரத் தொழிற்சாலை, இரண்டு லட்சத்து அறுபத்திரண்டாயிரம் டன் லீக்கோ உற்பத்தி செய்யும் கரிக்கட்டி ஆலை ஆகிய தொழில் மையங்களோடு, 480 சதுர கிலோ மீட்டரில் தென் இந்தியாவின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த, திறன்மிகு தொழில் வளாகமாகத் திகழ்கிறது.

இந்தியாவிலேயே முதன்முறையாக இராட்சச மண் வெட்டும் இயந்திரமான 'பக்கட் வீல் எக்ஸ்கவேட்டர்கள்', 'ஸ்பிரட்டர்கள்' மற்றும் கன்வேயர் வசதிபோன்ற

அதி நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இங்கே சுரங்கப் பணிகளை மேற்கொள்கிறோம்.

இந்திய ரஷ்ய உறவுகளின் நினைவுச் சின்னமாக விளங்கும் இந்நிறுவனத்தின், முதல் அனல் மின் நிலையம் 40 ஆண்டுகளுக்கு முன் சோவியத் ரஷ்ய வல்லுனர்களால் நிர்மாணிக்கப்பட்டது.

இந்திய அனல் மின் நிலையங்களின் சராசரி மின் உற்பத்தித் திறன் ஐம்பது சதவீதமாக இருக்கும்போது நமது நிலையங்களின் உற்பத்தித் திறன் தொடர்ந்து எழுபது சதவிகிதமாக இருந்து வருகிறது. இதனால் எல்லா பிரிவுகளின் கீழ் என்.எல்.சி. விருது பெறாத ஆண்டே இல்லை என்று சொல்லிவிடலாம்.



'பொதுத் துறை நிறுவனங்களில் நிறைவேற்றப்படும் விரிவாக்கத் திட்டங்கள், விரைந்து நிறைவேற்றப்படுவதில்லை' என்ற குற்றச்சாட்டு என்.எல்.சி.க்கும் பொருந்துமா?

விரிவாக்கத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதில் மற்ற பொதுத் துறை நிறுவனங்களுக்கு முன் மாதிரியாக திகழ்ந்து வருகிறோம். அதற்கு முக்கிய காரணம். விரிவாக்கத்திற்குச் செலவிடப்படும் பணம் அத்தனையும் நிறுவனத்தினுடையது. அரசை எதிர்பார்த்துப் பெறப்படுவது அல்ல.

இதனடிப்படையில் அதிகரித்து வரும் மின் தேவையை வழங்கும் விதமாக முதல் சுரங்கத்தின் நிலக்கரி உற்பத்தித் திறனை 10.5 மில்லியன் டன்னாக உயர்த்த, அரசின் அனுமதி பெற்று ரூபாய் 1336 கோடி செலவில் துரிதமாக விரிவாக்கப் பணிகள் நடந்து வருகின்றன. இந்தச் சுரங்க விரிவாக்கத்தின் மூலம் மின் உற்பத்தியைக் கிட்டத்தட்ட இரட்டிப்பாக்க முடியும். இரண்டாம் சுரங்கத்திலும் இப்படிப்பட்ட விரிவாக்கம் நடைபெறவுள்ளது.

அடுத்து நெய்வேலியில் அமையவிருக்கும் தனியார் மின் நிலையத்திற்குப் பழுப்பு நிலக்கரி விநியோகம் செய்ய, முதல் சுரங்கம் அருகிலேயே, சுரங்கம் 1ஏ என்ற மூன்று மில்லியன் பழுப்பு நிலக்கரி உற்பத்தித் திறன் கொண்ட சிறிய சுரங்கத்தைத் தோண்டி வருகிறோம். அதற்கான மதிப்பீடு ரூபாய் 1032 கோடி.

இந்த விரிவாக்கங்கள் தவிர ஆண்டுக்கு 12 மில்லியன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கும் வகையில் ஒரு மூன்றாவது சுரங்கமும், அதில் கிடைக்கும் நிலக்கரியைக் கொண்டு 1500 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் மூன்றாவது அனல்மின் நிலயமும் ரூபாய் பதின்மூன்றாயிரம் கோடி செலவில் திட்டமிடப்பட்டு, அரசின் அனுமதிக்குக் காத்திருக்கிறோம்.

நெய்வேலி நகரிய நிர்வாகத்தில் என்.எல்.சி.யின் பங்கு பற்றிச் சொல்லுங்கள்?

இங்கே உள்ளாட்சி அமைப்பு எதுவும் கிடையாது. நகரின் நிர்வாகம் மற்றும் மேம்பாடு முழுவதையும் நிறுவனம்தான் கவனித்து கொள்கிறது. பணியாளர்களுக்கென்று இருபதாயிரம் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டு இருபத்து நான்கு மணி நேர குடிநீர் மற்றும் மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. பிற அடிப்படை வசதிகளில் ஒன்றான போக்குவரத்து மிகக் குறைந்த கட்டணத்தில் இயக்கப்படுகிறது. தவிர ஏழு தொழிலக உணவகங்கள், 350 படுக்கை வசதிகள், நவீன சாதனங்களுடன் இயங்கும் ஒரு பொது மருத்துவமனை மற்றும் ஐந்து புற மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன.

அடுத்து மிக முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்று கல்வி. நமது நிறுவன நிர்வாகத்தின் கீழ் 18 பள்ளிகளும், ஒரு கல்லூரி மற்றும் 15 தனியார் பள்ளிகளும் நகரில் இயங்கி வருகின்றன.

ஐம்பதாயிரம் மாணவர்கள் பயிலும் இந்தக் கல்வி நிலையங்கள், மாநில அளவில் தரமான கல்வியை வழங்கி வருகின்றன. இதை நிரூபிப்பதுபோல, பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு அரசுத் தேர்வுகளில் மாநில அளவில் முதலிடம் பிடிக்கும் பத்து மாணவர்களில் மூன்று பேர் நெய்வேலியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். அதேபோல் விளை



யாட்டுத்துறை, ஐ.ஏ.எஸ் தேர்வு போன்றவற்றிலும் நெய்வேலி மாணவர்கள் தொடர்ந்து சாதனை படைத்து வருகிறார்கள்.

பொழுது போக்குக்கு என்று மன மகிழ் மன்றங்கள், பூங்காக்கள், நூலகங்கள், இரண்டு திரையரங்குகள் உள்ளன. தற்போது நான்காவது ஆண்டாக 'நெய்வேலி புத்தக கண்காட்சியை' நடத்தி வருகிறோம். நகர் முழுவதும் லட்சக்கணக்கில் மரங்களை நட்டு வருகிறோம்.

ஸ்ரீ முஷ்ணம், ஜெயங்கொண்டம் பகுதிகளில் சுரங்கம் அமைக்கப்பட்டால், அவை என்.எல்.சி.க்குப் போட்டியாக இருக்குமா?

இந்தியாவிலேயே தொண்ணூறு சதவிகித நிலக்கரி தமிழகத்தில்தான் உள்ளது. ஆனால் நெய்வேலி தவிர மற்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நிலக்கரியானது அதிக ஆழத்தில் உள்ளது. தற்போது ஸ்ரீமுஷ்ணத்தில் சுரங்கம் அமைக்க அரசு முயற்சி செய்து வருகிறது. அதில் என்.எல்.சி.யின் பங்கு கணிசமானதாக இருக்கும். என்.எல்.சி.க்கு என்று முப்பத்தைந்து ஆண்டு கால வரலாறு உள்ளது. இந்திய பொதுத் துறை நிறுவனங்களில் 'மினி ரத்னா' என்ற அந்தஸ்து பெற்ற ஒரு மாபெரும் நிறுவனம் இது.

தாராளமயம் காரணமாக பொதுத் துறை நிறுவனங்களுக்கு நிர்ப்பந்தங்கள் அதிகரித்துள்ளனவா?

தாராளமயம் மூலம் சிறந்த தரம், குறைந்தவிலை, குறித்த நேரத்தில் சேவை வழங்குதல் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்தச் சூழ்நிலையில் பல இடர்களைப் பொதுத்துறை நிறுவனங்கள் சமாளிக்க வேண்டியுள்ளது. முக்கியமாக, போட்டியற்ற சூழ்நிலையிலிருந்து மற்ற நிறுவனங்களுடன் போட்டியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மேலும், தொழில் நுட்பம், உள்ளிட்ட உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

'வலிமை வாய்ந்தவையே உயிர் வாழத் தகுதியானவை' என்ற நிலையைத் தாராளமயம் ஏற்படுத்தி இருக்கிறது. இதற்கேற்ப பொதுத்துறை நிறுவனங்கள் தயாராகிவிடுவதன் மூலம்தான் தாராளமயத்தை எதிர்கொள்ள முடியும்.

சந்திப்பு : **ஆர்.சி. ஜெயந்தன்**
படங்கள் : **ராஜன்**



''நேத்து ராத்திரி யாரோ தாழ்ப்பாளை உடைக்குற மாதிரி சத்தம் கேட்டுச்சு''


''திருடன்னு நினைச்சு பயந்திருப்பீங்களே?''

''இல்லை... போலீஸ்னு நினைச்சு மிரண்டுட்டேன்.''

— தஞ்சை ராகவ், மகேஷ்

காலையிலிருந்து மதியம் வரை மாநகராட்சி காரைப் பயன்படுத்துவார் ஸ்டாலின். மாலையில் சொந்த காரைப் பயன்படுத்தும் போது அதற்கு ஓட்டுநர் ரமேஷ்தான். (விரிவாக: ரமேஷ் நாராயண்) அவர் எப்படி மேயரிடம் நெருங்கினார் என்பது இளைஞர் அணி பிரமுகர்களுக்கு இன்றும் ஒரு பட்டிமன்றத் தலைப்பு. ஒரு காண்ட்ராக்டராக வட்டிக்குப் பணம் கொடுப்பவராக இருந்த ரமேஷுக்கு அரசியல்வாதிகள் அறிமுகமாகியிருப்பதில் வியப்பில்லை. அதிலும் காண்ட்ராக்டர்கள் என்றால் ஆளுங்கட்சிப் பிரமுகர்களுக்குக் கட்டாயம் அறிமுகமாயிருக்க வேண்டும். அந்த அடிப்படையில் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சராக இருந்த எஸ்.டி.சோமசுந்தரத்துக்கு மிகவும் நெருக்கமாக இருந்தார் ரமேஷ் என்கிறார்கள்.

அதே போல் மறைந்த ராமசாமி உடையாருடனும் ரமேஷுக்கு நெருக்கம் இருந்ததாம். சிறிது காலம் அ.இ. அதி.மு.கவிலும் இருந்திருக்கிறார். அவரது மனைவி கோவில்பட்டியைச் சேர்ந்தவர். அங்கும் நிதி கம்பெனி நடத்தியிருக்கிறார் ரமேஷ். பத்து வருடங்களுக்கு முன்னர்தான் சென்னையில் நிலையாக செட்டில் ஆனாராம்.



தமிழகத்தை உலுக்கிய தற்கொலைகள்

மேயர் ஸ்டாலினுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர்கள், மறைந்த அன்பில் பொய்யாமொழி, பரணிகுமார் மற்றும் திருவாரூர் அசோகன். இதில் அசோகன் மூலமாகத்தான் ஸ்டாலினுக்கு ரமேஷ் அறிமுகம் என்று சொல்பவர்களும் உண்டு. ரமேஷின் சொந்த ஊர், திருவாரூருக்கு அருகில் உள்ள பாலகுறிச்சி. நல்ல வசதியான, கௌரவமான வைணவ குடும்பம்.

பொய்யாமொழி மறைந்த பிறகு ஸ்டாலின்-ரமேஷ் நட்பு இன்னமும் இறுகியது. தி.மு.க. பிரமுகர்கள் மத்தியில் அவர்களின் நெருக்கம் பற்றி ஒரு முணுமுணுப்பு இருந்தாலும் ரமேஷ் பற்றி தவறான தகவல் ஏதும் இல்லை. தளபதிக்கு நெருக்கமாக இருக்கிறார் என்பது வெளிப்படையாகவே தெரிந்த காரணத்தால் அவர் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அரசு மட்டத்தில் எந்த உந்துதலும் இல்லாமல் சாதகமாகவே முடிந்து வந்தன என்கிறார்கள்.

தேர்தல் முடிவுகள் வந்து பத்து நாட்கள் ஸ்டாலினுடன் காட்சியளித்த ரமேஷ், காண்ட்ராக்டர் தெய்வசிகாமணி மே மாதம் 26ம் தேதியன்று கொடுத்த புகாருக்குப் பின்னர் தலைமறைவானார். 'மலேஷியா போய்விட்டார், சிங்கப்பூர் போய்விட்டார், இல்லை இல்லை போலீஸ் அவரைக் கைது செய்யாமல் தனி இடத்தில் வைத்து விசாரித்து வருகிறார்கள்' என்றெல்லாம் செய்திகள் வந்து கொண்டிருந்தன.

இந்த ஒரு வழக்குக்காக மட்டும் ரமேஷை போலீஸ் சலித்தெடுக்கவில்லை. ஸ்டாலின் பற்றி வேறு வழக்குகள் போடுவதற்கும் ரமேஷின் உதவியைக் கேட்டு அவரைக் காவல்துறை மிரட்டி வந்தது என்றும் கூறப்படுகிறது. குறிப்பிட்ட தேதிக்குள் கேட்கும் தகவல்களைச் சொல்லாவிட்டால் 'போதை மருந்து' வழக்கில் உள்ளே தள்ளி விடுவதாக மிரட்டப்பட்டார் ரமேஷ் என்று சொல்லப்படுகிறது.

போதை மருந்து வழக்குகளைப் பொறுத்தமட்டில் நீதிமன்றங்களில் ஜாமீன் கிடைப்பது மிகவும் கடினம். அது தவிர மற்ற வழக்குகள் போல அல்லாமல் 'தான் குற்றமற்றவர்' என்று நிரூபிக்கும் பொறுப்பு, சம்பந்தப்பட்ட நபரையே சேர்ந்தது. தண்டனை கிடைக்கும் பட்சத்தில் குறைந்தது ஏழு ஆண்டுகள் உள்ளே தள்ளி விடுவார்கள்.

இதற்கிடையில், 'ரமேஷ் வீட்டில் கண்டெடுக்கப்பட்ட கடிதங்களில் உள்ள கையெழுத்தை ஆராயப் போகிறோம்; போலீஸுக்குத் தகவல் சொல்ல தாமதமானதேன்' என்று போலீஸ் தரப்பில் சொல்லியிருக்கிறார்கள்.

தற்கொலையானாலும் கொலையானாலும் இந்த மரணங்கள் கொடூரமே. ஆனால், தற்கொலையைக் கொலையெனக் காண்பிக்க முயன்றால் அது மிகக் கொடூரம்.

— கௌசி



பேட்டியின் ஆரம்பமே அசத்தல்தான். பகவத் கீதையிலிருந்து ஒரு சுலோகத்தை ராகத் தோடுப்பாடிவிட்டு, அதற்கான பொருளையும் சொன்னார் அந்த ஐம்பத்தேழு வயது இளைஞர்.

"எங்கும் எந்த இடத்திலும் என்னை யார் பார்க்கிறார்களோ, என்னில் எல்லாவற்றையும், யார் காண்கிறார்களோ அவர்களை நான் ஒருபோதும் விடுவதில்லை. அவர்களும் என்னை விடுவதில்லை - இது இறைவனின் வாக்கு. எனக்கும் எனது தொகுதி மக்களுக்கும் கூட இதே போன்ற நெருக்கமான தொடர்புதான். என்னை, அரசியலுக்கு அப்பாலும், அவர் நியாயமான ஆளுய்யா... என்று சொல்ல வைத்திருக்கிறது. இதைத்தான் அரசியலில் எனக்குக் கிடைத்த ஆதாயமாகக் கருதுகிறேன். இந்த மாபெரும் ஆதாயத்தை, கலைஞரின் கால்களில் சமர்ப்பிக்கிறேன். காரணம், அவர் இல்லையென்றால் நான் இல்லை" உணர்ச்சி வசப்படும் எஸ்.ஏ.எம். உசேன் திருவல்லிக்கேணி எம்.எல்.ஏ.

என்னடா..இது! ஓர் இஸ்லாமியர், பகவத் கீதையிலிருந்து ஸ்லோகம் சொல்வதாவது என்று ஆச்சர்யப்படுபவர்களுக்கு மட்டும் தான் உசேன் விநோதமானவர். ஆனால் திருவல்லிக்கேணிவாசிகளுக்கு அல்ல. காரணம், வேட்புமனு தாக்கல் செய்யும் முன்பாக, அதை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் கருவறையில் வைத்துப் பூஜை செய்து எடுத்துச் செல்வதோடு, கோவில் தேரோட்டத்தில் வடம் பிடித்து இழுக்கிற முதல் மனிதரும் இவர்தான்.

"1952-ல் திருவல்லிக்கேணி ஆறுமுக ஆச்சாரி தெருவில் தி.மு.க. பொதுக்கூட்டம் நடந்தது. சேலம் மத்திய சிறையில் கம்யூனிஸ்ட்டுகள், துன்புறுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நடந்த கூட்டம் அது.

அங்கே கம்பீரக் குரலில், மடைதிறந்த சொல்லாட்சியோடு, கம்யூனிஸ்டுகளை விடவும் கடுமையாகப் பேசினார் கலைஞர். அன்று அவரது பேச்சைக் கேட்ட அந்தக் கணமே அவரை என் தலைவராக உள்ளத்தில் வரித்துக் கொண்டேன். இன்று வரை அவரது தீவிர தொண்டனாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்று சொல்லும் உசேன், அவரது அண்ணன் அன்சாரியைப் பின்பற்றி, மேடைதோறும் இயக்கப் பாடல்களைப் பாடி, படிப்படியாகக் கட்சியில் வளர்ந்திருக்கிறார்.

ஆயிரம் விளக்கு கிளைக் கழகத்திலும் உசேன் பொறுப்பு வகித்ததால், 'ஆயிரம் விளக்கு உசேன்' என்ற பெயரும் இவருக்கு உண்டு என்றாலும், இவர் வசிப்பதென்னவோ, ராயப்பேட்டை லாயிட்ஸ் காலனியில். இதே பகுதியில் ஓர் ஏழை நெசவாளியாக வாழ்க்கையைத் தொடங்கிய உசேன், சில ஆண்டுகளுக்கு முன்பு வரை வசித்தது ஓலைக் குடிசையில். இப்போது வசித்துவரும் வீட்டு வசதிவாரிய குடியிருப்பும் ஒரு சின்ன குருவிக் கூடு போலத்தான் இருக்கிறது.

பெரியார், அண்ணா, சம்பத் என்று பிரபலமான அரசியல் தலைவர்களை வைத்து பொதுக்கூட்டம் போடுவதில் உசேன் கில்லாடி. அப்படி 1972 அக்டோபர் எட்டாம் தேதி எம்ஜிஆரை வைத்து உசேன் பொதுக்கூட்டம் போட, அந்த கூட்டம்தான் எம்.ஜி.ஆர். கணக்கு கேட்டு, கட்சியிலிருந்து பிரியக் காரணமாகிவிட்டது.. அதன் பிறகு உசேன் அதிக கவனிப்புக்கு உள்ளாகிவிட, அவரது உழைப்பிற்கு ஏற்ப, வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என்று பதவிகளை அளித்து, இன்று சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கி

அழகு பார்க்கிறது தி.மு.கழகம்.

"சாதாரண உசேனாக இருந்து நான் செய்த காரியங்கள் நிறைய உண்டு. ஆனால் இன்று ஒரு சட்டமன்ற உறுப்பினராக அவற்றைச் செய்ய முடியுமா என்று சந்தேகமாக இருக்கிறது. காரணம் முன்பெல்லாம் அதிகாரிகளிடம் ஒருமுறை சொன்னாலே ஓடி வந்து கேட்பார்கள். இப்போது நம்மைக் கண்டாலே பயந்து ஓடுகிறார்கள். ஒரு காரியத்தைச் செய்ய, வாதாட வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் நான் தயங்கப் போவதில்லை. பார்த்தசாரதி கோவிலுக்கு டவர் லைட்டும், ராம் நகர் ஆதிதிராவிடர் காலனிக்கு மேல் நிலைக் குடிநீர் தொட்டியும் தொகுதியின் உடனடித் தேவைகள். அரசு மெத்தனம் காட்டினால், இந்தப் பணிகளை எனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்து முடிப்பேன்" என்று நம்பிக்கையோடு சொல்கிறார்.

மத்திய சிறைச்சாலை முன்பு, மகள் கனிமொழி அருகில் அமர்ந்திருக்க, வேலூர் சிறைக்கு அழைத்துச் செல்லக் கூடாது என கண்டித்து கலைஞர் தரையில் அமர்ந்து தர்ணா செய்தபோது, அருகில் அமர்ந்திருந்த அந்த இன்னொரு மனிதர் இந்த உசேன் தான். கலைஞர் கைது செய்யப்பட்ட இரவு இரண்டுமணியிலிருந்து தர்ணா வரை நடந்ததை நேரில் கண்ட சாட்சியாகத் தேம்பி அழுதபடி விவரிக்கிறார்.

"தலைவரின் வீட்டிலிருந்து, சிபிசிஐடி அலுவலகம், வேப்பேரி காவல் நிலையம், மாறன் வீடு என்று அலைந்து இறுதியாக நீதிபதி அசோக்குமார் வீட்டில் தலைவரைக் கண்டுபிடித்தேன். தலைவரை மருத்துவ பரிசோதனைக்குப் பிறகு, சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று நீதிபதி சொன்னார். ஆனால், தலைவரை ஏற்றிய கார் சிறைச் சாலைக்குத் திரும்பியது. குடும்ப டாக்டர் கோபாலும் நானும், கெஞ்சிக் கூத்தாடி சிறைச் சாலைக்குள் நுழைந்தோம். அங்கே சிறை வாசலில்... அதை எப்படிச் சொல்ல... தலைவரின் கால்கள் வீங்கி, நிற்க முடியாமல் தள்ளாடியபடியே நின்று கொண்டிருந்தார். "அடப்பாவிகளா ஒரு நாற்காலி கூட கொடுக்காமல் நிறுத்தி வைத்திருக்கிறீர்களே" என்று கதறினேன். கல்நெஞ்சம் கொண்ட அவர்கள் தலைவரைச் சுற்றிச் சூழ்ந்து நிற்க... "ஏம்பா... என்னை முதல்ல ஜி.ஹெச்சுக்குத்தானே அழைச்சுட்டுப் போகச் சொன்னாங்க. நீங்க நேரா இங்கே கூட்டிட்டு வந்துட்டீங்களே... என் காலெல்லாம் வீங்கிடிச்சிப்பா... உடம்பெல்லாம் ஒரே வலியா இருக்குது. ஜி.ஹெச்சுக்குக் கூட்டிட்டுப் போகலைன்னாலும் பரவாயில்லை. இந்தச் சூழ்நிலையில் வேலூருக்குக் கூட்டிட்டுப் போறேன்னு சொல்றீங்களே, உங்க மனசு என்ன கருங்கல் பாறையான்னு?'' கேட்டார். 'நீதிபதியின் உத்தரவை மீறினா... நான் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன்னு சொல்லிட்டார். அப்போது நெல்சன் கிருஸ்டோபர் என்கிற காவல்துறை அதிகாரி தலைவரைப் பார்த்து முறைத்தபடி, "இதுக்கு ஒத்துக்கலைனா தூக்கிட்டுப் போற மாதிரி ஆயிடும்" என்று கத்தினார்.

(இத்தனைக்கும் கலைஞர் முதல்வராக இருந்தபோது அவருக்கான பாதுகாப்பு பணியில் இருந்தவராம் இந்த அதிகாரி.)

அப்போது தலைவர், கிருஸ்டோபரைப் பார்க்கிறார், அப்போது அவரது முகத்தில் எத்தனை உணர்ச்சி மின்னல்கள்!

"என்கிட்டேயே சொல்றியாப்பா... சும்மா தூக்கிட்டுப் போகாதப்பா... பாடையிலே வச்சு தூக்கிட்டுப் போ" என்று அவர் குரல் உடைந்திருந்தது. நான் இதயம் நொறுங்கிப் போனேன்" என்று அழத் தொடங்கிய உசேனை அமைதிப்படுத்திய பிறகுதான் சகஜ நிலைக்கு வந்தார்.

திருவல்லிக்கேணியிலிருந்து ஒரு தொலைபேசி... "துவாரகா நகர் காலனிக்கு இரண்டு நாட்களாகத் தண்ணீர் லாரி வரவில்லையாம். நான் போனால்தான் சரிவரும்" என்றபடி கிளம்புகிறார். "வாப்பா சாப்பிட்டுப் போங்க... நமாஸுக்கு வேறப் போகணுமே?" மகள் தடுக்க.... "முதல்லே தொகுதிப் பிரச்னை அப்புறம்தான் சாப்பாடு, மசூதி எல்லாம்..." உதவியாளரோடு ஸ்கூட்டரில் பறந்தார் உசேன்.

சந்திப்பு: **சக்கரத்தாழ்வார்**

படங்கள்: **ராஜன்**

"முதலில் தொகுதி அப்புறம்தான் மசூதி!"

வரவேற்கிறார்கள்!



'கல்கி' வைரவிழா சிறப்பிதழிலிருந்து, கன்னியாகுமரி முதல் காஷ்மீரம் வரை எதிரொலிக்கப் போகும், நாகநந்தியின் சிம்ம கர்ஜனையை எப்படித்தான் தாங்கப் போகிறோமோ? மனம் அலைபாயுதே!

- எஸ்.ஆர். ஹரிஹரன், சென்னை - 109

'பார்க்கப் பார்க்க சலிக்காத வஸ்துக்கள்' என்று யானை, நிலா, சமுத்திரம் ஆகியவற்றை மஹா சுவாமிகள் குறிப்பிடுவார். படிக்கப் படிக்க சலிக்காதது என 'சிவகாமியின் சபதம்' கதையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

- தி.சு. பாலசுப்ரமணியன், பாளையங்கோட்டை

'சிவகாமியின் சபதம்' தொடர் வரப் போவது குறித்து மகிழ்ச்சி. ஒரு வேண்டுகோள். 'கல்கி' இதழின் நடுப்பக்கங்களில் வருமாறு வெளியிட்டால், பைண்ட் செய்ய வசதியாக இருக்கும். அதற்கென்று தனி பக்க எண்களை இட்டால் மிகவும் நலம்.

- எஃப். முஹம்மது இஸ்மாயில், கோயம்புத்தூர்-24

குற்றாலத்தில் எத்தனை முறை குளித்தாலும், குஷியோ, கும்மாளமோ ஒரு போதும் குறைவதில்லை. அது போல, அமரர் கல்கியின் நாவல்களைத் திரும்பத் திரும்ப படித்தாலும் சலிப்பதில்லை. 'சிவகாமியின் சபதம் மீண்டும் ஆரம்பம்' என்ற அறிவிப்பு, எல்லை இல்லா மகிழ்ச்சியை உண்டாக்கியது.

- ஜி.கிருஷ்ணன், விசலூர்-1.

'கல்கி' இதழை 1942 ஆகஸ்ட் மாதம் முதல் படித்து வருகிறேன். 'சிவகாமியின் சபதம்' என்னும் திகட்டாத காவியத்தை மீண்டும் படிக்க ஆவலாக இருக்கிறேன்.

- என். சுவாமிநாதன், நெய்வேலி - 3

'சிவகாமியின் சபதம்' என்ற எழுத்தோவியத்துக்கு உயிரூட்டும் வண்ணம் ஓவியங்கள் அமையட்டும்.

- எஸ். ராதா, சென்னை - 24

அமரர் கல்கி எழுதிய

சிவகாமியின் சபதம்

அடுத்த இதழில் ஆரம்பம்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

